# நினைவாக..



அமரர் எஸ். மனோகரன்பிள்ளை அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாக



## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் : 05-02-1940

மறைவு : 10-09-2000

## அமரர். எஸ். மனோகரன்பிள்ளை (ஜே.பி.)

### (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் தரம் -1)

அம்பாறை மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி,
பொதுசன ஐக்கிய முன்னணி அமைப்பாளர்,
நாவிதன்வெளி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி,
கல்முனைத் தொகுதி இந்துக்கள் பேரவை செயலதிபர்,
கல்முனை மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்,
அம்பாறை மாவட்ட ஐடோ கராட்டி சங்கத் தலைவர்,
முன்னாள் நாவிதன்வெளி கிராம சபை விசேட ஆணையாளர்,
அன்னமலைப் பிரதேச இணக்கசபைத் தலைவர்,
பாண்டிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய ஆலோசகர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத் கீதை

அழிவற்ற பரம்பொருளே பிரம்மம் அதனியல்பை அறிதல்
ஆத்ம ஞானம் எனப்படும்; உயிர்தன்மையை விளைவிக்கும்
இயற்கை கர்மம் எனப்படுகிறது; அழிவுபடும் இவ்வுடம்பைப்
பற்றி எவன் கவலைப்படுகிறானோ அவன் அறிவிலி ஆவான்
இவ்வுலகில் உடம்பெடுத்தோரில் உயர்ந்தவன் பிறர் நலனுக்காக
உழைப்பவனே; அவனே என்னை முழுமையாகச் சேரவல்லான்
இதில் யாதொரு ஐயமுமில்லை. (பகவத் கீதை)

மனிதன் தொழில் செய்துதான் தீரவேண்டும்; எப்போதும் தூங்கிக்
கொண்டிருப்பவன் சோம்பேறியாவான் நீ தொழில் செய்யுமிடத்தே
இதில் நம்மனைவரும், தீமை வரும் என்று எதிர்பார்த்தலாகாது தொழில்
செய்யுமிடத்து வரும் கஷ்ட நஷ்டங்கட்கு மனமுடைந்து
வாளாவிருத்தலும் கூடாது நன்மைகளைச் செய்யும் போது கூட
ஓயாமல் துன்பம் உன்னைத் தொடர்ந்துகொண்டேயிருக்கும்
இது கலியுகத்தின் அவலம் உனக்குத் தொழில் செய்யத்தான் அதிகார
முன்டேதவிரப் பயன்களில் உனக்கு எவ்வித அதிகாரமுமில்லை.

(பகவத் கீதை)

மனிதனுக்குச் சொந்தமாக ஒரு செய்கையும் கிடையாது. செய்யும் திறமையையும் அவனுக்குக் கடவுள் ஏற்படுத்தவில்லை. கர்மப்பயனை அவன் எய்துவதுமில்லை. எல்லாம் இயற்கையின் படி இறைவனின் சித்தப்படி நடக்கிறது. இதை முற்றிலும் உணர்பவன் ஞானியாவான்.

"அஹிம்சாபரமோதர்ம" கொல்லாமையே முக்கிய தர்மம் என்பது இந்து மதத்தின் கொள்கைகளில் ஒன்றாகும். கொல்லாமையாகிய விரதத்தில் நில்லாதவன் செய்யும் எக்கருமமும், இலட்சியமும் என்னால் நிலை நிறுத்தப்படுவதில்லை என்பது மாத்திரமன்றி அவர் ஒருபோதும் என்னைச் சார்ந்தவர்களல்ல என்பதையும் உணர்க.

(பகவத் கீதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். எஸ். மனோகரன்பிள்ளை அவர்கள்

அமரர். சதாசிவம் - காளியம்மையின்,
சிரேஸ்ட புதல்வரும்,
காலஞ்சென்ற சின்னத்தம்பி, கண்மணி,
ஆகியோரின் அன்பு மருமகனும்,
சின்னத்தம்பி செல்லம்மாவின் அன்புக் கணவரும்,
நித்தியானந்தன்
(இரத்தினக்கல் பட்டை தீட்டுனர், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்-அம்பாறை)
சதானந்தன் (சிவா), விவேகானந்தன் (விவேக்),
விஜயலட்சுமி (இலிகிதர்-கல்முனை),
ஆகியோரின் அன்புத் தந்தையாரும்,
சோதிநாயகம்,
தவபாலரெட்ணம் (மாவட்ட மீன்பிடி நீர் வழங்கல் அதிகாரி - மட்டக்களப்பு),
ஜெயமணி, ஜெயராசா-ஜே.பி, சந்திரமணி(ஆசிரியை-அன்னமலை)
ஆகியோரின் அன்புச் சகோதரரும்,
கந்தசாமி (பக்தர்), நாராயணன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்),
காலஞ்சென்ற கணபதிபிள்ளை (கே.பி),
யோகசுந்தரம் (ஜே.பி, இலங்கை மின்சார சபை - கல்முனை),
சுவேத்திரா, பரமேஸ்வரி, ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
சத்தியநாதன் (ஆசிரியர்-கல்முனை),
செல்வநாதன்(ஜே.பி, உதவிக் கல்விப் பணிப்பாளர்-சம்மாந்துறை)
இந்துமதி, நிதர்சினி, தயாலினி,
ஆகியோரின் அன்பு மாமனாரும்,
சுமன், குகன், நேத்திரா, கஜன், நந்தகுமார், ஜெயதீபன், ஜெயரமணி,
ஆகியோரின் அன்பு பெரிய தந்தையும்,
வாணிநாயகி,ஜானகி,மோகன்(கிராம சேவை உத்தியோகத்தர்-ஆலயடிவேம்பு).
ஆகியோரின் அன்பு சித்தப்பாவும்,
பிரதிகா, குணரமனன், ரம்யா
ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவும் போதாதே

பொதுத் தொண்டுத் தோட்டத்தில் தியாக விதையைத்
துணிவாய் விதைத்தீரே!

உறுதியான உள்ளத்தில் கனிவான சொற்பொழிவில்
விளைபயிர் காத்தீரே!

கருகாது செழிப்புற என்னைக் கனிவுப்பயிர்
ஆக்கிய பெரியோரே!

சேய் நான் பேச்சில் சிறந்திருக்கும்
செழுமை அமைதி கண்ட,

திரு.மனோகரன்பிள்ளை அவர்கள் எனது தந்தை!
நான் இவர் இறக்கும் தருவாயில்,

இவரை விட்டு ஆறு வருடங்கள் பிரிந்ததை எண்ணி!
நித்தமும் அழுகின்றேன் விம்மி!

இந்நூலை அர்ப்பணித்தேன் தந்தைக்காக!
இதுவும் போதாதே அவர் நன்றிக்காக!

**மனோகரன்பிள்ளை நித்தியானந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர்
## எஸ்.மனோகரன்பிள்ளை [ஜே.பி]
(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் தரம் - 1)

வானத்தில் மின்னுகின்ற தாரகைகளுள்!
வெள்ளி நட்சத்திரமாய் பிரகாசித்த என் பிதா!
துல்லியமான வார்த்தைகளால் மக்களைக் கவர்வார் சதா!
இவரை இழந்து நித்தமும் தவிக்கின்றார் என் மாதா!
வீட்டுக்கொரு காவலன் என்பதை மறந்துவிட்டு!
ஊரிலொரு சேவகனாய் சேவைசெய்யப் புறப்பட்டு!
பல சேவைகளும் தன்னாலே புரியப்பட்டு!
நிற்கையிலே போனது இவருக்குக் கண்பட்டு!
இதனாலே பிரிந்த உயிர் இ டிவரைவிட்டு!

தந்தையின் பிரிவுத்துயர் தாங்காது!
அம்மா மனசுடைந்து போனது ஒருபுறம்!
அப்பாவின் இறப்பை இட்டு!
பிள்ளைகள் நாங்கள் குமுறி அழுவது மறுபுறம்!

அப்பாவின் ஓராண்டு பூர்த்தியாகும் வேளையிலே!
எங்கள் வீட்டுச்சாலையிலே!
மனைவி, மக்கள் அழுகையிலே!
சுற்றத்தார் ஆறுதல் சொல்கையிலே!
தேறுமா அப்பா எங்கள் மனம்!
என்றுமே நீங்காத உங்கள் எண்ணம்!
எப்போதும் இருப்பது திண்ணம்!
நீங்கள் எங்களை விட்டுப்போனது!
என்றுமே கனவாக உள்ளதப்பா!
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டானாலும்!
உங்கள் எண்ணம் நிறைந்திருப்பது திண்ணம்!
என் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்:

**மனைவி, மக்கள், உற்றார், உறவினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Birth of Divine Light
Ushers
The Waves of Love into your Hearts
Melts Away All Sorrow, Suspicion, and Pain
Bless you with All Accomplishments and Success

The divine Light is a place rest,
A place of Peace, Quiet & Harmony
Just as the sea is constantly there But it's waves move in and out
So too the Divine Light is constanly Settled and Deep
And the thoughts rise and fall like the waves

It works at the hearts and all and yet is unbound
Where the Divine Light works
Possessions, Circumstances, the Elements softly answers your needs
When you come Close, you feel a comfort that is born
Everything you want is there

The Divine Lights is a special Source of Love so Refreshing
It appeals to old and young a like
The waves in the human mind grows huge
Whipped up by the winds of confussion and Conflicts
The Divine Light approaches with an open heart, stretching out
It folds around your sorrow and takes it clean a way.

In Memory of the Spiritual Service carried out by the
Late
Mr. Manoharanpillai

The Brahma Kumaris Raja Yoga Centres,
Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தெய்வீக ஒளியின் ஜனனம்
உங்கள் இதயங்களில் அன்பு அலைகளை
மோதச்செய்து சகல துன்பங்கள், ஐயங்கள்
வேதனைகளைக் களைந்து
சகல இலட்சியப் பூர்த்திகளாலும் சித்திகளாலும்
நிறைவீர்களாக என வாழ்த்துகிறது.

தெய்வீக ஒளி ஓய்வின் உறைவிடம்
நல்லிணக்கம், சாந்தம், அமைதியின் உறைவிடம்
கடலானது மாறுதலின்றி ஓரிடத்தில் இருக்க அதன்
அலைகள் மட்டும் கடலிலும் கரையிலும்
மோதுவதைப்போல் தெய்வீக ஒளியும் என்றென்றும்
ஆழமானதாகவும் தீர்க்கமானதாகவும் இருக்க
எண்ணங்களோ அலைகளைப்போல் பொங்கி அடங்குகின்றன.

இதயங்கள் அனைத்தும் அதற்கு பணியிருக்கின்றபோதும்
எங்குமே அதற்கு பிணையில்லை
தெய்வீக ஒளிக்கு எங்கு பணியிருக்கின்றதோ
அங்கே உடமைகளும் சந்தர்ப்ப சூழ்நிலைகளும்
பஞ்ச பூதங்களும் உங்கள் தேவைக்கு மென்மையாக
பதில் கூறுகின்றன
நெருங்க நெருங்க உள்ளே ஓர் இதத்தை உணர்வீர்கள்
உங்களுக்கு வேண்டியதெல்லாம் அங்கேயிருக்கின்றது.

தெய்வீக ஒளி ஓர் விசேட அன்பின் மூலம்
அத்தனை புத்துணர்ச்சு
இளையோரும் முதியோரும் வேறுபாடின்றி உணர்வது
குழப்பங்களும் தகராறுகளும் என்ற காற்றினால்
உந்தப்பட்டு மனித மனங்களின் அலைகள் பொங்கி எழுகின்றன
தெய்வீக ஒளியின் கரங்கள் ஓர் திற்நத இதயத்துடன்
நீண்டு நெருங்கி உங்கள் துன்பத்தை சூழ்ந்து துடைத்து எறிகின்றது.

**அமரர் மனோகரன்பிள்ளை அவர்களால் நடாத்தப்பட்ட**

**ஆன்மீக சேவையின் நினைவாக.**

**பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்கள், ஸ்ரீலங்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பங்களில் துயர் துடைக்கும் மனிதன்

அன்னமலைதனை பிறப்பிடமாகக் கொண்டு இன்றைய நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் 1995 ஆம் ஆண்டு 7 ஆம் வகுப்பு வரை கல்வி கற்று உயர் கல்வியை வந்தாறுமுனை மகாவித்தியாலயத்தில் கற்று ஆசிரியர் பதவியைப் பெற்ற அமரர் சதாசிவம் மனோகரன்பிள்ளை பின்னர் கூட்டுறவு பரிசோதகர் பதவியில் இணைந்து கொண்டார்.

மும்மொழிகளிலும் கற்றுத் தேர்ந்த இவர்தான் பிறந்த மண்ணுக்காக அயலவரின் எதிர்ப்புக்களை தனித்து நின்று முகம் கொடுத்து மண் மணம் வீசச் செய்த பெருமைக்குரிய மண்ணின் மைந்தராவார். இதை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது.

எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் யாரிடமும் சமூக, சமய, கலாசார, அரசியல் ரீதியில் ஒதுக்கப்பட்டவர்களுக்காக துணிந்து தனித்து நின்று குரல் கொடுக்கும் அஞ்சா நெஞ்சமுடைய மானங் கொண்ட தமிழனாவார். இவரது வாழ்வின் இறுதி நொடிப்பொழுது இதற்கு சான்று பகிர்கின்றது.

''தூங்காமை கல்வி துணிவு உடைமை இம் மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவற்கு''

எனும் வள்ளுவர் வாக்கிற்கிணங்க வாழ்ந்த இவர் சென்ற இடங்களிளெல்லாம் பெருமையையும் வெற்றிக்கு மேல் வெற்றியை தன்னை ஈன்ற மண்ணிற்கும் வாழ்ந்த மண்ணிற்கும் பெற்றுக் கொடுத்த பெருமைக்குரியவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்டத்தில் மூலை முடுக்கெங்கும் தமிழருக்கென்று குரல் கொடுத்த அரசியல் ஞானம் கொண்ட மகானாவார்.

துன்பங்கள் தொடர்கின்ற வேளையில் அவரை ஈன்ற மண்ணின் மைந்தர்களும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களும் அமரர் சாதாசிவம் மனோகரன்பிள்ளை இருந்திருந்தால் விடிவு கிடைத்திருக்கும் என்று புலம்புவார் இன்றும் தொடர்கின்றது. அந்த வகையில் அவர் மண்ணில் மறைந்தாலும் மக்களின் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

''அட்டாலும் பால் சுவையிற் குன்றாதளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு
சுட்டாலும் வெண்மைதரும்''

எனும் மூதுரைக் கேற்ப தனக்கு வந்த துன்பங்கள் ஏராளம் ஏராளம் அத்துன்பங்களில் தான் ஒதுங்கி வீட்டில் இருந்திருக்கலாம்

''மக்கள் சேவையே மகேசன் சேவை''

எனக் கொண்டு சொல்லின் வேந்தனாகவும் சமூகத் தொண்டனாகவும், சீர்திருத்த வாதியாகவும் மக்களுடன் மக்களுக்காகவே வாழ்ந்தவராவர். இவர் பிரசன்னமாகாத நிகழ்வுகள் இல்லை யென்றே கூறலாம்.

அன்னமலையில் உள்ள ஸ்ரீ சித்தி வினாயகர் ஆலயம் ஸ்ரீ வடபத்திர காளி அம்பாள் ஆலயம், ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றில் தலைமைப் பதவிகளை வகித்து அவ்வாலயங்களைக் கட்டிக்காத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சேவையில் நாவிதன்வெளி கிராம சபையின் விசேட ஆணையாளர் சம்மாந்துறை - நாவிதன்வெளிப் பிரதேச இணக்க சபையின் தவிசாளர்.

கிராமமுன்னேற்றச் சங்கங்களின் ஒன்றியத்தலைவர், அம்பாறை மாவட்டதமிழ் பகுதி பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் என சமூகத்தில் 40 இற்கு மேற்பட்ட பதவிகளை வகித்து தமிழ் மக்களுக்குச் சேவையாற்றியுள்ளார்.

இறுதியில் நாவிதன்வெளிப் பிரதேச செயலகம் பிரிவதற்கு வழியமைத்த இவர் அப்பிரதேசத்துக்கென ப. நோ. கூட்டுறவுச் சங்கம் அமையவும் அத்திவாரமிட்டுள்ளார்.

''கொட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே - சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்''

என்பதற்கு ஏற்ப அன்னமலைப் பிரதேசத்துக்கென்று மரண விசாரணைப்பிரிவை ஏற்படுத்தி மரண விசாரணை அதிகாரியாகவும் சமாதான நீதவானாகவும் தன் இறுதி வாழ்வை எய்தினார்.

அன்னாரின் ஆத்மா ''வானுறையும் தெய்வத்துள்'' இருக்க பிரார்த்திக்கின்றேன்.

ஓம் நமசிவாய!!! ஓம் நமசிவாய!!! ஓம் நமசிவாய!!! ஓம் சாந்தீ ஓம் சாந்தீ ஓம் சாந்தீ

**ஐ. பத்மநாதன்** (தலைவர்)
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
அன்னமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாச் சுடர்

கடந்த 2000.09.10ம் திகதி இறைபதம் சேர்ந்த மறையாச்சுடர் அண்ணா மனோகரன்பிள்ளை அவர்களுடன் நன்கு நெருங்கி உற்ற சகோதரன்போல் பழகியதில் நானும் ஒருவன். அவரின் தம்பியும் எனது நண்பனுமான திரு. எஸ். தவபாலரெட்ணம் அவர்களுடன் சேர்ந்து அவர்களது வீட்டில் ஒன்றாகப் பழகும் காலத்தில் என்மீதும் ஏனைய நண்பர்கள் மீதும் அண்ணா காட்டிய அன்பும், பாசமும், உபசரிப்பும், என்றும் நினைவு கூறக்கூடியதாக இருக்கின்றது.

"புனரபி ஜனனம் புனரபி மரணம்..... " என்ற சமஸ்கிருத சுலோகத்தில் பிறப்பு, இறப்பு பற்றிய தத்துவம் கூறப்பட்டுள்ளது. இதே தத்துவம் பகவத்கீதை' யிலும் திருமூலர், திருவள்ளுவர் நமது சமய குரவர்கள் நால்வர் போன்றவர்களும் இதே கருத்தை வேறுவகைகளில் கூறிச் சென்றுள்ளார்கள். இருப்பினும் மரணத்தை நேருக்கு நேர் சந்திக்கும் போது, நாம் படித்த தத்துவங்கள் எமைவிட்டு விலகி உணர்ச்சிகளே மேலோங்கி நிற்கின்றன. ஆனால் தன்னைப் பற்றிச் சரியாக அறிந்தவனும், இறைபக்தியுடன் வாழ்பவனும் மரணத்தைக் கண்டு பயந்ததுமில்லை உணர்ச்சிவயப்பட்டதுமில்லை. இதற்கு எடுத்துக் காட்டாக மறைந்தும் மறையாச்சுடராக விளங்கும் திரு. சதாசிவம் மனோகரன்பிள்ளை அவர்களின் இறுதிவாழ்வு அமைந்திருந்தது.

அன்னாரின் ஆத்மா இறையடி சேர்ந்து இரண்டறக் கலந்த ஓராண்டு நினைவு கூறும் இந்நாளில் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்காக எமது குல தெய்வமான ஸ்ரீ முத்துமாரியம்மனை இறைஞ்சி நிற்கின்றோம்.

இவ்வண்ணம்.
**இரா. இராஜேஸ்வருள்** (தலைவர்)
ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பரிபாலன சபை,
நாவிதன்வெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத்தின் தமிழ் முத்து அமரர். எஸ். மனோகரன்பிள்ளை

யதார்த்த வாதி, பொதுசன விரோதி என வழக்கமாகக் கூறப்பட்டபோதும் அமரர். சதாசிவம் மனோகரன்பிள்ளை அவர்கள் யதார்த்த வாதியாக இருந்துள்ளார். அனால் அவர் பொதுசன விரோதியாக ஒருபொழுதும் இருந்ததில்லை. அன்னார் இறைபதம் எய்தி முதல் வருட நினைவை நினைவு கூறும் இவ்வேளை அவர் நினைவுகளை மீட்டுப்பார்பதில் பெருமையடைகின்றேன்.

கடந்த இரு தாசப்த காலங்களுக்கு முற்பட்ட பகுதியில் நான் சிறுவனாக இருக்கும் போது ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலய சபைத் தலைவராக இருந்து அரும்பெரும் சேவையாற்றியவர். அன்னார் வடபத்திர காளியம்மன் ஆலயத்தின் தலைவராக இருந்தபோது கோயில்களில் தெய்வச் சிலைகளை வைத்திருப்பதில்லை. காரணம் கள்வர்கள் சிலையை கொள்ளை கொள்ளும் காரணத்தினால் திருவிழா காலத்தின் போது மட்டும் சிலையை ஸ்ரீ வடபத்திர காளியம்மன் கோயிலில் வைத்துக்கொண்டு திருவிழா நடைபெறும். திருவிழா நிறைவுபெற்றதன் பின்னர் அன்னார் அச்சிலையை அப்போதைய காலகட்டத்தில் பாதுகாப்பு பிரதேசமான கல்முனை பாண்டிருப்பு ஸ்ரீ அரசடி அம்மன் ஆலயத்திற்கு எடுத்துக்கொண்டு பாதுகாப்பாக வைப்பார். பின் அடுத்த வருடம் திருவிழா காலத்தின் போது மட்டும் பின் அச்சிலையை திருவிழாக் காலத்தின் எங்கள் வட பத்திர காளியம்மன் ஆலயத்திற்கு திருவிழா காலத்தில் கொண்டுவருவார் அன்னாரின் பொறுப்பிலேயே. இப்படியான ஒரு செயல் வீரர் இல்லையென்று நினைக்கும் போது மிகவும் வேதைனையைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாமரர் வரை பணிவுடன் பணியாற்றி பண்பினால் உயர்ந்து நின்ற பண்பாளன், அமரர். சதாசிவம் மனோகரன் பிள்ளை ஆவார். அன்னார் மண்ணைவிட்டகன்று ஒருவருடம் பூர்த்தியடைந்து விட்டது. ஒருவருடம் என்ன ஓராயிரம் வருடங்கள் சென்றாலும் எம்மைக் கவர்ந்த அவரது மனிதநேயம் அவர் சார்ந்த சமூகத்தின் பால் கொண்ட பற்றும் அவரது செயல் திறமை அவர் பற்றிய குறிக்கோளை வெற்றிகொள்ள முயற்சிக்கும் அவர் நெஞ்சுரம் இவை அனைத்தும் காலத்தால் அளியாத அவர் சாதனைகள்.

அன்னாரின் பிரிவால் துயருறுகின்ற குடும்பத்தினரால் செய்யப்படும் அவரை நோக்கிய பிரார்த்தனையில் என்னையும் நினைத்துக்கொள்கிறேன்.

***சி.மணிவண்ணன்,*** (தலைவர்)
ஸ்ரீ வடபத்திர காளியம்மன் ஆலயம்,
அன்னமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். எஸ். மனோகரன்பிள்ளை
# மறக்கமுடியாத மாமனிதர்

கல்வி அமைச்சின் செயலாளராக நான் கடமையாற்றிய காலத்தில் அமரர். எஸ்.மனோகரன்பிள்ளையோடு உத்தியோக ரீதியான தொடர்பு எனக்கு ஏற்பட்டது. கல்முனையில் விசேடமாக தமிழ் பகுதிகளில் இயங்குகின்ற தமிழ்ப் பாடசாலைகளின் குறைபாடுகள் பற்றியும் அவற்றுக்கு நிவாரணம்தேடும் முயற்சியிலும் அவர் பல முறை என்னோடு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டார். இப்பிரச்சினைகள் பற்றி கல்முனை கல்விப் பணிமனை மட்டத்திலும் அம்பாறை கச்சேரி மட்டத்திலும். மத்திய கல்வி அமைச்சு மட்டத்திலும் தொடர்புகொண்டு அவற்றுக்கு தீர்வுகாண அவர் முனைந்ததினை நான் அறிவேன்.

இதற்கு மேலாக மாகாண சபைக்கு என்னைச் சந்திக்க வருகின்ற வேளைகளில் எல்லாம் ஏனைய செயலாளர்களையும் திணைக்களத் தலைவர்களையும் சந்தித்து அவர்கள் சார் துறை சம்பந்தப்பட்ட தனது பகுதி பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடியதாக அமரர் அவர்கள் என்னுடன் கதைத்தது இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறத் தகுந்ததாகும். அவரை இழந்துள்ள அவரது குடும்பத்தினருக்கு எனது ஆறுதல் வார்த்தைகள்.

**சுந்தரம் டிவகலாலா, BA (Cey), (HONS), SLAS**
**முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்கென ஓர் இடம் பிடித்தவர்

## அமரர். திரு. எஸ். மனோகரன்பிள்ளை

அமரர்.எஸ். சதாசிவம் மனோகரன்பிள்ளை தனக்கென ஒரு இடத்தை இப்பகுதி மக்களின் இதயங்களில் பெற்றிருந்ததுடன் ஆக்கபூர்வமான சேவைகளில் தம்மை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்ட ஒருவர், ஆசிரியராகவும் பின்னர் கூட்டுறவுப் பகுதியில் பல காலம் சேவை செய்து அங்கு பலதரப்பட்ட பதவிகளை வகித்தவர். சமூக சேவையிலும் சமயசேவையிலும், இம்மாவட்டத்தின் புனர்நிர்மான, அபிவிருத்திச் சேவையிலும் முழுநேர ஈடுபாட்டுடன் பணியாற்றிய பெருமையையும் பெற்றிருந்தார். இவர் பல சமூக நலத்திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி நிவாரணப்பணிகளிலும், ஆன்மீகச் தொழில் வழங்கல் கமத்தொழில் அபிவிருத்திப் பணிகளிலும் சுறுசுறுப்புடன் செயல்பட்டமையினை இங்கு குறிப்பிட்டாகவேண்டும். அறநெறிப் பாடசாலைகளை உருவாக்கும் துறையில் பாடசாலைகளை அமைத்தல் மாணவர்களைச் சேர்த்தல், பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல் ஆன்மீக இலக்கிய விழாக்களை ஒழுங்குசெய்தல் புத்தக வெளியீடுகள் போன்ற துறைகளில் அவரது நற்பணிகள் பாராட்டத்தக்காத அமைந்தன. முழு நேர நலன்புரி முயற்சிகளில் ஈடுபட்ட திரு. மனோகரன்பிள்ளை அவர்களுக்கு அரசியல் நாட்டமும் இருந்தது. கல்முனை மாவட்ட தமிழ் பிரிவின் பொதுசன ஐக்கிய முன்னணியின் அமைப்பாளராக கடமையாற்றியதுடன் ஒருதடவை பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டுள்ளார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் உரையாடும் ஆற்றலும் அவருக்கு இருந்தது.

கிராமமொன்றில் பிறந்து கிராம வாழ்க்கையிலே பழகி வளர்ந்த இவருக்கு கிராமங்களின் அபிவிருத்தியிலும் கிராம மக்களின் அபிவிருத்தியிலும், கிராம மக்களின் முன்னேற்றத்திலும் இயல்பாகவே ஈடுபாடு இருந்தது. மனித நேயமிக்கவராக, துடிப்பான பிரசையாக, சேவையாளனாக வாழ்ந்துவிட்ட இவர் இளைய பரம்பரையினருக்கு ஒரு வழிகாட்டியாக, முன்னோடியாக அமைந்திருந்தார். வாழ்க அவரது நாமம்.

**க. தியாகராசா,**
பிராந்திய ஆணையாளர்.
(அம்பாறை/ மட்டக்களப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையாத மனோகரன்பிள்ளை

உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் நியதி, மண்ணில் பிறந்துவிட்டால் என்றோ ஒரு தினத்தில் இறந்தே ஆகவேண்டும்.

மண்ணில் பிறந்து இருந்தாலும் என்றும் மக்கள் மனங்களில் வாழ்பவனே மனிதன்.

இது ஆயிரத்தில் ஒருவருக்கே நிகழ்வதுண்டு

எல்லோருக்கும் நிகழ்வதில்லை

அந்த ஆயிரத்தில் ஒருவராக மறைந்தும் மறையாமல்

வாழ்பவர்தான் நண்பர் மனோகரன்பிள்ளை.

வெள்ளை ஆடை அணிவது போலவே வெள்ளை மனம் கொண்டவர்.

40 இல் பிறந்து மண்ணில் 60 வருடங்கள்

வாழ்ந்து சமூக சேவையில் - சமய சேவையில் வேகமாகச் செயற்பட்டவர்.

அதுபோலவே வேகமாக மறைந்தும் விட்டார்.

அதுதான் விதி என்கின்றோம்.

ஆனாலும் அழுகின்றோம். ஆறுதலுக்காக!

மாண்டவர் மீண்டும் வரவில்லை.

மீண்டும் மீண்டும் அழுகின்றோம். மனச்சாந்திக்காக!

நண்பரின் ஆத்மா சாந்திக்காக நாமும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**பொன். செல்வநாயகம்,**

கிழக்கு மாகாணப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் இழப்பு கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

அம்பாறை மாவட்டத்தின் கிழக்கு வானில் எழுந்த சூரியனை முற்றாக உதிக்கவிடாமல் உதறித்தள்ளிய காலநிலையை என்னால் மறக்கமுடியவில்லை. திரு. அமரர். எஸ்.மனோகரன் பிள்ளை அவர்கள் செய்த பற்பல தொண்டுகள் இருப்பினும் நான் ஒரு வைத்தியர் என்ற வகையில் எனது துறையோடு சம்பந்தப்பட்ட பல தொண்டுகளும் ஆற்றியுள்ளார் என்பதில் நான் மிகவும் பெருமிதம் அடைகிறேன்.

நான் 1998ம் ஆண்டு தொடக்கம் 2000ம் ஆண்டு காலப் பகுதியில் கல்முனை ஆதார வைத்தியாசாலையில் மாவட்ட மருத்துவ அதிகாரியாக வைத்தியசாலைக்கு பல காரியங்கள் செய்துகொண்டிருக்கும் போது அமரர்.திரு. எஸ். மனோகரன் பிள்ளை அவர்களின் தொடர்பு எனக்கு மிகவும் தேவைப்பட்டது. அவரை நான் அணுகி அவரிடம் பல சேவைகளை எதிர்பார்த்தேன். அப்போதைய காலகட்டத்தில் இவரை விட வேறுஎவரும் எனக்கு தென்படவில்லை என்பது உறுதி.

எனது சேவைக்காலத்தின் போது இந்த வைத்தியசாலை இடமாறும் நிலை ஏற்பட்டது. அப்போது அமரர். திரு. எஸ். மனோகரன்பிள்ளையை அணுகி அவரிடத்திலிருந்து பல ஆலோசனைகளைப் பெற்றேன். அவர் கூறினார். வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவைக்கூட்டி அதன் மூலம் எமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆயத்தப்பட்டோம். எமது வைத்தியசாலைக்கு ஏற்பட்ட பிரச்சினையை அபிவிருத்தி உறுப்பினராக இருந்துகொண்டு தீர்த்துவைத்தார்.

பின்னர் அமரர்.திரு.எஸ்.மனோகரன்பிள்ளை உயிருடன் இருக்கும் போது புதிதாக ஒரு அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களைத் தெரியும் கூட்டம் நடைபெற்ற போது அன்று கூறினார், அபிவிருத்திக் குழுவினருக்கு நிறைய உறுப்பினர்கள் தேவையில்லை. அநேக உறுப்பினர்களைத் தெரிவு செய்தால் உறுப்பினர்களை ஒன்றாகக் கூட்டி ஏதாவது ஒரு முடிவெடுக்கும் விடயம் கடினமாகிவிடும். ஆகையால் குறைந்தளவு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வோம் என்றுகூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் எமது சேவைக்காலப்பகுதியில் எனக்கு அபிவிருத்தி குழு உறுப்பினர் அனைவரையும் கூட்டி சில முடிவுகளை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அன்றைய தினத்தில் அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் யாரும் ஒன்றுகூடவில்லை, அன்றைய தினம் அன்று கூடிய அபிவிருத்தி சபை உறுப்பினர்களிடம் மனோகரன்பிள்ளை அன்று உயிருடன் கூறிய இந்த வசனத்தை அன்று கூடிய அபிவிருத்திச் சபை உறுப்பினரிடம் கூறினேன், அன்றைய தினம் எனக்கு மிகவும் கவலையும் தந்தது.

மேலும் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு எழுது வினைஞர் பதவி வெற்றிடம் காணப்படுகிறது. இந்த வெற்றிடத்தின் காரணத்தினால் வேலைகள் உரிய நேரத்தில் செய்து முடிக்காமல் தேங்கிக் கிடக்கின்றன. இரண்டு எழுது வினைஞர்களை தருவதற்கு முயற்சிசெய்யுமாறு வைத்தியசாலையில் நேரடியாக சந்திக்கும்போது கூறினேன்.

அதன் பின்னர் திருகோணமலை இயந்திர பொறியியல் அமைச்சில் கடமையாற்றிக் கொண்டிருந்த தனது சொந்த வளர்ப்பு மகளான க. விஜயலட்சுமியை வடக்கு கிழக்கு சுகாதார அமைச்சின் துணையுடன் கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு எழுதுவினைஞர் வெற்றிடத்திற்கு இடமாற்றித்தந்தார். அன்னாரின் இச்செயலை அவரின் மகளைக் காணும்போது சிறிது மௌனம் சாதிக்க வைக்கிறது.

அன்னாரின் இழப்பு கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். இவர் உயிருடன் இருந்திருந்தால் இவ் வைத்தியசாலைக்கு இன்னும் பல சேவைகளைப் ஆற்றிருப்பார் என்பது திண்ணம். அன்னாரின் சேவையினைப் பின்தொடர்ந்து அவரின் பிள்ளைகள் இதனை மேற்கொண்டால் அவருக்கு பெருமைதரும் விடயமாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாயிராம்!

**திரு. கலாநிதி. கே.பரமானந்தம்** MBBS (Cey), DFM (Cey)
பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். ச. மனோகரன்பிள்ளை அதிக சேவை செய்துள்ளார்

காலஞ்சென்ற திரு. மனோகரன்பிள்ளை அவர்களின் ஓராண்டு நினைவுமலருக்கு எனது குறிப்பினையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.மனோகரன்பிள்ளை அவர்களுடன் எனக்கு 10 வருடங்களுக்கும் மேலாகத் தொடர்புகள் இருந்தன. எப்போதும் சமூக சேவை செய்யவேண்டும், தான் சார்ந்த இனத்திற்கும், பிரதேசத்திற்கும் குறிப்பாகவும் இலங்கைத் திருநாட்டிற்கும் பொதுவாகவும் தனது சேவை கிடைக்கப்பெறவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டு உழைத்தவர். இந்த நோக்கத்தை அடைவதற்காக தனக்கு சரியென கண்ட வழியை அவர் தெரிவு செய்தார். அதன் மூலம் மக்களுக்கு இயன்றவரை சேவை செய்தார்.

நான் கல்முனை தமிழ் பிரிவில் பதில் கடமை ஆற்றிய காலங்களில் அடிக்கடி என்னோடு தொடர்புகொண்டு அபிவிருத்தி வேலைகள் பலவற்றின் தேவைகளை எடுத்துரைப்பார். தேசிய வீடமைப்பு அதிகார சபையினூடாக பாண்டிருப்பு கிராமத்தில் முன்னின்று உழைத்தார். அதன் அங்குராப் பண வைபவத்தில் அவருடன் கலந்து கொண்டது இன்றும் பசுமையான நினைவுகளாகவுள்ளது.

கூட்டுறவுத் திணைக்களத்தில் அவர் கடமையாற்றிய போது அவருடன் நான் முரண்பட்டதும் உண்டு, அது கடமையில் சகஜம். ஆனால் அவரின் பொது வேலைகளுக்கு எப்போதும் என்னாலான உதவிகளை செய்து வந்திருக்கின்றேன்.

காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப் அவர்களுடனும் அவர் நல்ல உறவுகளை கொண்டிருந்தார். அதன் மூலம் தமிழ் பிரதேச அபிவிருத்திக்கு பல திட்டங்களை தீட்டியிருந்தவர். கிராம சபைகளில் விசேட ஆணையாளராகவும் சிறப்பாக சேவையாற்றியவர் அவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்கள் பிறக்கின்றார்கள். ஏனோ தானோ என்று வாழ்கின்றார்கள். ஈற்றில் இறக்கின்றார்கள். இதனால் இந்த பூமிக்கு, நாட்டுக்கு, மக்களுக்கு என்ன நன்மை? அவருக்குத்தான் என்ன நன்மை? மனிதனாக பிறந்தவன் மனிதனுக்கு சேவை செய்ய வேண்டும். அது அவனது தலையாய கடமை.

திரு. மனோகரன்பிள்ளை அவர்கள் தன்னாலான சேவைகளை மக்களுக்கு செய்துள்ளார். சேவை செய்யும் போது விமர்சனங்களுக்கு உள்ளாவது இயல்பானது. கூறுவார்கள் அதிக வேலை அதிக விமர்சனம், குறைந்த வேலை குறைந்த விமர்சனம் என்று திரு. மனோகரன்பிள்ளையவர்கள் அதிகம் விமர்சிக்கப்பட்டார். அதிலிருந்து அவர் அதிக சேவை செய்துள்ளார் என்று நாங்கள் நம்பலாம்.
அவர் ஆத்மா சாந்தி அடைவதாக

**செ. இராமகிருஷ்ணன், B.A. (Cey), SLAS**
பிரதேச செயலாளர்,
காரைதீவு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நலத்தொண்டன்

சமூகப்பற்று - இனவுணர்வு - இலட்சியநோக்கு இவைகளோடு நல்ல மனோவலிமையினையும் கொண்டு வாழந்து, தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்ட மனிதர்தான் திரு. எஸ். மனோகரன் பிள்ளை அவர்கள். ஏனையவர்களுக்கு முன்மாதிரியாகவும், சமூகத்திற்கு ஒளிவிளக்காகவும் வாழ்ந்த அன்னாரது நினைவுகள் எமக்கு உற்சாகம் அளிப்பனவாகவும், வழிகாட்டுபனவாகவும் உள்ளன. எனவே அவர் வாழ்ந்த வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்பதும் சொன்னவற்றை, செய்தவற்றை எண்ணிப்பார்ப்பதும் இன்றைய காலகட்டத்தில் பொருத்தமானதாகும்.

1940ல் அன்னமலையில் பிறந்த அவர் ஆசிரியர், கூட்டுறவுப் பரிசோதகர், கூட்டுறவுப் பயிற்சி விரிவுரையாளர் எனப்பல அரச பதவிகள் வகித்திருந்த போதிலும், இம்மாவட்டத்தின் பல்வேறுபட்ட சமூகநல அமைப்புக்களில் இணைந்து தாம்சார்ந்த மக்களுக்குச் சேவையாற்றுவதையே பெருமையாகக் கொண்டிருந்தார். குறிப்பாக பொ.ஐ.முன்னணியின் அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பிரிவு அமைப்பாளராக, கல்முனைத் தொகுதி இந்துக்கள் பேரவையின் செயலதிபராக, மனித உரிமைகள் பணிக்குழு உறுப்பினராக, அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்க உபதலைவராக இருந்து இம்மாவட்டத் தமிழ் மக்களுக்குச் செய்த சேவைகள் என்றும் மறப்பதற்கில்லை.

1994ல் நான் இ.நி. சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிக்காகப் பயணம் செய்தபோது, அவ்வேளை அவர் சென்ற வாகனத்தில் என்னை இன்முகத்துடன் கொழும்புக்கு அழைத்துச் சென்றார். இருவரும் சென்றபோது, பாதுகாப்புப் படையினர் இறங்கிவருமாறு கூறிய இடங்களில் தனது பணியையும், எனது பதவியினையும் தெரிவித்து, படையினருடன் வாதாடி வாகனத்தை விட்டு இறங்காது சென்றார். எங்கு சென்றாலும் துணிந்த சுபாவமுடையவர். தமிழன் என்ற பெருமையினை நிலைநாட்டக் கூடியவர். அவரது துணிவை என்னால் இன்னும் மறக்கமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியின் பின்னர் தம்பலகாமம் பிரதேச செயலாளராக நியமிக்கப் பட்டேன. ஆயினும் நாவிதன்வெளி பிரதேசத்தில் பிரதேச செயலகம் திறக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு இப்பிரதேசத்திற்கு என்னை வருமாறு அழைத்தார். அவரது அழைப்பு வெற்றி பெற்றது மாத்திரமல்ல, அச்சேவை தொடர்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பிரிவில் கஸ்டப்பட்ட குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கும், ஏனைய பொது வசதிகளுக்கும் அரசியல் பிரமுகர்களுடன் தொடர்பு கொண்டு, பல பொதுப் பணிகளைச் செய்துள்ளார். இப்பிரிவில் நிருவாக ரீதியிலான பிரச்சினைகள் எழுந்த சந்தர்ப்பங்களில் எல்லாம் அவைகளுக்குத் தீர்வுகாண உதவினார்.

நாவிதன்வெளி பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் சகல ஒத்துழைப்பையும் நல்கி ஊன்று கோலாகச் செயற்பட்டார். என்றாலும் நோக்கம் நிறைவேறும் போது, அன்னார் எம்மை விட்டுப் பிரிந்திருந்தமை கவலைதரும் விடயமே!

அமரர் எஸ். மனோகரன்பிள்ளை அவர்கள் பாண்டிருப்பில் திருமண வாழ்க்கையில் ஈடுபட்டாராயினும், தான் பிறந்த அன்னமலை கிராமத்தின் வளர்ச்சியே அவரது எண்ண அலைகளுள் ஒன்றாக இருந்தது. இதனை எடுத்துக்காட்டுவது போல, நாவிதன்வெளி பிரதேசத்திற்கு தொலைத் தொடர்பை அறிமுகப்படுத்தியவரும் இவரே.

பேச்சிலும், மூச்சிலும் இம்மாவட்டத்தினதும், இப்பிரதேசத்தினதும் தமிழ் மக்களின் அரசியல் கட்டமைப்பு, பொருளாதார மேம்பாடு பற்றிய சிந்தனைகளே மேலோங்கிக் காணப்பட்டன. தன்நலம் கருதாமல் சமூகத்திற்காகத் தொண்டாற்றிய அன்னாரின் உன்னத சேவையின் கீழ் பயன்பெற்றோர் பலர் என்பதில் ஐயமில்லை. அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**எம். கோபாலரெத்தினம், B.A (Cey), SLAS.**
பிரதேச செயலாளர்,
நாவிதன்வெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, සම්මාන්තුරේ.
பிரதேச செயலகம், சம்மாந்துறை.
DIVISIONAL SECRETARIAT, SAMMANTHURAI.

| | | | |
|---|---|---|---|
| මගේ අංකය எனது இல My No | ඔබේ අංකය உங்கள் இல Your No | දුරකථනය தொலைபேசி Telephone 067 - 60233 | දිනය திகதி Date 23.08.2001 |

மறைந்த அமரர். திரு. மனோகரன்பிள்ளை மிகவும் தனது பெயருக்குரித்துடைய பிள்ளை மனம் உள்ளவராகவும் எப்போதும் இன்முகத்துடன் எவரையும் எச்சந்தர்ப்பத்திலும் மனங்களைக் கவரும் ஆற்றல் படைத்தவராகவும் எம்மத்தியில் வாழ்ந்து மறைந்துவிட்டார். அன்னார் கிழக்கு மண்ணின் சம்மாந்துறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அன்னமலைப் பிரதேசத்தில் பிறந்து கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி, வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயின்று கூட்டுறவுத் திணைக்களத்தில் மிகவும் திறன்பட கடமையாற்றினார்.

அன்னார் தனது அரச சேவையுடன் நின்றுவிடாது பொது சேவையையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு தாம் வாழும் சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்வதற்காக அல்லும்பகலும் துடியாய் துடித்துக்கொண்டிருந்தார். அவரது சேவையில் மிகவும் மெச்சத்தக்க சேவையாக சம்மாந்துறைப் பிரதேச சபையின் வடக்குத் திசையில் அமைந்துள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்காக நாவிதன்வெளி பிரதேச செயலகத்தை உருவாக்கியதாகும். இதன் மூலம் புவியியல் ரீதியாக தூரப்படுத்தப்பட்ட தமிழ் முஸ்லிம் மக்களுக்கு தமது தேவைகளை தமது காலடியிலேயே நிறைவேற்றுவதற்கு வழிவகுத்துக் கொடுத்த பெருமை பிரதானமாக அமரர் மனோகரன்பிள்ளையையே சாரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மாத்திரமல்லாமல் இன மோதல்களினால் சிக்குண்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தில் இனங்களுக்கிடையே சவ்யென்யத்தையும் பரஸ்பர நல்லுறவையும் ஏற்படுத்துவதற்கு தனது இறுதிக் காலங்களில் வேகமாக உழைத்தார். இவ்வுழைப்பின் ஒரு கட்டமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களுடன் இணைந்து செயல்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான ஒரு பெருமகனை இழந்து தவிக்கின்ற மக்களுடன் நானும் எனது பிரதேச செயலக மக்களும் துயங்களில் பங்கேற்கின்றோம்.

எம்.ஐ. அமீர்,
பிரதேச செயலகம்,
சம்மாந்துறை

M.I.AMEER
DIVISIONAL SECRETARY
DIVISIONAL SECRETARIAT
SAMMANTHURAI





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Telephone
Office 067 - 29236
Residence 067 - 29039

Telephone
Fax 067 - 29360
Accountant 067 - 29388

ප්‍රාදේශීය මහලේකම් කාර්යාලය - කල්මුනේ
**பிரதேச செயலகம் - கல்முனை**
**DIVISIONAL SECRETARIAT - KALMUNAI**

Your No.

My No

Date 22.08.2001.

அமரர். சதாசிவம் மனோகரன்பிள்ளை அவர்கள் ஆசிரியராக இருந்தார். அப்போது எனக்கு அவரது அறிமுகம் கிடைக்கவில்லை. பின்னர் சில காலங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தில் பணிபுரிந்தார். அப்போதும் எனக்கு அவரது அறிமுகம் கிடைக்கவில்லை.

பொது மகன் ஒருவரது பிரச்சினை சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக எனது அலுவலகத்திற்கு வந்த ஒரு நாளிலேயே அவரது அறிமுகம் எனக்குக் கிடைத்தது.

ஒரு கைகுலுக்கலுடன் மிகவும் அழகாகக் கூறினார் "....எனக்கு தெரியும் தானே .........நான் தான் மனோகரன்பிள்ளை.........."

பத்திரிகைகள் வாயிலாக பல்வேறு தரப்பட்ட அறிக்கைகள் மூலம் அவரது பெயர் என் மனதில் பதிந்து இருந்தது. அதன் பின்னர் அவர் எமது அலுவலகத்தின் முக்கிய பிரஜைகளில் ஒருவராகிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தின் அரசியல் நடவடிக்கைகளில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. அதனால் தனது வாழ்நாளின் பெரும் பகுதியை அரசியலிலும் இப்பிரதேச மக்களின் அன்றாட நடவடிக்கைகளிலும் செலவழித்து வந்தார்.

முரண்பாடுகள் நிறைந்த இன்றைய அரசியல் சூழ்நிலையில் தனி ஒரு மனிதன் அரசியல் செய்வது என்பது மிகவும் ஒரு கஸ்டமான விடயம் ஆகும். சமூகத்தின் மீது ஒரு அர்ப்பணிப்பும் இல்லாமல் அவ்வாறு செய்ய முடியாது.

பல சந்தர்ப்பங்களில் அவரால் உதிர்த்து விடப்பட்ட வார்த்தைப் பிரயோகங்கள் நினைவுச் சுவடுகளாக இன்னும் எனது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.



ஏ.எல்.எம்.பள்ஸ்,
பிரதேச செயலாளர்,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அறிந்த அமரர். எஸ்.மகோரன்பிள்ளை அவர்கள்

அமரர். எஸ். மகோரன்பிள்ளை அவர்கள் கிழக்கு மாகாணத்திலே நாவிதன்வெளியை பிறப்பிடமாகக் கொண்டவர்.

"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"

என்ற வள்ளுவர் வாக்குக்கமைவாக பெருமையுடன் வாழ்ந்தவர். அன்னார் "ஈதல் இசைபட வாழ்தல்" முறையைக் கொண்டவர்.

1993/94ம் ஆண்டுகளில் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலாளராக கடமை புரிந்த போது, அப்பிரிவின் வளர்ச்சிக்காக என்னோடு பலவகைகளிலும் கைக்கரம் தந்துதவியதோடு, எனது குடும்ப நண்பராகவும் விளங்கினார்.

அன்னார். ஆரம்பத்தில் ஆசிரியராகக் கடமைபுரிந்து, கூட்டுறவுச் சங்க பரிசோதகராக உயர்வுபெற்று, கூட்டுறவு கலாசாலை விரிவுரையாளராகக் கடமை புரிந்தது மட்டுமல்லாது, அம்பாறை மாவட்ட கராத்தே சங்கத் தலைவராகவும், இந்துக்கள பேரவை செயலதிபராகவும், இன்னும் பல அரசாங்க சார்பற்றி நிறுவனங்களின் உறுப்பினராகவும் தனது அந்திமக் காலத்தில் நாவிதன்வெளி திடீர் மரண விசாரணை அதிகாரியாகவும், மக்கள் தொண்டனாகச் சேவை புரிந்தவர். உழைப்பால் உயர்ந்தவர். அவர் வழியில் அவரது குடும்பமும் பணிகள் தொடரவேண்டுமென விழைகின்றேன். அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

'ஓம் சாந்தி'

**எஸ். அருள்ராசா, B.A. (Cey) SLAS.**
பிரதேச செயலாளர்,
ஆலையடிவேம்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மக்களுக்குப் நல்லபல தொண்டுகளைச் செய்து இறைவனடி சேர்ந்த திரு. எஸ். மனோகரன்பிள்ளை அவர்களை தமிழ் மக்கள் இலேசில் மறந்து விட முடியாது.

திரு. எஸ். மனோகரன்பிள்ளை அவர்களை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நான் நன்கு அறிவேன். நான் கல்விப் பணிப்பாளராக இருக்கின்ற பொழுது சம்மாந்துறை - அன்னமலை நாவிதன்வெளி ஏனைய தமிழ்ப் பிரதேச கல்வி அபிவிருத்தி தொடர்பாக அடிக்கடி வந்து என்னிடம் வந்து அப்பிரச்சினைகளையிட்டு ஆராய்கின்றபோது தான் அவரது நல்ல சிந்தனைகளையும் சமூகத்தின் முன்னேற்றத்தில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தையும் கூடுதலாக அறியக் கூடியதாய் இருந்தது.

குறிப்பாக தமிழ்ப் பாடசாலைகள், கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியடையவேண்டுமெனவும், அதன் குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமெனவும் பெரும் ஆசை கொண்டிருந்தார். அப்பாடசாலைகள் தொடர்பான பிரச்சினைகளை அடிக்கடி என்னிடம் கூறி அதற்கு காரணம் காண்பதில் பிடிவாதமாக செயற்பட்ட ஒரு உத்தியோகத்தராக நான் அவரைக் கண்டேன். எனவே அவரது எண்ணத்திற்கேற்ப தமிழ்ப் பாடசாலை அதிபர்கள் சங்கத்தை அமைத்து பாடசாலை அதிபர்களுடனும் திருவாளர் மனோகரன்பிள்ளை அவர்களுடனும் சேர்ந்து கல்விப் பிரச்சினைகளை ஆராய்ந்து பல சிறப்புமிகு திட்டங்களையிட்டு செயற்படுத்துவதற்கு திரு. மனோகரன்பிள்ளை அவர்களே காரணமாக இருந்தார். இவ்வாறான கூட்டங்கள் மாதாமாதம் நடைபெற்று அதனை நடைமுறைப்படுத்தவும் பிற்காலத்தில் முடிந்தது.

இதன் காரணமாக எனக்கும் அவருக்கும் பொதுச் சேவையில் பெரும் இணக்கம் காணப்பட்டது. தமிழ் பிரதேச பாடசாலைகள் குறிப்பாக சம்மாந்துறை வலயத்திலுள்ள நாவிதன்வெளிப் பிரதேச பாடசாலைகள் பெருவளர்ச்சி அடைய வேண்டுமென ஆதங்கம் கொண்டவன் நான். அப்பாடசாலைகள் அபிவிருத்தி யடைவதற்கு வெகுவாக உழைத்து வருகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. மனோகரன்பிள்ளை அவர்கள் கல்வியில் மட்டுமல்ல, வேறுபல சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வந்ததை நான் அறிவேன். ஆசிரியராக மட்டுமன்றி கூட்டுறவுப் பரிசோதகராகவும் பல வருடம் கடமையாற்றிய இவருக்குக் கிடைத்த பாடசாலைகள், ஆசிரியர்கள் காரணமாக உயர்ந்த நிலையில் தன் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள உதவியது எனலாம். கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரியில் கற்கும் வாய்ப்பும் சகோதரர் இம்மானுவேல் போன்ற சிறந்த அதிபர் ஆசிரியர்களின் பயிற்சியும் இத்தகு திறனை வளர்க்கவும், அறப்பணிபுரியக் கூடிய சிந்தனையையும் அளித்திருக்கும்.

நாவிதன்வெளி, பிரதேச இணக்க சபை தவிசாளராகவும் விவசாய விளைவுப் பெருக்கக் குழுத்தலைவராகவும், கிராம சபை விசேட ஆணையாளராகவும் ஆலயங்களின் ஒன்றியத் தலைவராகவும், அம்பாறை மாவட்ட மனித உரிமைகள் குழுவின் கல்முனைப் பிராந்திய அங்கத்தவராகவும், அம்பாறை மாவட்ட தமிழ்ப் பகுதி பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளராகவும் இருந்து இவர் ஆற்றிய சேவைகளை இன்றும் தமிழ் மக்கள் நினைவுகூறுகின்றனர். இத்தகைய ஒருவரின் இழப்பு தமிழ் மக்களால் ஈடுசெய்யமுடியாததாகும். இவரது நல்லெண்ணங்களையும் சமூக சேவைகளையும் இவரது புதல்வர்கள் தொடர்வார்களாக.

**ஐ. எம். இஸ்ஸதீன். BA (cey), Dip.in.Edu, SLES - I**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
சம்மாந்துறை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோகரன்பிள்ளையின் மரணம் மரணமல்ல, ஓர் உடலின் அர்ப்பணிப்பு

மனோகரன்பிள்ளை
மரணமடைந்தார்
என்ற செய்தி
எனை
அதிர்ச்சிக்குள்ளாக்கியது.
ஏன் என்று
எனக்கே தெரியாது.
எனக்கும் அவருக்கும்
என்ன தொடர்பு
அதுவும் புரியவில்லை
அப்படியிருக்க
நானேன்
அதிர்ச்சிக்குள்ளானேன்?
அது
ஓர் ஆத்மாவின்
ஓர் அசைப்பா?
ஓர் ஆத்மாவின்
ஓர் - அசை - பா -
அது ஒரு காலை நேரம்
நான் கந்தோரில் இருந்தேன்.
"வணக்கம் ஐயா"
என்று
கைகூப்பிச்சிரம் தாழ்த்தி
உள்ளே வந்தவர்
தன்னை
அறிமுகம் செய்தார்
சமூக சேவைக்காய்
"என்னை
அர்ப்பணம் செய்துவிட்டேன்
எனக்கும்
எனது சமூகத்திற்கும்
நீங்கள்
உதவவேண்டும்"
இது அவரது
வினயமான வேண்டுகோள்
"அர்ப்பணிப்பு"
நடந்துவிட்டதா?
அதனால்தான்
அதிர்ச்சியடைந்தேனா?

புன்னகை தவழும்
பூமுகம்
பளிச்செனத் தெரியும்
பல்வரிசை
கண்ணன் நிறத்தில்
தொட்டெழுதிய கலர்
இப்படிப்பட்ட
அவரது உடல்தான்
எங்களை விட்டுப்
பிரிந்துபோனது
அல்ல -
அர்ப்பணமானது
வெள்ளை வெளேரென்ன
அவரது ஆத்மா
எங்களை விட்டுப்
பிரியவேயில்லை.
சமூகசேவைக்கென்றே
அது
எங்களுடன்
சங்கமித்துள்ளது.

மனோகரன்பிள்ளையின்
உடல் அர்ப்பணிப்பு
ஓர் ஆத்மாவின் துளிர்ப்பு
துளிர்ப்பு வளர
வாழ்த்துங்கள்

மனோகரன்பிள்ளை போல்
பல்லாயிரம் பிள்ளைகள்
பிறக்கட்டும்
வாழ்த்துங்கள்
மீண்டும் மீண்டும்
வாழ்த்துங்கள்.

மணிப்புலவர் மருதூர். ஏ. மஜீட்
B.A. (Hons) Cey, Dip.in.Edu SLES
முன்னால் ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த அமரர் எஸ். மனோகரன்பிள்ளை அவர்கட்கு எமது அஞ்சலிகள்

கலாநிதி. அருட். திரு. S.A.I. மத்தியூ. SSJ

மனிதன் வாழுகின்றபோது மற்றையவர்கள் அவனை எடை போடுகின்றார்கள். தமது கொள்கையோடு சாராதவர்களைச் சாடுகின்றார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் சில அபிலாசைகள் உண்டு. அந்த அபிலாசைகள் பல்வேறு காரணிகளால் தாக்கமுறுகின்றன. பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு, எதிர்ப்புகளுக்கு மத்தியில் மனிதன் தன் ஆளுமையைக் கட்டியெழுப்பி தனது குறிக்கோள்களை அடைய முற்படுகிறான். இலட்சியங்களை அடைந்துகொள்வது அவ்வளவு இலகுவான செயலல்ல.

மறைந்த. திரு. மனோகரன்பிள்ளை அவர்கள் பாத்திமாக் கல்லூரியின் பழைய மாணவராவார். பாத்திமா இல்லம் என்ற கல்லூரி விடுதியிலும் விடுதிமாணவனாக இருந்து கல்வி பயின்றவர். விளையாட்டு, சாரணியம், இலக்கியம், விவாதம் ஆகிய துறைகளிலே சிறந்து விளங்கி பாடசாலைக்கும் தமக்கும் பெருமைதேடிக்கொண்டவர். இக்கல்லூரியில் பெற்ற தலைமைத்துவமும், கல்லூரி ஆசிரியர்களால் ஊட்டப்பட்ட சமூக சேவை என்ற இலட்சியப் போக்கும் அவரது வருங்கால வாழ்க்கைக்கு வழிகாட்டின, உரமூட்டின.

கல்லூரிப்படிப்பை வந்தாறுமூலை மகாவித்தியாலயத்தில் நிறைவு செய்தபின்னர் அன்னமலை பாடசாலையிலும், மன்னம்பிட்டிப் பாடசாலையிலும் ஆசிரியராகப்பணிபுரிந்தார். பின்னர் கூட்டுறவுப் பரிசோதகராக பணிபுரிந்தவேளையில் சமூகசேவைகளை தம்பணிகளில் ஒன்றாக சுமந்து கொண்டார். அது அவருக்கு சுமையாகவே இருந்தது. ஒத்துழைப்புக்கள் கிடைக்காத வேளையிலும் தன்னந்தனியாகப் பொறுமையாக அப்பணிகளை மேற்கொண்டார். கடந்த 23 வருடங்களாகக் கல்முனை இந்துப் பேரவையின் இயக்குநர்களில் ஒருவராகவும், கல்முனை மனித உரிமை அமைப்பின் உறுப்பினராகவும், அம்பாறை மாவட்ட காராட்டிச் சங்கத்தின் தலைவராகவும் தம்பணிகளை ஆற்றியுள்ளார்.

தம்பணிக்காலத்தில் பல்வேறு கலைஞ்ர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பிறரை மகிழ்வித்தார். கலைகளை வளர்க்க ஆவண செய்தார். இந்து இளைஞ்ர் மன்றத்தின் மூலம் பல்வேறு ஆக்கப்பணிகளைச் செய்தார்.

இறுதியாக அன்னமலை நாவிதன்வெளி மரண விசாரணை அதிகாரியாகவும் பணிபுரிந்தார்.

கார்மேல் பாத்திமாக் கல்லூரியோடு அவருக்கு நெருங்கிய பாசமிருந்தது. அதனால் அவரது புதல்வர்கள் ம. நித்தியானந்தன், ம. சதானந்தன், ம. விவேகானந்தன் மகள் விஜயலட்சுமி ஆகியோர் இக்கல்லூரியிலேயே கல்வி கற்றவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரி அவரை வாஞ்சையுடன் வரவேற்று கல்லூரியின் பழையமாணவர் என்ற சிறப்பு முத்திரையைப் பதித்தவர் அணியில் நிறுத்தி கௌரவம் செய்ய எத்தனித்திருந்தது. சில தடைகளால் அது தடைப்பட்டது வாழ்க்கையில் 60 வயதுகளையே அடைந்திருந்த அவர் குண்டுக்கலாசாரத்தினால் காலன்வசப்பட்டார் என்ற செய்தி மனிதாபிமானம் மிக்க அனைவரையும் பெரும் துக்கத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

குண்டொன்று ஒருவரின் உயிரைக் குடிக்கின்றபோது அவரை சார்ந்தவர்களின் நெஞ்சங்கள் வைரங்களாகின்றன. அவர்களும் வைரிகளாக மாறுகின்றார்கள்.

தற்காலத்தில் உலகப்பிரசித்தி பெற்ற விடுதலை வீரர்களுள் நெல்சன் மண்டேலா மிகமுக்கியமானவர். கால்நூற்றாண்டுக்கு மேலாக சிறையிலே வாடியவர். அவருக்கு விடுதலை வழங்கிய போது தென்னாபிரிக்காவின் தலைமைத்துவம் அவரை நாடி வந்த வேளையில் நிருபர் ஒருவர் அவரிடம் சில கேள்விகளைக் கேட்கின்றார். நெல்சன் அவர்களே! உங்களது வருங்கால ஆட்சியில் உங்களைச் சிறையிலே தள்ளிய வெள்ளையர்களுக்கு என்ன இடம் அளிக்கப் போகிறீர்கள். இதற்கு நெல்சனின் பதில் :- ''எனது ஆட்சியில் தென்னாபிரிக்காவில் வெள்ளையர்கள் ஒருவரும் இருக்கமாட்டார்கள்'' அப்படியானால் தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்கள் மட்டும்தானா இருப்பார்கள்?! இல்லை கறுப்பர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

நெல்சன்! நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் !! எனது ஆட்சியில் வெள்ளையர் கறுப்பர் என்ற இனபேதமும் இருக்கமாட்டாது. எல்லோரையும் நான் சமமாக, மனிதராக மட்டுமே எண்ணுவேன். இந்த மனப்பான்மைதான் நெல்சனை வரலாற்று மனிதராக ஆக்கியுள்ளது அவர் தென்னாபிரிக்காவின் ஒரு தேசதந்தையாக கணிக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை. மனோகரன்பிள்ளைகள் வாழ்ந்திருக்கவேண்டும். இறைவன் அழைக்கும் வரை தலைமைத்துவம் வாழ்ந்திருக்க வேண்டும். வேல்முருகுகள் அகாலமாக மடிந்திருக்கக் கூடாது. நமது நாட்டிற்கு நமது கிராமங்களுக்கு தலைவர்கள் தேவை. சமூகத் தொண்டர்கள் தேவை. இவர்கள் சமூகத்தின் வளங்கள்.

மனோகரன்பிள்ளை தம்மைச் சார்ந்த தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்காகவும் குறிப்பாக கல்விப்பிரச்சினைக்காகவும் கம்பீரமாகக் குரல் கொடுத்த ஒரு மனிதன். இதனை நான் நேரில் அறிந்தவன்.

மறைந்த மனோகரன்பிள்ளை அவர்கட்கு எமது அஞ்சலிகள். அவரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் அவரால் நன்மை பெற்ற சகலருக்கும் ஆழ்ந்த அனுதாபங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் ஞாபகம்

சந்தித்தேன் நான் அவரை அரசியல் வாதியாய்
அல்ல!
சொந்தக்காரனாய்!
பல நாட்களாக பழகினேன்!
அப்போதுதான் புரிந்தது!
அவர் பொது நலவாதி என்று!
குயிலுக்கு குரல் அழகு!
ஆனால் இவருக்கு குயிலின் நிறம் அழகு!
பல பேரைச் சொர்க்க வைக்கும்!
பேச்சழகில் நானும் சொர்க்கி நின்றேன்!
பல பேரைக் கவர்ந்திழுக்கும் சிரிப்பழகில்!
நானும் மூழ்கி நின்றேன்!
கதர்சேட்டு, கதர்வேட்டி!
அணிவதில் இவர் ஒருபோதும் தவறியதில்லை!

அன்றைய கால ஓட்டம்!
பாண்டிருப்பில் அறநெறிப் பாடசாலை
தொடங்கிய கால கட்டம்!
அதில் ஆசிரியையாக என்னையும்
சேர்ப்பது அன்னாரின் திட்டம்!
இதற்கு இணங்க நான் ஆசிரியையாக!
இரு வருடங்கள் கடமை ஆற்றியது!
என்னால் மறக்க முடியாத ஒரு மாற்றம்!
இவர் அரசியலில் நுழைந்தது ஒரு போராட்டம்!
இதனால் பெற்றார் பலபேரின் சீற்றம்!
இவர் மரணித்த தேதியைக்கேட்டு!
நான் அடைந்தேன் பதட்டம்!
அது எல்லோரினதும் மனதிலும்
ஏற்பட்ட வாட்டம்!
என்ன செய்வது அவ்வளவுதான்!
அவரது வாழ்க்கை வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னாரை மடிசுமந்தாள் காளியம்மை!
மனைவி எனக் கரம் பிடித்தாள்!
குணவதியான செல்லம்மா!
துணைவி என்று வந்த பின்பு!
பரிமாறிக்கொண்ட அன்புக்கு!
நினைவுச் சின்னமாக பாரினிலே!
விதைத்திட்டார் மூன்று முத்தான முத்துக்களை!
இது அவர் விட்டுச்சென்ற பொன்னான சொத்துக்கள்!

தவப் புதல்வர்களில் மூத்தமகன் நித்தியானந்தன்!
மூன்று மகன்களிலும் வித்தியாசமானவர்!
தேக்கு மரத்தையே தனது உடம்பாகக் கொண்ட
கட்டழகன்!
அதிரடி நடையும், திடமான உள்ளமும்!
படைத்த இவர் சடுதியான கோபக்காரன்!
இருந்தும் இரங்கும் மனசுக்காரன்!
தந்தைபோல் நாபிழக்கப் பேசுபவர்!
ஆயினும் வாக்குத்தவராதவர்!

இரண்டாவது மகன் சதானந்தன்!
எப்போதும் சுதந்திரமாகத் திரியும்!
பகட்டான வாலிபர்!

கடைசி மகன் விவேக்!
சுறுசுறுப்புக் கூடியவர்!
தன் அப்பாவின் சிரிப்பையே!
தன்னத்தில் அடக்கிக்கொண்டவர்!

வளர்ப்பு மகள் விஜி!
எப்போதும் சாதுவான மாது!

அன்னாரின் ஓராண்டு நினைவில்
ஆத்மா சாந்திக்காக உரிமையுடன்
பிரார்த்திக்கும் இவள்

**வேதாரணியம் சுமதினி**
**முகாமைத்துவ பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த சமூகத்தொண்டன்

கல்முனைப் பிரதேசத்தில் சமூகபணி ஆற்றிய பலருள் சிறந்ததொரு சேவையாளனாக திகழ்ந்தவர் அமரர் எஸ். மனோகரன்பிள்ளை என்றால் அது மிகையாகாது. அமரர் எஸ். மனோகரன்பிள்ளை அவர்கள் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1959 ம் வரை, கல்முனை பாத்திமாக் கல்லூரியிலே கல்வியை பயின்றவர். இக்கால கட்டத்திலே தன்னை உருவாக்கிய வண. சகோதரர்கள், இமானுவேல், டானியல் அல்போன்ஸ், இவர்களுடன் திருவாளர் அருளையா, தியாகராஜா, வஸ்தியாம் பிள்ளை ஆசிரியர்களை நான் என்றும் மறக்கமுடியாது. அவர்கள் காட்டிய அன்பு, அரவணைப்பு, வழிகாட்டல் என்பன என்றும் எனது வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்தது மாத்திரமன்றி, செம்மையான உயர்வான நெறிகளுக்கு உரமூட்டின எனக் கூறலாம்.

அத்தோடு நான் கற்கும் காலத்திலே கல்வித்துறையிலும் விளையாட்டுத்துறையிலும் என்னை இரண்டாகக் கலக்கவைத்தவர் மதிப்பிற்குரிய சகோதரர், பெஞ்சமின் ஆவார்கள் அவரின் கடின உழைப்பும் அஞ்சா நெஞ்சமும் தெய்வப்பற்றும் என்னை மிகவும் கவர்ந்தன. அது எனது வாழ்க்கையில் துணிவையும், சமயப்பற்றையும் கொடுத்தன, என்று அமரர் அவர்கள் தனது வாழ்க்கை குறிப்பேட்டில் கூறியுள்ளார். எனவே அமரர் எஸ். மனோகரன்பிள்ளை அவர்கள் பாத்திமா பெற்றெடுத்த புதல்வர்கள் ஒருவர் ஆவார்.

இந்தவகையில் நாம் இவரது வாழ்க்கைப் பயணத்தை எடுத்து நோக்கும் போது தான் எந்த பாடசாலையில் (நாவிதன்வெளி அ.த.க பாடசாலை) ஆரம்பக்கல்வியை கற்றாரோ அதே பாடசாலையில் தனது முதல் ஆசிரியர் நியமனத்தைப் பெற்றமை, அது அவரின் முதற் கொடையாகும் அத்தோடு மன்னம்பிட்டி, இறுப்பனை போன்ற பின்தங்கிய கிராமங்களில் தனது ஆசிரியர் பணியை மேற்கொண்டுள்ளார் கற்பித்தல் பணியில் மட்டுமல்ல விளையாட்டு, சமயத்துறைகளிலும் மாணவர்களை ஈடுபாடுடையவர்களாக ஆக்கியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் கூட்டுறவுத்துறையில் தன்னை 16 வருடகாலம் அர்பணித்துள்ளார். இத்துறையில் கூட்டுறவு பரிசோதகர், விளக்க உத்தியோகத்தர், பயிற்சி விரிவுரையாளர் போன்ற பல்வேறு பணிகள் ஊடாக கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு தனது சேவையினை வழங்கியுள்ளார்.

ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் பரிச்சையமான இவர் தன்னை ஒரு சமூகத் தொண்டனாகவும் உருவாக்கியுள்ளார். சமூகசேவைகளிலே பல்வேறு பதவிகளை வகித்து, வீடற்ற வசதியற்றவர்களுக்கும் அவர்களின் சமூக நல்வாழ்வு கருதி வீட்டு பொது வசதிகள் இயலுமான வரை நீர்பாசன வசதிகள் காணி உறுதிப்பத்திரங்கள் போன்ற பல்வேறு சமூக அபிவிருத்திகளை செய்துள்ளார்.

சமூகப்பணிகளோடு மட்டுமல்லாமல் சமயப்பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திய ஒரு மனிதர் ஆவார். பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய பகுதிகளில் அறநெறி பாடசாலைகளை அமைத்து இவை சிறந்த சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கோடு 100க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளை ஆசிரியர்களாக நியமித்தும், 5000 க்கும் மேற்றபட்ட மாணவர்கள் இவ் அறநெறி பாடசாலைகளில் கல்வி பயில வசதிகளை செய்து கொடுத்துள்ளார். அத்தோடு யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள், சமய இலக்கிய விழாக்கள், கந்த புராணம் படித்தலும் பயன் சொல்லும் பயிற்சி நெறி போன்ற பணிகளையும் சமயத்துறைக்கு ஆற்றியுள்ளார்.

இவ்வாறான சேவையினை மேற்கொண்ட சமூகத் தொண்டன் எம் மத்தியில் இன்று இல்லை எனினும் அவரது சேவை காலத்தால் அழியாது என்பதில் ஐயமில்லை.

**அருட் சகோதரர் M. ஸ்ரீபன் மத்தியூ S.S.J**
அதிபர் கார்மேல் பாத்திமா கல்லூரி தேசிய பாடசாலை,
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவகன்

வண்ணக் கருமைநிறம், நல்ல தேகக் கட்டு, போதுமான உயரம், ஒய்யாரமாய் அமைந்திருக்கும் மீசை, மல்லிகைப்பூக்கள் விரிந்தாற் போல் மகிழ்ச்சியில் பூக்கும் புன்னகை. எப்போதும் ஆர்வம்! எப்போதும் சுறுசுறுப்பு!! நயமான விடயங்களும், நயத்து ரசிக்கும் விடயங்களும், நகைச்சுவையான விடயங்களும் பொதிந்து வரும் அவரிடமிருந்து. முகத்தில் வெண்ணீறும் சந்தனப்பொட்டும். வெள்ளைவேட்டியோடு இடையில் சால்வையை கட்டுவதோடு தலைமைத்துவத்தையும் தானே இறுகக் கட்டிக்கொண்டு விழா, கொட்டாட்ட தலை வாசலிலே வருவோரை வரவேற்று நிற்கும் கம்பீரமே தனித்துவங் கொண்ட நான் கண்ட அமரர் மனோகரன்பிள்ளை.

தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் கூடும் சபைகளிலும் சமூக நலனோம்பு சங்கங்களிலும், ஆன்மீக நெறியாளர் சமூகங்களிலும், இந்து சமய அமைப்புகளிலும் அரச அலுவலர் சபைகளிலும், அரசியல்வாதிகள் அமர்வுகளிலும் அவரைக் காணலாம். தான் அங்கத்துவம் வகிக்கும் அவைகளிலே தனக்கென தனியான கொள்கையோடும், செயலோடும் தனது தனித்துவத்தை மகிமைப்படுத்தியே விடுவார். அவர் பின்னால் ஒரு கூட்டம் எப்போதும் இருக்கும். இவரின் சேவையால் சிலர் பயன் பல பெற்றுள்ளனர். அவர்களெல்லாம் அன்னாருக்கு என்றென்றும் நன்றியுணர்வோடிருப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் சந்தேகமில்லை! பொழுது போக்குக்காக நாங்கள் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம், சமயம், சமூகம் கலை, பண்பாடு, என்றெல்லாம் விரிவாகக் கருத்துப்பறிமாறுவோம். சில சந்தர்ப்பங்களில் அவரது கருத்துக்களுக்கும், எனது கருத்துக்களின் முரண்பாடு எழுந்ததுண்டு. எனது நியாயங்களையும், நியாயப்படுத்தல்களையும், தர்க்கங்களையும் சாட அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கருத்தூன்றி புன்முறுவலோடு செவிமடுக்கும் அவரது பண்பை நான் ரசித்ததுண்டு. இது இவரிடமுள்ள விசேட தன்மையாகும். எமது வாதப்பிரதி வாதங்களை பக்கத்தில் உள்ளோர் விரும்பி அவதானித்து இன்புறுவர் என்பது எமக்கு விளங்கும். தான் சிந்தித்துப் பெற்ற கருத்தையே செயல் வடிவம் கொடுத்து வெற்றி பெற்ற செயல் வீரன் அவர்.

அவரது ஆற்றல்கள், திறன்கள், பண்புகள் அனைத்தாலும் திரண்ட அவரது சேவைகளே அச்சங்கலாக உள்ளன. அவை என்றும் இருக்கும். அவரையும் அவரது பணிகளையும் அவரது எச்சங்களே எப்போதும் இயம்பும் அவர் நாமம் அவற்றிலே நின்று நிலைக்கும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய நாமும் இறைவனை இறைஞ்சுவோம்.

**பா. வெங்கடாச்சலம், Bsc.**

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட சமூகத் தொண்டன்
# அமரர் திரு. மனோகரன் பிள்ளை.

சமூகத்தில் பல மனிதர் தோன்றி மறைகின்றனர் ஆனால் சமூகத்தின் மத்தியில் எம்மத்தியில் மக்கள் மத்தியில் நிலையான மறக்கமுடியாத ஓர் இடத்தையும், பெருமதிப்பையும், கௌரவத்தையும் அன்பையும் பெற்றுக் கொள்கின்றவர்கள் ஒரு சிலர்தான். இத்தகைய மனிதர்கள் தாம் வாழ்ந்த வாழ்வில் பல் வேறு பண்பான முன்னோடிப் பண்புகளைப் பெற்றிருப்பார்கள். நேரம் தவறாமை, எதிலும் தயக்கமின்றி செயற்படல், பிறர்க்குஉதவுதல், பிறர்துன்பம் தன் துன்பமாகக் கருதி உதவல், நல்லவற்றிற்கெல்லாம் குரல் கொடுத்தல், தேவை அறிந்து செயற்படல் போன்ற இன்னும் பல பண்புகளுடன் மக்கள் மத்தியில் திகழ்ந்தவர்கள் நிலையான இடத்தைப் பிடித்துக் கொள்வார்கள். அந்த வகையில் அமரர். மனோகரன்பிள்ளையிடம் மேற்கூறிய பல பண்புகள் காணப்பட்டது. அதனால் எமது பகுதி மக்கள் மத்தியில் மறக்கமுடியாத ஓர் சமூக சேவகனாகத் திகழ்கின்றார் என்றும் கூறலாம்.

அமரர். மனேகரன்பிள்ளை தனது வாழ்க்கைக் காலத்தில் துடிப்புள்ள இளைஞராக, ஆசிரியராக, கூட்டுறவுப் பரிசோதகராக, கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் போதனாசிரியராக, ஆணையாளராக, பல சமூக சேவை சங்கங்களின் ஸ்தாபகராக, தலைவராக, சமூகத் தொண்டனாக, அரசியல் வாதியாக, பல்வேறு பணிகளில், சேவைகளில் தன்னை ஈடுபடுத்தியிருந்தார் இதன் காரணமாக மக்களுக்கும் இவருக்கும் இடையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கமான பிணைப்பு இருந்தது. அது அவரது வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தியதனால் மக்கள் தொண்டனாக தன்னை ஆக்கிக் கொண்டார் சமூகத்தின் பிரச்சனைகளைத் தனது பிரச்சனைகளாகக் கருத்திலெடுத்து அரசியல் கருத்து மோதல்களுக்கு முகம் கொடுத்தார்

நேர்மையான குணமும், அறவழிவாழ்க்கையும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற கொள்கையும், ஒருவரிடத்தில் காணப்படுமேயானால் அது அவரது குடும்பத்திற்கும் பரம்பரைக்கும், பாதுகாப்பு கொடுக்கும் என்பது வாழ்க்கையின் அர்த்தமுள்ள கருத்தாகும். இதனையே பொய்ய மொழிப்புலவன் வள்ளுவப் பெருந்தகை பின்வருமாறு கூறுகின்றார்.

''செப்பமுடையவனாக்கஞ் சிதைவின்றியெச்சத்திற் கேமாப் புடைத்து"

அமரர். மனோகரன் பிள்ளையின் வாழ்க்கை வழிகாட்டல் இக் கருத்திற் கொப்பானதே இதன் பால் அவர் குடும்பத்தினர் அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறையினால் பெருமை கொள்ள வேண்டும்.

**P. முருகையா, Bcom, (Cey)**
*அதிபர்,*
*கமு/உ வெஸ்லி உயர்தர பாடசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியாத மாமனிதர்

## மனோகரன்பிள்ளை

கல்முனைப் பிரதேசத்தில் சமய சமூக பணிகளில் அமரர். மனோகரன்பிள்ளை அவர்களின் பணிகள் இன்னமும் நினைவுச் சின்னங்களாக உள்ளது. இவரை கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக நெருங்கிபழகிய அனுபவத்தின் மூலம் பல திறமைகளை வெளிப்படுத்தி சாதனைகள் படைத்த வரலாறு உண்டு. இவரது வாழ்க்கையில் பல பதவிகளை வகித்தவர். கூட்டுறவு பரிசோதகராக, கிராம சபை ஆணையாளராக, அரசியல்வாதியாக, அம்பாறை மாவட்ட இந்துக்கள் பேரவை செயலதிபராக பல பதவிகளை வகித்த மனோகரன்பிள்ளை மறக்கமுடியாதவர்.

கால சூழல் மாற்றங்களுக்கு ஏற்றமுறையில் தனது கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தி சமூகத்தேவைகளை நிறைவேற்றியவர். எந்தவிதமான பிரச்சினைகளையும் எதிர்த்து நிற்கும் மனோவலிமை படைத்தவர். நினைத்த விடயத்தை செய்து முடிக்கும்வரை அமைதி பெறமாட்டார். எனது பாடசாலையில் மனோகரன்பிள்ளை அவர்களின் தலைமையில் பலசமய விழாக்கள், தியான வகுப்புகள், யோகாசன பயிற்சி வகுப்புகள், பாராட்டு விழாக்கள் போன்ற பல நிகழ்ச்சிகளை திறமையாக நடாத்தி பலரின் பாராட்டுக்களை பெற்றுள்ளார். விழாக்களை திட்டமிடுவதில் வல்லவர், எவர் எதிர்த்தாலும் கவலைப்படாமல் நினைத்த காரியத்தை நிறைவேற்றிவிடுவார். சிலவேளைகளில் இவரது செயல்களை பற்றி பலவிதமான கதைகள் வெளிவந்தாலும், அதனை பொருட்படுத்த மாட்டார். அரசியல் விடயங்களில் பொது ஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்டவர். தோல்வியிலும் வெற்றியுண்டு என்ற மனஉறுதி பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில் சமய எழுச்சி விழாக்கள் பல நடாத்தினார். கொழும்பில் இருந்து பிரம்மகுமாரிகள் இராஜயோகம் எமது கல்முனைப் பிரதேசத்தில் வேரூன்ற மூலகாரணமாக இருந்தவர். இன்று பெருவளர்ச்சி பெற்று நிரந்தர இடத்தை பெற்றுள்ளது. இந்நிறுவனத்தை நிரந்தரமான இடத்தில் அமைத்து பலரும் மன அமைதி பெறவும் உதவினார். இப்பணிகளை காலத்தால் மறக்கமுடியாது. இவரது சொற்பொழிவுகள் மிகவும் தெளிவாகவும், கவர்ச்சியாகவும் உறுதியான கருத்துக்களை கொண்டமையும் பேச்சுக்கலையில் வல்லவர்.

எமது பிரதேசத்தில் ஓவியம், இசை கலைத்துறைகளில் சிறந்து விளங்கிய கலைஞர்களை பாராட்டி பட்டங்கள் வழங்கி கௌரவித்தவர். இவ்வாறு ஆக்கபூர்வமான சிந்தனைகள், கொள்கைகள் யாவும் செயல்வடிவம் பெற்றமையால் இவரது பெயர் அடிக்கடி மக்கள் மத்தியில் ஞாபகச் சுவடுகளாக விளங்குகின்றது. அரசியல் துறையில் எதிர்பார்த்த வெற்றியை பெறாவிட்டாலும் தனது திறமையினால் பல அரசியல்வாதிகளோடும் தொடர்புகொண்டு சமூகப்பணிகளை நிறைவேற்றியுள்ளார். ஆகவே என்றும் நினைவுகூறத்தக்க மாமனிதராகவும், செயல் வீரராகவும் மக்கள் மனதில் இடம்பெற்றுள்ளார். ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்தில் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற போதனைக்கு அமைவாக தன்னால் முடிந்த சேவைகளை செய்வதன் மூலம் இறந்தும் இறவா நிலை பெறுவர். இதற்கு உதாரண புருஷராக விளங்கிய அமரர் மகோரன்பிள்ளை அவர்கள் என்றும் மறக்கமுடியாத மாமனிதராக மக்களால் மதிக்கப்படுகின்றார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறை
தெய்வத்துள் வைக்கப்படும்"

**என்.நாகராஜா. BA (Cey)**
அதிபர்
இராம கிருஷ்னன் மிஷன் ம.வி
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மனோகரன்பிள்ளை பற்றிய சில நல்ல நினைவுகள்

மும்மொழி வல்லமையும், நல்ல ஆளுமைப் பண்புகளையும் கொண்ட அமரர் மனோகரன்பிள்ளை அவர்கள், தான் வாழ்ந்த காலத்தில் பொதுப் பணிகள் பலவற்றில் தன்னை இணைத்துக் கொண்டார். எனவே, இவரைப் பலர் நாடி வந்தனர். இவரும் பல பொதுப்பணிகளைத் தேடிச்செல்வார். தனது பணிகளுக்கு வலுவூட்டும் வகையில் அரசியலிலும் தன்னை இணைத்துக் கொண்டார்.

1977ல் இல் பாண்டிருப்பு மகாவித்தியாலயத்திற்கு நான் அதிபராக நியமிக்கப்பட்டதை இவர் பெரிதும் பாராட்டியது மட்டுமல்லாது அவ்வருடம் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் பங்குகொண்டு நலன் விரும்பிஎன்ற வகையில் பாட அபிவிருத்திச் சங்க உறுப்பினராகத் தெரிவானார். பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் கூட்டப்படும் போது உரிய நேரத்திற்குச் சிறிது முன்னரே வருகை தருவார். பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பாகக் கூட்டத்தில் முன்மொழியப்படும் விடயங்கள் பற்றி ஆக்கபூர்வமான கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக்கூறிப் பயனுள்ள முறையில் தனது பங்களிப்பை வழங்குவார். அவ்வகையில் பாடசாலையில் நெடுங்காலமாக பாழடைய விடப்பட்டிருந்த குடிநீர்க் கிணற்றைப் புனரமைக்கும் ஆலோசனை ஒன்று கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது உடனடியாகவே அப்பணியைத் தானே பொறுப்பேற்று தனது சொந்த செலவில் நிறைவு செய்து தந்தார். இன்று எமது பாடசாலை மாணவர்கள் பாடசாலை வளவினுள்ளேயே தண்ணீர் அருந்தும் காட்சியும், பாதுகாப்பு வலையினால் மூடப்பட்டிருக்கும் கிணற்றின் காட்சியும் அமரர் மனோகரன்பிள்ளையை எனக்கு அடிக்கடி ஞாபகமூட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997ல் அடிக்கடி பாடசாலையின் இந்து மன்றத்தினரால் நடாத்தப்பட்ட வாணிவிழாவில் கௌரவ அதிதியாக மனோகரன்பிள்ளை அவர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப் பட்டார். அவ்விழாவில் அவர் ஆற்றிய சொற்பொழிவு அவரது ஆழ்ந்த சமய ஞானத்தை எடுத்துக்கூறுவதாக இருந்தது. பாடசாலயின் பௌதிகவளப் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்ட அமரர் மனோகரன்பிள்ளை அவர்கள், வலயக் கல்வி அலுவலகத்துடனும், மாகாணக் கல்வி அமைச்சுடனும் பாடசாலையின் நல்லுறவுகளை வளர்ப்பதற்கு எமக்கு உறுதுணையாகச் செயற்பட்டார்.

1998ல் பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த சாரணர் பாசறையும் சின்னஞ் சூட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் என்ற நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த திரு. சுந்தரம் டிவகலாலா அவர்களைப் பிரதம விருந்தினராகப் பங்குபெறச் செய்வதற்கு காரணமாய் இருந்தவர்களில் அமரர் மனோகரன்பிள்ளை அவர்களின் பணி சிறப்பானது.

04–06–1998ல் பாடசாலையில் மிருதங்க வாத்திய வகுப்புக்களை ஆரம்பித்து வைக்கும் விழா நிகழ்வுகள் விமரிசையாக நடந்தேறுவதில் முக்கிய பங்கேற்றுக் கொண்டவர் அமரர் மனோகரன் பிள்ளை ஆவார். இவ்விழாவில் விபுலாணந்தா இசை நடனக் கல்லூரி விரிவுரையாளர்களான திரு. வே. ஸ்ரீதரன் திரு. வோல்ட்ஸ் பேர்த் போன்றோரையும், சிவஸ்ரீ. த. சாம்பசிவகுருக்கள் போன்றோரையும் பங்கு பெறச்செய்து விழாவை சிறப்புச்செய்ய உதவினார்.

1998ல் பிற்பகுதியில் ஒருநாள் இரவு வீசிய குட்டிச் சூறாவளியினால் பாடசாலைக் கூரையின் ஒரு பகுதி சிதைவடைந்த சம்பவத்தை அடுத்தநாள் அதிகாலையில் அமரர் மனோகரன்பிள்ளையிடம் கூறியபோது உடனடியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டில் இறங்கி வலயக் கல்விப் பணிப்பாளரை வந்து நேரடியாகப் பார்வையிடச் செய்து அவர் மூலம் உரிய அதிகாரிகளுக்கு திருத்த வேலைகளுக்கான பணிப்புரைகளை வழங்கச் செய்து பெரிதும் உதவினார்.

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றுமதில் கட்டட நிதிக்கான ஒலி ஒளி நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடாத்தி வைத்ததில் அமரர் மனோகரன்பிள்ளை முக்கிய பங்கை யாவரும் அறிவர்.

பொதுப் பணிகளைச் செய்வதற்கு யாவரும் பின்னிற்கும் ஒரு காலகட்டத்தில் அமரர் மனோகரன்பிள்ளை அவர்கள் துணிச்சலுடன் முன்னின்று, பொதுப் பணிகளை ஏற்றுக்கொண்டார். சுவாமி தந்திரதேவா, பிரம்ம குமாரிகள் ராஜயோகிகள் போன்றோரை கல்முனைப் பிரதேசத்துக்கு அறிமுகம் செய்த பெருமை இவரையேசாரும். இவரின் எதிர்பாராத அகால மரணம் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இவரது அரசியல் தொடர்பு காரணமாக இவரின் மரணச் செய்தி அகில இலங்கையிலுமே ஒரு பரபரப்பான செய்தியாக பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சிகள் மூலமாகப் பரப்புரை செய்யப்பட்டது. உண்மையிலேயே இவரது மரணத்தினால் இப்பிரதேச தமிழ் மக்களுக்கு சிறிய நிழல் வழங்கிக் கொண்டிருந்த இறுதி மரமும் சரிந்துவிட்டதாகவே நான் உணர்கின்றேன். இவர் அமரத்துவம் எய்திய ஓராண்டு பூர்த்தியிலும் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் இவர் பிரிவால் வாடும் உற்றார் உறவினரின் துன்பத்தில் எமது பாடசாலையின் சார்பிலும் எனது சார்பிலும் ஆறுதல் கூறித் தேற்றுகிறேன்.

**திரு. இ. இராசரெத்தினம்** (அதிபர்)
கமு/ பாண்டிருப்பு மகா வித்தியாலயம்
கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அம்பாறை மாவட்டத்தின் அணையா ஒளிச்சுடர்*

**அமரர். திரு.எஸ். மனோகரன்பிள்ளை,**

அன்னமலையைப் பிறப்பிடமாகவும், பாண்டிருப்பினை வதிவிடமாகவும் கொண்ட திரு.எஸ். மனோகரன்பிள்ளை அவர்களை பல வருடங்களாக நான் அறிவேன். அன்னமலைப் பிரதேசத்திலே செல்வாக்கானதும் சிறப்பானதுமான குடும்பத்திலே பிறந்தவர் அவர். எப்போதுமே நிமிர்ந்த நடையும் மலர்ந்த சிரிப்பும், பேச்சுவன்மையும், மனதில் பட்டதை துணிந்து சொல்லும் திறனும் அறிவும் ஆற்றலும் துணியும் துடிப்பும் மிக்கவராக விளக்கியவர். ஆரம்ப காலத்தில் ஆசிரியர் பணியில் இருந்து பின் கணக்குப் பரிசோதகராக கடமையாற்றியவர்.

ஆரம்ப காலத்திலேயே தான் பிறந்த சமூகத்திற்கும் அப்பகுதியின் வளர்ச்சிக்குமாக தன்னால் இயன்றவற்றைச் செய்தவர். ஏழை மக்களின் வாழ்விலும், தாழ்விலும் அவர்களுடன் இருந்தவர். அப்பகுதி மக்கள் விரும்பும் தலைவனாகவும் அவர் திகழ்ந்தார்.

கால ஓட்டத்தில் தனது சேவையை விரிவுபடுத்த விரும்பினார். சமூகப்பணிக்கு அரசியல் இன்னும் துணை செய்யும் என்னும் கருத்துடன் பொதுசன முன்னணியின் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் சார்பில் அமைப்பாளராகக் கடமையாற்றி அரசியல் களத்தில கால் வைத்தார். தேர்தலில் தோல்வியுற்றாலும் தனது இலட்சியத்தில் தளரவில்லை. அவர்சார்ந்த கட்சி அரசியலில் இடம் பிடித்தால் அக்கட்சியின் துணைகொண்டு தமிழ்பேசும் மக்களுக்காக தன்னை முழுநேரச் சமுகத் தொண்டனாக மாற்றி அரசியல் வாதிகளின் அனுசரணையுடன் பல அபிவிருத்திகளை மேற்கொண்டார். பல்வேறு திணைக்களங்களோடும் தொடர்பு கொண்டு பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி வேலைகளுக்கு உதவி செய்யலானார். சமூகத்தில் உள்ள முக்கியஸ்தர்களை தன்வீட்டுக்கு அழைத்து நமது சமூகத்திற்குச் செய்யவேண்டிய அபிவிருத்தி பற்றி ஆலோசனை கேட்டார். பல கல்விமான்களின் உதவியுடன் நல்ல பல அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டார். இந்த வகையில் காரைதீவு என்னும் தமிழ்ப் பெருங்கிராமம் அவரது உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்திருந்தது. அடிக்கடி காரைதீவுமக்களுடன் நெருக்கமான தொடர்புகள் வைத்து பல்வேறு சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்குபற்றினார். இதில் காரைதீவு சண்முக வித்தியாலயமும் இவரது உதவிகளைப் பெற்றுக்கொண்டதை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூறுகின்றேன். துரித அபிவிருத்தி கண்டுவரும் இப்பாடசாலைக்கு கட்டிடங்கள் பெறுவதற்கும் அன்னார் பல வழிகளில் உதவியுள்ளார். இவரது இந்த உதவிகளுக்காக அவரை இப்பாடசாலைக்கு வருகை தந்தவரிடம் சிறப்புரை வழங்கிய எமது கல்வி உத்தியோகத்தர் ஒருவர் இப்பாடசாலையின் நூலக வளர்ச்சிக்கு உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்கு அவரும் ஒப்புக்கொண்டார். அதற்கிணங்க தனது சொந்தச் செலவிலேயே ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான மிகமிகப் பிரயோசனம் வாய்ந்த நூல்களை வழங்கி கல்விக்கு உறுதுணை புரிந்தார்.

அவரது அரசியல், சமய, சமூக வாழ்வு எல்லோர் உள்ளத்திலும் நீங்காத இடத்தைப் பிடித்துள்ளது. அவரின் அகால மரணம் கல்முனை, மட்டக்களப்பு மாவட்டங்களை அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த கவலைக்குமுள்ளாக்கியது. இவரது உயர்ந்த நல்லெண்ணங்களையும் சமூகப்பணிகளையும் நாம் என்றும் நினைவு கூர்ந்து அவரது ஆத்ம சாந்திக்காகவும் எமது அஞ்சலியைச் செலுத்தி சாந்திபெறுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!

நன்றியுள்ள,

**வெ. ஜெயநாதன்** (அதிபர்)

கமு/ சண்முக வித்தியாலயம்,

காரைதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாலயம்

காலம் சென்ற அமரர் எஸ் மனோகரன்பிள்ளை (ஜே.பி) அவர்களை நீண்ட காலமாக எனக்குத் தெரியும். இவர் கூட்டுறவு பரிசோதகராக இருந்து, ஓய்வு பெற்றுள்ளார். இவர் எனது குருக்கள்மடத்து உறவினர் திரு. டி. மையில்வாகனம் அவர்களுடன் முகத்துவாரத்தில் கூட்டுறவுப் பயிற்சி பெற்ற காலம் தொடக்கம் நன்று தெரியும். ஆனால் மிக அன்மைக்காலத்தில் தான், அவரோடு நெருங்கிப்பழகும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பல தடவைகள் நான் அவருடன் கொழும்பு மாநகருக்குச் செல்ல வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது. பிரயாணத்தின் போது அல்லது கொழும்பு நகரில் தங்குமிடத்திலும் அவரிடத்தில் உள்ள நல்ல அம்சங்களை நான் அவதானிக்க முடிந்தது. மதுபானம் அருந்தியோ அல்லது மாமிச உணவையோ உட்கொண்டு அவர் அவருடைய பிரயாணத்தை கேளிக்கையாகக் கழிக்கவில்லை. மிக பயபக்தியுடனேயே அவர் பிரயாணத்தை முடித்துக் கொண்டார். அப்போதுதான் இவர் ஒரு (Pure Vegetarian) சுத்த போஷனி என்று அறிய முடிந்தது. எல்லா மனிதர்களுக்கும் சில பலவீனத்தன்மைகளும் (Weak Points) சில பலமான தன்மைகளும் ( Strong Points) இருப்பது இயல்பு. இது மானுசியம். நாம் ஒருவரை மட்டிடும் போது ஒருவரின் பலமான தன்மைகளை - சீர்தூக்கியே மட்டிட வேண்டும். திரு. மனோகரன்பிள்ளை அவர்கள் மிகச் சக்திவாய்ந்தவர் வரையறை இல்லாத அன்பு உள்ளவர் ''தக்கார் தகவிலர் என்பதை தம் எச்சத்தால் அறிவர்'' என்ற வள்ளுவன் கூற்றுக்கு இணங்க அவருடைய புத்திரர்களும் - புத்திரியும் அன்பின் சொருபமாகவே உள்ளனர். அவருக்குக் கிடைத்த வாழ்க்கைத் துணைவி செல்லம்மாவும், கடமையும் கண்ணியமும் கட்டுப்பாடும் உள்ளவராகவே விளங்குகின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய அன்புச் சகோதரர் எஸ். தவபாலரத்தினம் எனது அன்பு மாணவராவார். அவருடைய மைத்துணர் செல்வநாதன் (AD) அவர்கள் என்னோடு சக ஆசிரியராக இருந்தவர். இப்படியாக பல அறிமுகங்கள் அன்னாரின் குடும்பத்தோடு எனக்கு உண்டு. திரு. மனோகரன்பிள்ளை எம்மை விட்டுப்பிரிந்தாலும் அவருடைய ஆன்மா எங்களோடு இப்பவும் உலாவிக் கொண்டே இருக்கின்றது. எல்லோருடைய ஆண்மாக்களும் சங்கிலி போன்று பின்னிப்பிணைந்து கொண்டே இருக்கின்றது. உடலும் பந்த பாசங்களும் தான் வேறு அத்தோடு அவருடைய அன்பு மகன் எஸ். நித்தியானந்தன் (சமூக சேவை உத்தியோகத்தர்) அவரைப் போன்றே அன்பையும் பாசத்தையும் சொரிந்தவராகவே இருக்கின்றார். அவரை இழந்து துயரில் மூழ்கும் அனைவருக்கும் சற்று ஆறுதலாக இருக்கின்றார். அமரர் மனோகரன்பிள்ளை இறந்து ஒரு வருடம் பூர்த்தியாகின்ற இவ்வேளையில் அன்னாருடைய ஆன்மா நற்கதி அடைய வேண்டும் என்று இறைவனை இவ் வேளையில் பிராத்திக்கின்றோம் அவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டது மட்டுமன்றி அமைப்பாளராகவும் திகழ்ந்தார். இம்முறையும் போட்டியிட்டு வெற்றி வாகை சூட இருக்கும் வேளையில் விதி செய்துவிட்டது.

தந்தை விட்ட பணியின் மிகுதியை அமரர் மகோகரன்பிள்ளையின் சிரேஸ்ட புதல்வனான நித்தியானந்தன் ஈடு செய்யவேண்டும் என எதிர்பார்கின்றேன்

**மகேசன் தம்பிராசா B.Sc.(ceylon)**
**Sub Ediitor Thinakathir**
ஓய்வு பெற்ற அதிபர்
குருக்கள்மடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானறிந்த மனோகரன்பிள்ளை அவர்கள்

சட்டத்தரணி வே. தட்சணாமூர்த்தி
B.A.(Cey) Dip. Edu. Dsn. ( Sri Lanka)

அமரத்துவம் அடைந்த திரு. மனோகரன்பிள்ளையைப் பற்றி அறிந்தவர்கள் அவரது வரலாறு இரு பக்கங்களைக் கொண்டதெனக் கூறுவர். ஒரு பக்கம் உற்றுநோக்கினால் அவர் ஓர் உத்தம சமூகத் தொண்டராவார். மறுபக்கம் உற்று நோக்கினால் அவர் ஓர் அரசியல் வாதியாவார். இந்த இரண்டு நிலைகளில் அவர் ஒரு சமூகத் தொண்டனாக மட்டும் பணிபுரியும் காலத்திலேயே முதன் முதலாக எனக்கு இவருடன் தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. 1978ம் ஆண்டு வைகாசி மாதம் என்று ஞாபகம் அமரர் சதாசிவம் மனோகரன்பிள்ளை அவர்கள் என்னை வந்து சந்தித்தார். அந்த காலகட்டத்திலே நான் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரிய கலாசாலையில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அவர் என்னிடம் கூறியவை இதுதான் எனது கிராமமான அன்னமலையிலும் பக்கத்துக் கிராமமான நாவிதன் வெளியிலும் உள்ள பாடசாலைச் சிரார்கள் ஆங்கில ஆசிரியர் பற்றாக் குறையினால் ஆங்கிலக் கல்வியை பெற முடியாதுள்ளனர். அவர்களுடைய ஆங்கிலக் கல்வி விருத்திக்கு நீங்கள் உதவ வேண்டும் என்பது தான். அந்த காலகட்டத்திலே திரு. மனோகரன் பிள்ளை அவர்கள் துடிப்புள்ள ஓர் இளைஞர் தமிழ் மொழி, ஆங்கில மொழி ஆகிய இரண்டிலும் திறன் வாய்ந்த இளைஞர் ''தான் பெற்ற இன்பம் பெறுக வையகம்'' என்ற முது மொழிக்கிணங்க தான் பிறந்த பிரதேசத்தின், கிராமத்தின் முன்னேற்றம் கருதி இந்த வேண்டுகோளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் முன்னிலையில் வைத்தார். இதைப்பற்றிச் சிந்தித்த நான் இவரது சமூக சேவை மனப்பாங்கை உணர்த்தும் இவரது வேண்டுகோளுக்கு இணங்க உதவ வேண்டும் என நினைத்தேன் இருந்தும் அந்த காலகட்டத்தில் நான் ஓர் அரசாங்க உத்தியோகஸ்த்தராக இருந்த காரணத்தினால் அவ்வாறு செயல்பட முடியாதெனக் கூறிவிட்டேன். நண்பர் மனோகரன்பிள்ளை அவர்கள் என்னை விட்டபாடில்லை. கல்முனைக் கல்வித் திணைக்களத்தில் தேவையான அனுமதியைப் பெற்றுக்கொண்டு அடுத்த நாளே என்னை வந்து சந்தித்தார். அவர் விரும்பிக் கேட்டுக் கொண்டபடி அன்னமலை நாவிதன் வெளி ஆகிய கிராமங்களில் உள்ள சிறார்களுக்கு நான் சனிக்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆங்கில வகுப்புக்களை நடத்தினேன். சிறார்கள் மட்டுமல்ல அங்குள்ள வயது வந்தவர்கள் கூட இவ்வகுப்புக்களில் சேர்ந்து பயனடைந்தனர்.

நீண்ட காலத்தின் பின் 1994 ம் ஆண்டில்தான் மீண்டும் அமரர் சதாசிவம் பிள்ளை அவர்களுடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இக்காலத்தில் நான் கல்முனை நீதி மன்றில் ஒரு சட்டத்தரணியாகத் தொழில் செய்து வருகின்றேன். இந்தக் காலகட்டத்தில் அமரர் மனோகரன் பிள்ளை அவர்கள் ஓர் அரசியல்வாதியாக இருந்ததோடு, கல்முனை பிராந்திய அம்பாறை மாவட்ட மனித உரிமைகள் குழுவின் அங்கத்தவர், அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபையின் உபதலைவர், கல்முனைத் தொகுதி இந்துக்கள் பேரவைத் தலைவர், விவசாய விளைவுப் பெருக்கக் குழுத்தலைவர் போன்ற பல பதவிகளிலிருந்தும் சமூகப்பணியாற்றிக் கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவு மிக்க மனோரன்பிள்ளை

**M. K.** பேரின்பராசா.
Attorney -at - law
Notory Public & Commissioner of others

அமரரான திரு. எஸ். மனோகரன்பிள்ளை அவர்களை 1994ம் ஆண்டு மிகத்துணிவானதொரு சமூகச் சேவையாளனாகச் சந்தித்தேன். அவரது செயற்பாடுகளை அவதானித்தபோது அவருடன் தொடர்ந்து பழகவேண்டும் என்ற தூண்டுதல் உண்டானது. அதற்கேற்றால் போல் 1995ம் ஆண்டு தொடக்கத்திலேயே அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் மூலம் இருவரும் ஒரே பாடசாலையில் படித்துள்ளோம் என்பதையும் அறிய மேலும் நட்புப் பரிணமித்தது.

மனிதவுரிமைகள் நிறுவனத்தினால் நடாத்தப்படும் கருத்தரங்குகள், கூட்டங்கள் யாவற்றிலும் கலந்து கொண்டதை அவதானித்தேன். மனித உரிமைகள் தொடர்பாகவும், மனித உரிமைமீறல்கள் தொர்டர்பாகவும் மிகுந்த அக்கறையுடைய ஒருவராகத் தென்பட்டார். மனித உரிமை மீறல்கள் நடைபெறும் பிரதேசங்களுக்கெல்லாம் எத்துணைச் சிரமத்தினூடும் பயணம் செய்து சென்று, உரியவர்களுடன் தீரப் பேசிக் கண்டறிந்தவற்றைத் தைரியமாக உரிய இடத்தில் தெரிவிப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவ்வடிப்படையில் என்னையும் அடிக்கடி சந்திக்க தொடங்கினார். மனித உரிமைகள் மீறப்படல், மனிதனின் அடிப்படை உரிமைகள் போன்றவை சம்பந்தமாக இலங்கையில் என்னென்ன சட்டங்கள் உள்ளன? அதற்கு உடன்பாடாக நாம் என்னென்ன நடைமுறைகளை மேற்கொள்ளலாம்? இத்தகைய - இத்தனை சட்டங்கள் உள்ளபோதும் குற்றவாளிகள் எங்கனம் தப்பித்துக் கொள்கின்றனர்? என்றெல்லாம் தனது உணர்வுகளை என்னுடன் பாரிமாறிக் கொண்ட சந்தர்ப்பங்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல. மிகுதியான மனித நேயத்தையும், பொதுச் சேவை மனப்பான்மையும், தியாக சிந்தையையும் திரு. மனோகரன்பிள்ளையிடம் காணலாம். தன்னால் முடியாத காரியமென்றாலும் பிறர் கேட்ட உதவியை எப்படியாவது முயற்சித்து உதவிய செயல் வீரர். சமூக சேவைக்காகப் பல்வேறுபட்ட பதவிகளை வகித்தவர். சமூக சேவைகளுக்காக சங்கடங்கள் அநேகம் என்பதற்கிணங்க மக்கள் சேவைக் காக தன் வாழ்நாளில் சிரமம் அனுபவித்தவர். தான் பிறந்த ஊரில் இருப்பிடமற்ற ஏழைகளுக்காக அரச உதவியுடன் வீட்டுத்திட்டமொன்றை மேற்கொண்ட போது நாட்டு நிலமையும் எதிர்பார்த்த பண உதவியும் அதனைத்தடுத்து விட்டது. உண்மையை அறியாத சிலர் அவரைத் தவறாகப் புரிந்து போலிசில் முறைப்பாடு செய்ய போலீசார் அவரை கைது செய்யவும் முனைந்தனர். சமூக சேவையாற்றும் ஒருவர் கைதுசெய்யப்படுவதைத் தடுக்க வேண்டும் என்ற முடிவுடன் எதிர்பார்புப் பிணை ஒன்றுக்காக வழக்கிட்டு (Anticipatory Bail) அவருக்கான கைதைத் தடுத்தமை இன்னும் நினைவில் உள்ளது.

'ஓம் சாந்தி' சின்னம் பொறித்துத் தூய வெள்ளை ஆடையுடன் கலகலப்பான சிரித்த முகத்துடன் வருவார் "சோடாதான் குடிப்பீர்களாக்கும்" என்று கூறிய போது "மனந்தான் ஆத்ம சக்தியையும் இறையுணர்வையும் ஏற்பது நீங்கள் அன்பாக - விருப்பமாக எதைத் தந்தாலும் குடிப்பேன்" - என்று கூறிய அந்த நாள் மறக்க முடியாதது.

இத்தகைய நல்லபண்புகள் நிறைந்த அந்த மனோகரன்பிள்ளை அவர்களின் திடீர்மறைவு தமிழ்ச் சமூகத்துக்குக் குறிப்பிடத்தக்க இழப்பாகும் அவரது ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்பதை விட எம்மால் எதனைத்தான் செய்யமுடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவி பெருமை கொள்கிறது

மனித குலம் முன்னேற்றம் அடைந்து வரும் இக்காலத்திலேயே சலனமுற்றதாகவும் உள்ளீடு அற்ற புற வாழ்க்கையாகவும், காட்சியளிக்கின்றது எமது வாழ்க்கை அது நிலையில்லாதது. அனித்தியமானது அதன் பகட்டான வெளித்தோற்றத்தில் ஏங்கித்தவிக்கும் இன்றைய சமுதாயம் மன அமைதியைத் தேடி அலைகின்றது வாழ்க்கையின் அர்த்தத்தைப் பற்றி புரிந்துகொள்ள துடிக்கின்றது. இக் கால கட்டத்தில் எமக்குத் தேவையான அமைதி துன்பம் இல்லாத வாழ்வு இதற்கு உறுதுணை இறை வழிபாடு பற்றற்ற தியானம் சமூகப்பணியும், சமயப்பணியும் கல்முனைப்பிரதேசத்தில் தன்னலமற்ற சமய சமூகப்பணியில் முன்னின்று உழைத்து வந்தவர் அமரர் சதாசிவம் மனோகரன்பிள்ளை அவர்கள்.

நாமும் வாழ்வோம் மற்றவர்களையும் வாழவிடுவோம் என்ற சாதாரண மனித உணர்வுகளைத் தாண்டி "மற்றவர்களையும் வாழ வைப்போம்" என்ற உன்னத நோக்குடன் வாழ்கின்ற மனித உள்ளங்கள் மிகச் சில அப்படியான பிறப்புக்களில் அமரர். மனோகரன்பிள்ளை அவர்கள் ஒருவராக திகழ்ந்தார்.

மற்றவர்கள் எறிகின்ற அம்புகளை அன்பு மலர்களாக ஏற்று தன் கடமையைத் தொடர்வது அவருக்கு ஆண்டவன் கொடுத்த தனிப்பிரசாதம் என்றே கூறலாம் தனது பதவி பறி போன போதும் தனது சமூகப்பணியை நிறுத்த வில்லை மீண்டும் பதவி வந்தடைந்த போதும் எவ்வித சலனமும் இன்றி சமய சமூகப்பணியை நிறுத்தவில்லை அறநெறிப் பாடசாலைகளை அமைப்பதனை சமய சமூதாய சேவையினை பிரதானமாக ஏற்றுக் கொண்டு எதிர்கால சைவ சமய வின்மீன்களாகின்ற இன்றைய சிறார்களுக்கு ஆத்மீக உணர்வை கிடைக்க செய்வதில் தன்னிகரற்ற சேவை புரிந்து வந்தார். கல்முனைத் தொகுதி இந்துக்கள் பேரவையின் செயல்திறன் வாய்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாளர் நாயகமாகத் திகழ்ந்தார் அவரது கலாத்துக்குள் செயலதிபராக இருந்த போது மூவருக்கு பட்டம் சூட்டி பொண்ணாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். அப்போதைய நிகழ்சியிலே அறிந்திருந்தனர் மக்கள்.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் தனித் தமிழர் ஒருத்தரால் அரும்பெரும் காரியம் ஒன்று ஆக்கப்பட்டுள்ளது. அதனை இவ்விடத்தில் நான் நினைவு கூறக் கடமைப்பட்டுள்ளேன். அமரர். திரு.மனோகரன் பிள்ளை அவர்கள் கிட்டத்தட்ட 15 பேருக்கு ஒரே தடவையில் சமாதான நீதவான் பட்டம் பெற்றுக்கொடுத்தவர் ஆவார். இப்பட்டம் பெற்றவர்கள் யார் என்பதை மேலும் தெளிவுபடுத்துகின்றேன்.

கல்முனைத் தமிழ் பிரதேச செயலகத்தில் இறப்புப் பிறப்புப் பதிவாளராக கடமையாற்றிய திரு. E. K. செல்வரெட்ணம் அவர்கள், முன்னாள் அம்மன் ஆலயத்தலைவர் பாக்கியராசா அவர்கள், கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.சண்முகம், திரு. யோகேஸ்வரன், திரு. நா.செல்வநாதன், திரு. யோகசுந்தரம், திரு. ச. ஜெயராசா, திரு. சிவம் பாக்கியநாதன், திரு. டாக்டர் தோமஸ், திரு. ஆலப்பிள்ளை மற்றும் தனக்கும் சமாதான நீதவான் பட்டம் பெற்றுக்கொடுத்த பெருமை மிக்கவர் அமரர். திரு. மனோகரன்பிள்ளை ஆவார். இதனையிட்டு பட்டம் பெற்ற அனைவரும் பெருமை கொள்வார்கள் என நான் நினைக்கின்றேன்.

தற்போது பாண்டிருப்பு அரசடி அம்மன் கோயிலை புதிதாக கட்டும் போது அதற்கு அடிக்கல் விட்டவரும் அமரர் மனோகரன்பிள்ளையே அக்கட்டடத்தை நான் பார்க்கும் போது என் நினைவு அவர் உருவத்தை மீட்டுகின்றன. ஒரு அகில இலங்கை சமாதான நீதவானாக, ஓர் மரண விசாரணை அதிகாரியாக தனது இறுதிக்காலத்தில் சேவையாற்றினார். ஏழைகள் வாழ்வு மலரவும் அவர்கள் வாழ்வில் உயர்ச்சி பெறவும் பல வழிகளிலும் உதவி புரிந்து வந்துள்ளார்.

அவரது இழப்பு விளைத்த துயரில் பங்கு கொள்வதோடு. சமாதானமும் அமைதியும் சுபீட்சமும் பொருந்திய மக்கள் சமுதாயம் உதயமாக வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**பா. பரமானந்தம்** J. P,
அம்பாறை மாவட்ட இணைப்பாளர், மனித அபிவிருத்தி மையம்,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். வீரசிங்காவின் முன்னிலையில் அமரர். எஸ். மனோகரன்பிள்ளை அவர்கள் படத்தில் காணப்படுபவர்களுக்கு ஜே.பி பட்டக் கடிதம் கையளிக்கப்பட்டபின் நிகழ்ந்த கலந்துரையாடலின் ஒரு பகுதியினரை இங்கு காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் மைந்தன் அமரர். மனோகரன்பிள்ளை

அமரர் சதாசிவம் மனோகரன்பிள்ளை அவர்களின் ஓராண்டு நினைவு மலரில் எனது கருத்தும் இடம் பெறுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு நான் மகிழ்வடைகிறேன். அமரர் மனோகரன்பிள்ளை ஓர் அரசியல் வாதியாக, ஒரு அரச உத்தியோகத்தராக, ஒருஇலக்கிய வாதியாக, ஒரு ஆன்மீகவாதியாக வாழ்ந்து அமரரானவர் என்றால் அது மிகையாகாது என நினைக்கின்றேன்.

தனது பேச்சாலும் அவருக்கே உரித்தான சிரிப்பாலும் எல்லோரிடமும் அன்பாய் பழகும் சுபாவத்தினாலும் பல இதயங்களை கவர்ந்தவர். அரசியல் துறையிலே வேறு ஒரு துருவத்தை அல்லது கோணத்தை தேர்ந்தெடுத்திருந்தாலும் தான் சார்ந்த தமிழ் இனத்தை தனது சமூகத்தை பெரும் மதித்த அவர் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுடன் செயல்பட்டது மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு விஷேடமாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு தீர்க்க தரிசனமாக செயலாற்றிய ஒருவர்.

அவர் கல்முனைப் பிரதேச தமிழ் மக்களின் நலனுக்காக மேற் கொண்ட நடவடிக்கைகள் மறைமுகமாக இருந்ததே தவிர வெளிக்கொனரப்படவில்லை. அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் முக்கிய தேவைகளை கருத்திற் கொண்டு செயலாற்றிய அவர் கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகம் உருவாகுவதில் முக்கிய பணியாற்றியவர்களில் இவரது பணி முக்கியமானது எனக் கூறவேண்டும். கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உருவாக்கப்பட்ட கால கட்டம் தமிழ் மக்கள் இப்பிரதேசத்தில் பட்ட துன்ப தொல்லைகள் அச்சுறுத்தல்கள் கணக்கிலடங்கா. அவ்வாறானதொரு காலகட்டத்தில் தனது அரசியலுக்கு அப்பால் நின்று தமிழ் மக்களின் எதிர்கால விமோசனத்தை கருத்திற் கொண்டு துனிச்சலுடன் செயற்பட்ட ஒரு செயல் வீரர் இதனை இது பற்றி அறிந்தவர்கள் என்றுமே மறக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல அவர் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நன்மைக்காக என்றுமே உழைத்த அவர் நாவிதன்வெளி பிரதேச செயலகம் உருவாகவும் காரணகர்த்தாவாக இருந்தவர். எந்தவொரு விடயத்தை பொறுப்பேற்றாலும் அதனை கச்சிதமாக எல்லோரும் கவரும் விதத்தில் செய்யக் கூடிய வல்லவர்கள் இருவரை நான் இந்தக் கல்முனை மண்ணில் காணுகின்றேன். ஒருவர் அருட் சகோதரர் மத்தியூ, மற்றவர் மனோகரன்பிள்ளை. எந்தவொரு நிகழ்வையும் மிகவும் நேர்த்தியாக செய்யக்கூடியவர் அவர்.

இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் எனக்கு திரு. மனோகரன்பிள்ளை அவர்களை தெரிந்திருந்தாலும் நான் ஒரு தமிழ் பத்திரிகை செய்தியாளனாகிய பின்பே அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அமரர் மனோகரன்பிள்ளையைப் பற்றி பலரும் பல விதமாக கதைத்தாலும் அவர் என்னுடன் பழகியதைப் பொறுத்து அப்படியானவர் என்று என்னால் எண்ணத் தோன்றவில்லை. செய்தியாளர்களுக்கு ஒரு செய்திச்சுரங்கமாக விளங்கிய அவர் என்றுமே செய்தியாளர்களை மதிக்கும் கௌரவிக்கும் ஓர் பெருந்தகை.

பிறரை மதிக்கும் பண்பும் கௌரவிக்கப்படவேண்டியவர்களை கௌரவிப்பதும் அவருக்கே உரித்தான தனிக்கலை என்றே கூறலாம். எந்தவொரு காரியத்தையும் இயலாது என்றோ செய்ய முடியாது என்றோ அவர் என்றுமே கூறுவதில்லை. எந்தவொரு அமைப்பில் பங்கெடுத்தாலும் அந்த அமைப்பின் முக்கிய பாத்திரமாகவே அவர் மாறிவிடுவார் அதுவும் அவருக்கே உரித்தான தனிக்கலை.


தமிழ் மக்களுக்கும் தான் சார்ந்த விஸ்வகுல மக்களுக்கும் அவர் ஆற்றிய பணி வெளி உலகுக்கு தெரியாவிட்டாலும் எனக்கு ஓரளவேனும் தெரிந்திருந்தது. பத்திரிகையாளன் என்ற ரீதியில் என்னை அடிக்கடி சந்தித்தும் தொடர்பு கொண்டும் அவர் முன்னெடுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை எனக்கு தெரிவித்தே வந்தார். ஒரு இக்கட்டான காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்தின் ஒரு பலம் வாய்ந்த பிரபல அரசியல்வாதி ஒருவரை எதிர்த்து நின்று சில காரியங்களை செய்து முடித்தவர் அமரர் மனோகரன்பிள்ளை. அவர் கல்முனை வாழ் தமிழ் மக்களுக்காக தொடங்கிய பணிகள் பல. விட்டுச் சென்ற பணிகளும் பல. ஓர் அதிர்ஷ்டம் அற்ற அரசியல்வாதியென்று என்று பலர் அவரைப்பற்றிக் கூறினாலும் ஒரு பாராளுமன்ற பிரதிநிதி ஒருவர் செய்யக் கூடிய பல விடயங்களை அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்காக அவர் செய்துள்ளார் என்பது புலப்படாத உண்மை. அவர் விட்டுச் சென்ற பணிகள் தொடர நாம் பாடுபட வேண்டும் அவரது பணிகளை முன்னெடுத்துச் செல்ல நமக்கு இறைவன் அருள் பாலிக்கவேண்டும்.

அவரது ஆத்மா சாந்தியடைய நானும் பிரார்த்திக்கின்றேன்.

**இரா. சிறீவேல் ராஜா**
செய்தியாளர், (தினக்குரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் செய்தி

மரித்தும் மரியாத எம் மனங்களை விட்டும் நீங்காத மதிப்பிற்குரிய அமரர். எஸ். மனோகரன்பிள்ளையவர்கள்.

அம்பாறை மாவட்ட கராட்டி சம்மேளனத்தின் தலைவராக 1999ம் ஆண்டு சிஹான் கே. இராமச்சந்திரன் அகில இலங்கை கராட்டி சம்மேளனத்தின் நிறைவேற்றுத்தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் ஏகமனதாக தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

எம் கராட்டி சம்மேளனம் அதியுயர் நிலைக்கு உயரவேண்டும் என்ற தூய சிந்தனையோடு, நல்ல பல திட்டங்களை தன்னுள்ளேயே வரவழைத்து செயல்முறையில் செயற்படுத்த வேண்டும் என அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அரும்பாடு பட எண்ணிய வேளையில் அமரத்துவம் அடைந்த தன்னிகரற்ற தலைவர் அவர்.

அவரது தலைமைத்துவத்தின் கீழ் எம் சம்மேளனம் உயர்வை நோக்கி ஊர்ந்து சென்று கொண்டிருந்த போது கால தேவனின் கட்டாய அழைப்பின் பேரில் எம் சம்மேளனத்தை மட்டுமல்ல, அவர் சந்ததியை விட்டும், இந்த அணியை விட்டும் அமைதி பெற்று உயர்ந்து சென்று உரியவனிடம் மீண்டு விட்டார்.


அன்னாரது பிரிவு எம் சம்மேளனத்துக்கு மட்டுமல்ல அவர் உறவினர்களுக்கும் அன்பர்களுக்கும் பேரிழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தி பெற்று ஈருலகிலும் ஜெயம் பெற இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் மனைவி மக்கள், குடும்ப உறவினர் அனைவருக்கும் அம்பாறை மாவட்ட கராட்டி சம்மேளனம் சார்பாக கண்ணீர் ததும்பிய ஆறுதல் வார்த்தைகளையும் அனுதாபங்களையும் பகிர்ந்துகொள்கின்றோம்.

**அம்பாறை மாவட்ட கராட்டிச்சங்கம்,**

ஜே.கே.எம்.ஓ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தந்தையான அமரர். எஸ். மனோகரன்பிள்ளை
அவர்களை சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்ரேஜ் குழுவினர்
சமூகத்தொண்டன் எனப்பட்டம் அளிக்கப்பட்டு
ரவர் மண்டபத்தில் கௌரவிக்கப்பட்டபோது
சிலோன் யுனைட்டட் ஸ்ரேஜ் குழுவினரால்
அன்னாரின் சுயசரிதையைக் கேட்டிருந்தனர்.
அப்போது எனது தந்தை
அமரர். திரு. எஸ். மனோகரன்பிள்ளை அவர்கள்
அந்நிறுவனத்துக்கு வழங்கிய சுயசரிதையின்
ஒரு பிரதியை நான் இம்மலரில் இணைத்துள்ளேன்.
நீங்கள் இதனை வாசித்து அன்னாரின் சுயசரிதையை
அறியுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலோன் யுனைட்டட் ஆர்ட் ஸ்ரேஜ் குழுவினர். கொழும்பு
## திரு. எஸ். மனோகரன்பிள்ளை,

பொதுசன ஐக்கிய முன்னணி அமைப்பாளர்,
செயலதிபர் "கல்முனைத்தொகுதி இந்துக்கள் பேரவை",
உறுப்பினர் மனித உரிமைகள் பணிக்குழு அம்பாறை மாவட்டம்
அவர்களுக்கு வழங்க இருக்கும் பாராட்டு பட்டமளிப்பு தொடர்பாய்
சுயசரித சிறு குறிப்பு.

கடந்த 1940ம் ஆண்டு தைமாதம் ஆங்கில கணக்கின்படி 05.02.1940ல் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்ததும் இப்போது அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை காரியதிகாரி பிரிவில் உள்ள அன்னமலை என்னும் தமிழ் கிராமத்தில் ஆறுமகம் - சதாசிவம், ஆறுமுகம் - காளியம்மை தம்பதிகளுக்கு குடும்பத்தில் இரண்டாவது மகனாக பிறந்தது மட்டுமல்லாமல் ஏனைய ஐந்து சகோதரர்களையும் கொண்டவன் நான், கூட்டுறவுக்கடையின் முகாமையாளர், பிரபல சோதிடர், விஷகடி வைத்தியர் ஆகிய பதவிகளையும், பட்டங்களையும் தாங்கிக்கொண்ட சமூகத்தின் மத்தியில் நல்ல பெயரையும் சேவையினையும் செய்த ஆறுமுகம் சதாசிவம் அவர்கள் எனது தந்தை. எனது தாயாரும் ஒரு ஆறுமுகத்தின் மகள் பெயர் காளியம்மை எனவே ஈராறுமுகத்தோனின் பேரன் நான்.

சோதிநாயகம், தவபாலரெட்னம், ஜெயமணி, ஜெயராசா, சந்திரமணி என்னும் மூன்று பெண் சகோதரிகளையும், இரண்டு சகோதரர்களையும் கொண்ட நலமாக வாழும் சகோதரங்களையுடையவன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1940ல் பிறந்த நான் எனது ஆரம்பக் கல்வியை நான் பிறந்த ஊரான அன்னமலை கிராமத்துக்குப் பக்கத்திலுள்ள நாவிதன்வெளி அ.த.க. பாடசாலையில் 1955ம் ஆண்டுவரை அதாவது, 07ம் வகுப்புவரை பயின்றேன். இதே பாடசாலையில் எம்.என். ராஜா என்னும் ஆசிரியரிடம் தமிழும் ஆங்கிலத்தில் ஆரம்ப பாடங்களையும் படிக்கும் வாய்ப்பு எனக்கேற்பட்டது. பின்னர் எனது கல்வியை கல்முனை நகரில் 1956 - 1959 வரை கல்/ பாத்திமாக் கல்லூரியில் பயின்றேன். இப்பாடசாலையில், இம்மானுவேல் சகோதரர், அல்போன்ஸ் சகோதரர், டானியல் சகோதரர் மற்றும் அருளையர், தியாகராசா, வஸ்தியாம்பிள்ளை ஆகிய ஆசிரியர்களை நான் என்றும் மறக்கமுடியவில்லை. விளையாட்டுத்துறை, சமூகப்பணி என்பனவற்றில் எனக்கு உறுதுணை உற்ற துணையாக விளங்கியதுடன், இக்கல்லூரியில் தங்கிப்படிக்கும் மாணவனாக நான் இருந்த காலத்தில் என்வாழ்வு வளமாக அமைய வணக்கத்துக்குரிய சகோதரர். டானியல், சகோதரர் வென்சமின் ஆகியோர் எனக்கு பெரிதும் உதவினார்கள்.

1959ம் ஆண்டில் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் எனது கல்வியைத் தொடர்ந்த நான் 1961 வரை பயின்று சிரேஷ்ட பாடசாலை தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி எய்தி க.பொ.த உயர்தரம் முதலாம் வருடத்தில் கல்வி பயிலும் போது அப்போதிருந்த அரசாங்கம் பாடசாலை இல்லாத கிராமங்களில் பாடசாலை அமைக்கவும் ஆசிரியர் பணி செய்யவும் அளித்திருந்த வசதியினைப் பயன்படுத்தி நான் பிறந்த சொந்தக் கிராமமான அன்னமலையில் ஒரு பாடசாலை அமைத்து அதில் ஆசிரியராக பணிபுரிந்து 01.10.1996 முதல் ஆசிரியராக நியமனம் பெற்ற என்கு ஆரம்பக் கல்வி பெற்ற பாடசாலையிலேயே முதல் நியமனமும் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963ம் ஆண்டில் ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சையில் சித்தி எய்தினேன். அதே காலத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கும் விண்ணப்பித்திருந்தேன். இதே காலத்தில் மன்னம்பிட்டி கறுப்பளை போன்ற கிராமங்களில் ஆசிரியராய் பணிபுரிந்தேன். ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சையிலும், கூட்டுறவுப் பரிசோதகர் பதவிக்கான பரீட்சையிலும் சித்திபெற்றேன். ஆசிரியர் பதவியிலிருந்து விலகி கூட்டுறவுப் பரிசோதகர் பதவியினை 01.01.1965 முதல் கூட்டுறவு பரிசோதகர் பதவியில் நியமனம் பெற்ற நான் 1981, - வரை 16 வருடங்கள் கூட்டுறவுப் பரிசோதகர் பதவியில் இருந்து கொண்டே சங்க எண் பார்வையாளர், விளக்க உத்தியோகத்தர் ஆகிய பதவிகளில் திறமையும் சிறப்பும் உடையவராகவும், கூட்டுறவு பயிற்சி விரிவுரையாளர் பதவி உட்பட சகல பதவிகளையும் திறம்படச் செய்ததுடன் சமூக சேவையிலும் ஈடுபட்டுவந்தேன்.

**சமூக சேவையில் ......**

01. விவசாய விளைவுப்பெருக்கக் குழு - தலைவர்
02. கிராமசபை விசேட ஆணையாளர் பதவி
03. சம்மாந்துறை - நாவிதன்வெளி பிரதேச இணக்க சபையின் தவிசாளர் பதவி.
04. கிராம முன்னேற்றச் சங்கங்களின் ஒன்றியம் - தலைவர் பதவி
05. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவி.
06. இப்பகுதி ஆலயங்களின் ஒன்றியம் - தலைவர் பதவி
07. "சமூக நல்வாழ்வுக் கழகம்" செயலாளர் பதவி ஆகிய பதவிகளில் நீண்டகாலம் உழைத்து, சேவையாற்றியதுடன், இப்போது .....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. அம்பாறை மாவட்டம் தமிழ்ப் பகுதி பொது ஜன முன்னணி அமைப்பாளர்.

ஆ. கல்முனைத் தொகுதி இந்துக்கள் பேரவையின் செயலதிபர்.

இ. அம்பாறை மாவட்டம் தமிழ் பிரதேசத்தின் புனர்வாழ்வு, புனரமைப்பு குழுவின் உறுப்பினர்.

ஈ. அம்பாறை மாவட்டம் அபிவிருத்திச் சபை உறுப்பினர்.

உ. மனிதஉரிமைகள் குழுவின் கல்முனைப் பிராந்திய அம்பாறை மாவட்ட அங்கத்தவர்.

ஊ. அம்பாறை மாவட்டம் தமிழர் மகா சங்கத்தின் உப - தலைவர்.

எ. அம்பாறை மாவட்டம் கரையோரப் பிரதேச, கராட்டி ஜுடோ சங்கத்தின் தலைவர் பதவி, ஆகிய பதவிகள் அத்துடன் சம்பந்தப்பட்ட பணிகளையும், செய்து வருகிறேன். மேலும் இவ் அமைப்புக்களில் பிரதிநிதிப்படுத்துவதுடன் பதவி வகித்தும் வருகிறேன். இத்துடன் எனது அனுபவம் தொடர்பாக.

## வெளிநாட்டு வேலை வாய்ப்பும் பயிற்சியும்

பல பதவிகளை வகித்த/ வகிக்கும் நான் 1988/90ம் ஆண்டு காலப்பகுதியில் சவூதி அரேபியாவிலுள்ள ஜெட்டா (ஜித்தா) என்னும் இடத்தில் "சியாங்கோ" கம்பெனியில் நிர்வாக உத்தியோகத்தராக இரு வருடங்கள் கடமையாற்றியவன் நான். இக்காலத்தின் போது மேற்குறிப்பிட்ட கம்பெனியின் அனுசரணையுடன் பொருட்களஞ்சியப்படுத்தல், பொருட்கள் பாதுகாப்பு துறைமுக அபிவிருத்தி பொருட்கள் பட்டுவாடா போன்ற விடயங்களுக்காக நடந்த 09 மாத பயிற்சியில் பங்குபற்றி அதற்கான மிகச்சிறப்பு பெறுபேற்றினையும் பெற்றேன். பாராட்டப்பட்டதுடன் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டும் இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இலங்கையில் கூட்டுறவுத் திணைக்கள பணியாளர்களுக்கு பயிற்சியினை திருகோணமலையிலுள்ள கூட்டுறவு பயிற்சி நிலையத்திலும், கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான பயிற்சியின் முதலாம் பயிற்சி நெறி, இரண்டாம் பயிற்சி நெறியினையும் பெற்று அக்கால பயிற்சி நெறியில் மூன்றாவது இடத்தினையும் பெற்று சிறப்பு எய்தி இருக்கிறேன், இது சிறந்த பெறுபேறாகவும் வாய்ந்துள்ளது.

பொருளாதாரம், கணக்கியல்

எண்பார்வை, வியாபார நிர்வாகம்,

கூட்டுறவுச் சட்டமும், பொதுச் சட்டமும்

ஆகிய பாடங்களில் விசேட பயிற்சியினையும் மேற்குறித்த பயிற்சியின் போது பெற்றுள்ளேன்.

ஆங்கிலம், சிங்களம், தமிழ் மூன்று மொழிகளிலும் பரிச்சயமான கல்வித் தகைமை பெற்ற நான் இப்பகுதி தமிழ் அரசியல்வாதிகளுள் ஒருவராக கடந்த 27 வருடங்களாக இருந்து வருகிறேன். அரசியலில் SLFP கட்சியில் மாறாது இருந்து சேவை செய்து வருகிறேன்.

சமூக நலன், பொதுச்சேவை, சமய நெறி இவைகளில் பெரிதும் பங்கு கொண்டவன் நான். கடந்த 1994 பாராளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் போட்டியிட்டவன். அதுவும் அம்பாறை மாவட்டத்தின் தமிழர் சார்பில் அரசு கட்சியைச் சேர்ந்த ஒரே ஒரு அமைப்பாளரும் நானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் இப்பகுதியில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்கலிலும் விசேடமாக தமிழ் மக்களும் தமிழுக்கும் இந்து சமயத்துக்கும் தொண்டுகள் புரிந்து வருவதுமட்டுமல்லாமல் சமூகப்பணிகளின் தொண்டுகளிலும் என்னையே உட்படுத்தி சேவை புரிந்து வருகிறேன்.

**சமூகப்பணியில்:**

01. வீடற்ற வசதி குறைந்தவர்களுக்கு அவர்களின் சமூக நல்வாழ்வு கருதி வீட்டு வசதிகளும்.
02. இப்பகுதி மக்கள் மட்டுமல்ல மற்றும் பல பகுதி மக்களுக்கும் சமூகநல முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்து மலசல கூடம் வீடுகள், போக்குவரத்து, நிலப்பயிற்சி ஆகியவைகளை செய்து வருகிறேன்.
03. பாராதீனப்படுத்தாமல் இருந்த காணிகள் நிலங்களுக்கு இயலுமானவரை நீர்பாசன வசதிகள்
வழங்கியதுடன் காணி, காணி உறுதிப்பத்திரங்கள் உட்பட குளங்கள் புணரமைப்பு விடயத்தில் சமூக சேவைக்குழுவுடன் பணியாற்றி வருகிறேன்.
04. இலங்கையின் பல்வேறு கிராமங்களிலும் விசேடமாக அம்பாறை மாவட்டம் தமிழ் பிரதேசங்களிலும் கிராமங்களிலும் கிராம அபிவிருத்தி பணியினை மேம்படச் செய்தல்
எனும் நோக்குடன் கிராம முன்னேற்ற மன்றங்களையும், சமூகநலச்சங்கங்களையும் அமைத்து செயற்படுத்தி தமிழ் கிராமங்கள் ஒவ்வொன்றையும் மேம்படச்செய்தல் எனது நோக்கம். இதனை நடை முறைப்படுத்தி வருகிறேன் அன்னமலை, சொறிக்கல்முனை, குடியிருப்புமுனை, கோமாறி, மத்தியமுகாம் ஆகிய கிராமங்கள் இவற்றுக்கு எடுத்துக்காட்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கிராமங்கள் தோறும் சுய உதவி வீடமைப்புச்சங்கங்களை உருவாக்கி அதன் மூலம் அரச செவிகளுக்கு பல கோரிக்கைகளை கேட்க செயற்படவும் ஆவன செய்ததுடன் செய்கிறேன.

06. வுவிவசாய குளங்கள் திருத்தும் பணியினை கிராமங்கள் உதவியுடன் அம்பாரை மாவட்டம் தமிழ் கிராம மக்கள் செய்து வந்ததன் மூலம் பல கிராமக்குளங்கள் அரசின் உதவியுடன் முன்னேற்றமடையச் செய்யப்பட்டுள்ளது. ஏழை இளம் விவசாயிகள் பலனடையச் செய்ததுடன் செயலபடுத்து கின்றேன்.

இதனைவிட சமயப்பணிகளில் அம்பாறை மாவட்டம், கல்முனைத்தொகுதி, பொத்துவில் தொகுதி சம்மாந்துறை தொகுதிகளில் தமிழ் பிரதேசங்களில் 56 க்கு மேற்பட்ட (இந்துசமய) அறநெறிப்பாடசாலைகள் அமைக்கப்படவும், உதவியதுடன் சேவை புரிந்து வருகின்றேன்.

இப்பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் 100 மேற்பட்டமாணவர்கள் கல்வி பயில்கின்றனர். பெயர்க் குறித்து 100க்கு மேற்பட்ட படித்த சமயப்பாடத்தில் சித்திபெற்ற இளைஞர்களையும் யுவதிகளையும் ஆசிரியராக நியமித்து 5000க்கு மேற்பட்ட மாணவர்கள் இவ்அறநெறிப்பாடசாலைகளில் பயில நன்மை பெற வாய்ப்பும் ஒழுங்கும் செய்து அவைகளை கவனித்து மேற்பார்வை செய்யும்பணிபுரிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இப்பகுதியில் இந்துக் கலாசார திணைக்களத்தின் உதவியுடன்

01. யோகாசனப்பயிற்சி வகுப்புக்கள், யோகாசன விழாக்கள்

02. சமயப் புத்தக வெளியீடு

03. சமய இலக்கிய விழாக்கள்

04. கந்தபுராணம் படித்தலும் பயன் சொல்லலும் - பயிற்சி நெறி

05. சுவாமிகள், பெரியோர்களை ஆலயங்களுக்கு அழைத்து வகுப்புக்கள் சமய விழாக்கள் நடாத்தியமை அருளாசி வழங்குதல்.

06. சாஸ்திரிய சங்கீத வகுப்புக்கள் நடாத்தியதுடன், மேலும் நடாத்த நடைபெற பணிகளை சமயத்துறைகளிலும் சமூகத்துறையிலும் இன்னும் செய்து வருகிறேன்.

அ) 1990 ம் ஆண்டுக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளுக்கான கழகங்களை அமைத்து சுமார் 2000க்கு மேற்பட்ட குடும்பங்களின் நிலை உயர்த்தப்பட்டது.

ஆ) குழப்பங்கள் துக்ககரமான சம்பவங்களின்போது நிவாரண உதவி வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. ஈமச்சடங்கு, மரணச்சடங்குகளை உதவியற்றோருக்கு வழங்குவதற்காக ஈமச்சடங்கு சங்கங்களை அமைத்து உதவுதல் உதவி புரிதல்.

ஈ. மக்கள் தேவை பயன் ஒழுங்குகள் சிறைவாசம் ஆகியவைகளில் உதவி செய்தல்.

ஆசிரியர் பதவி, கூட்டுறவுப் பரிசோதகர் பதவி, பொ.ஐ.மு அமைப்பாளர் பதவியில் இருக்கும் நான் 1994ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராக போட்டியிட்டு தோல்வியைத் தழுவியுள்ளேன்.

இப்போது பிரபல சமூக சேவையாளராகவும் அரசியல் பிரமுகராகவும், இருக்கும் நான் மேலும் பணிபுரிவதில் திறமையுடன் திடசித்தத்துடன் ஈடுபட்டுவருகிறேன்.

- ☐ சங்கீத வகுப்புக்கள்
- ☐ தொழிற் பயிற்சி நிலையங்கள்
- ☐ கைத்தொழில், கமத்தொழில் வாய்ப்புக்கள்
- ☐ நலிந்தோர் புனர்வாழ்வு
- ☐ சமூக நலன்புரி மன்றங்கள்
- ☐ விளையாட்டு கழகங்களின் நடவடிக்கைகளில் மேலும்

சேவைகள் புரிய காத்திருக்கிறேன், சேவைகள் புரிகிறேன்.

இவைகளில் சிரத்தையுடன் ஈடுபட்டு வருகிறேன். சேவை புரிகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். மனோகரன்பிள்ளை,

S. Manogaranpillai
Organiser SLFP / PA
Digamadulla Dist. (Tamil Area)
Pandiruppu 2, Kalmunai.


- பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர்.
  அம்பாரை மாவட்ட தமிழ் பிரிவு
- செயலதிபர், கல்முனைத்தொகுதி இந்துக்கள் பேரவை.
- தலைவர்-அம்பாறை மாவட்டம் கல்முனை ஜுடோ கராட்டி சங்கம்.
- தலைவர் சமூக நலன்புரி மன்றம்
  கல்முனைத் தொகுதி + சம்மாந்துறைத் தொகுதி.

பாண்டிருப்பு-02,

கல்முனை,


1999-08-04,

தொலைபேசி இல: 067-29544



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மக்களுக்காக தன்னால் விடப்பட்ட அறிக்கைகளின் சில பகுதிகள் வீரகேசரி, தினக்குரல், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் காணப்படுகின்றது அவற்றை இங்கு காணலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை தமிழ் மக்கள் குறைபாடு

## தூதுக்குழு பொது நிர்வாக அமைச்சரை சந்திக்கும்

கல்முனை.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நிருவாக ரீதியான அவலங்களை பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு எடுத்துக் கூறுவதற்காக தூதுக்குழுவொன்றை பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பளாரும் கல்முனைத் தொகுதி இந்து பேரவைத் தலைவருமான எஸ். மனோகரன்பிள்ளை நியமிதுள்ளார்.

பெரியநீலாவணை பிரதான வீதி அருகிலுள்ள ஆலயத்தில் (இது தற்போது பொலீஸ் காவலரண் பகுதிக்குள் அமைந்துள்ளது. நித்திய பூஜை நடைபெற ஆவன செய்யவும் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை பூரணத்துவவமுடைய செயலகமாகமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும்.

கல்முனை தமிழப் பகுதி மயான நிலம் ஆக்கிரமிப்பு தொடர்பாகவும் அமைச்சருக்கு எடுத்துக்கூறி நிவாரணம் பெறும் பொருட்டு இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் பெரிய நீலாவணையின் மூன்று ஆலயங்களின் நிருவாகிககள் கிராமோதய உறுப்பினர்கள் ஆகிய 30பேர் அடங்கிய தூதுக்குழு அமைச்சரை நேரில் சந்தித்து அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இன்னல்களை எடுத்துக்கூறவுள்ளது.

08-03-1997, **தினக்குரல்**

## கிராமம் வெறிச்சோடிக்கிடக்கிறது.

காரைதீவு,

குடியேற்ற கிராமமான 4ஆம் கொலினி இரவானதும் வெறிச்சோடி மயானமாக காட்சியளிக்கிறது. இங்கு வாழ்ந்து வந்த மக்கள் பலரும் வீரச்சோலை, பாண்டிருப்பு பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களை பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைப்பாளர், எஸ். மனோகரன்பிள்ளை சென்று பார்த்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்துள்ளார். தமிழ்ப் பகுதிகளில் ஊர்காவல் படையினரின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளதாக இவர் தெரிவிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனைப் பிரதேசத்திலுள்ள சேனைக்குடியிருப்பில் 111 குடும்பங்களுக்கும், 4ம் கொலனியில் 68 குடும்பங்களுக்கும் இந்நிவாரணம் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவங்கள் நேற்று வெள்ளிக்கிழமை அமைப்பாளர் மனோகரன்பிள்ளையினால் விநியோகிக்கப்பட்டன.

19.08.95 வீரகேசரி

## 4ஆம் கொலனி, சேனைக்குடியிருப்பு அகதிகளத்கு உலர் உணவு விநியோகம்!

(நமது நிருபா)

அம்பாறை 4ஆம் கொலனியில் நடந்த பாதுகாப்பு படையினர் மற்றும் பொலீசாரின் அட்டுழியம் காரணமாக சொத்து உடமைகளை இழந்து இடம் பெயர்ந்து பிற ஊர்களில் வாழும் (சுமார் 2000 பேருக்கு) மேலும் மூன்று தினங் களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க அத்தியாவசிய சேவை ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த குடும்பங்களின் அவல நிலை குறித்து தமிழர் கூட்டனியின் தலைவர் எம். சிவசிதம்பாரமும், அரசியல் குழு உறுப்பினர் எஸ்.சேனாதிராஜாவும், நீலன்திருச்செல்வம் எம்.பியும் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவந்திருத்தனர்.

இடம்பெயர்ந்தோர் மீளக்குடி யேற்றப்படும் வரை அவர்களுக்கு உலர் உணவுகளும் வைத்திய வசதிகளும் வழங்கப்பட வேண்டுமென்று மாவை சேனாதிராஜா பிரதி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் மகிந்த விஜயசேகராவை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

கல்முனை, சேனைக்குடியிருப்பு பகுதியிலிருந்து வெளியேறிய குடும்ங்களுக்கும் உலர்உணவு நிவாரணம் மேலும் மூன்று தினங்களுக்கு வழங்கப்படும்.

அம்பாறை மாவட்டத்திலும் பேசாலையிலும் நடந்த வீடெரிப்பு சம்பவங்கள் பொதுமக்கள் உயிரி ழப்புக்கள் குறித்து முழு விபரங்களையும் தனக்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி பொலீஸ் மா அதிபரை பணித்திருந்தார்.

19.08.95 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னமலை தையல் பயிற்சி நிலையத்திற்கு மூடுவிழா.

காரைதீவு.

சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள அன்னமலை கிராமியத் தையற்பயிற்சி நிலையம் கடந்த இரு மாதங்களாக மூடப்பட்டு காணப்படுகிறது.

கடந்த ஜனவரியன்று வடகிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திருமதி. கே. முரளிதரன் திறந்து வைத்த இந்நிலையம் நான்கு மாதங்கள் இயங்கிய நிலையில் திடீரென மூடப்பட்டுள்ளது.

இதனால் பயிற்சிபெற்ற 30 மாணவிகள் நடுத்தெருவில் விடப்பட்டுள்ளனர். இவர்களுள் 20 மாணவிகள் பாடசாலைப் படிப்பை இடைநடுவில் கைவிட்டு சுயதொழில் பழகவேண்டி இந்நிலையத்தில் சேர்ந்து கொண்டவர்களாவர்.

35 வருடகால வரலாற்றில் சம்மாந்துறை தமிழ்ப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரேயொரு முதல் தையற் பயிற்சி நிலையம் இதுவாகும்.

இதனை மூடியமைக்கு அம்பாறை மாவட்ட (தமிழ்) பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் ஆட்சேபனை தெரிவித்து மாகாண ஆளுநருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

"இம் மூடுவிழா திட்டமிட்டு தமிழ் பிரதேச அபிவிருத்தியில் கைவைக்கும் முயற்சி என நம்புகிறேன். கல்வியைக் கைவிட்டு தொழில் பழக வந்த மாணவிகளுக்கு வகைசொல்ல வேண்டிய பொறுப்பு எம்முன் உள்ளது. எனவே பயிற்சி நிலையத்தை திறந்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(வீரகேசரி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு பணியாற்றுவதே அரசாங்கத்தின் பணி நாம் அதை உரியமுறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

## பாண்டிருப்பு மக்கள் எழுச்சிகிராம திறப்பு விழாவில் அமைப்பாளர் உரை

(காரைதீவு குறூப் நிருபர்)

"மக்களுக்கு பணி- யாற்றுவதே அரசாங்கத்தின் பண்பாகும் அதை உரிய முறையில் நாம் பயன்படுத்த வேண்டும். கட்சி ரீதியில் நாம் சண்டையிட்டுக் கொண்டால் எந்தப் பலனும் கிடைக்கப் போவதில்லை."

இவ்வாறு ஜனஉதான மக்கள் எழுச்சி வீடமைப்புத் திட்டத்தின் 243வது எழுச்சிக்கிராமமான அம்பாறை மாவட்டத்திலுள்ள பாண்டிருப்பு எழுச்சி கிராமத்தை திறந்துவைத்து உரையாற்றிய அம்பாறை மாவட்டப் பொ- துஜன முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை கூறினார்.

"1990க்கு பிறகு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் வீடிழந்து உயிரிழந்து கஷ்டப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு குரல் கொடுக்கும் ஒரே ஒரு தமிழனாக இருந்து வருகி றேன்.

அன்னமலையில் கல் முனை. பொத்துவில், அக்கரைப்பற்று தமிழ் பிரதேச 3 தபாலகங்கள் தரங்குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நான் உடனடியாக தலையிட்டு அதனை நிறுத்துமாறு கோரியுள்ளேன்.

வெகுவிரைவில் பெரியநீலாவணையிலும், அன்னமலையிலும் இப்படியான மக்கள் எழுச்சிக் கிராமங்கள் ஏற்படுத்த நடடிவக்கை எடுபேன். சகலராலும் ஒடுக்கப்பட்ட பாண்டிருப்பு மக்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாகும் . தேசிய வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் பத்மநாதனின் சேவை இங்கு பாராட்டத்தக்கது.

தமிழர்க்கு பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல உயிர்ப்பிரச்சினையே பிரதானமாகவுள்ளது என அமைச்சர் இந்திகவிடன் கூறினேன்.

நாம் உரிமைகளை விட்டு கொடுக்கக் கூடாது. அதேபோல உணர்வுகளையும் அடகுவைக்கக் கூடாது. தமிழ் மக்களை ஓரணியில் இழுத்துச் செல்ல வேண்டிய காலகட்டம் இது" என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வுப்பொதி பற்றி மக்கள் கருத்து

தீர்வுப்பொதி (Package) என்றால் என்ன? இது தீர்வுக்கு வழிவகுக்குமா? இவை எம் முன் எழுகின்ற கேள்விகள்.

இன்று தீர்வுப்பொதி அரச உயர்மட்டங்களிலேயே வெகுவாக சிலாகிக்கப்பட்டு வருகிறது. அரச எம்.பி.களுக்கு கருத்தரங்குகூட நடத்தப்பட்டது. ஆனால் இது தொடர்பாக மக்களுக்கு எந்தளவு தூரம் விளங்கும் என்பதை சொல்லாமல் சொல்லலாம்.

உள்ளூர் அரசியல்வாதி எஸ். மனோகரன் பிள்ளையை சந்தித்துக் கேட்டபோது "தீர்வுப்பொதி ஒருபோதும் தீர்வினைத் தருவதில்லை தரப்போவதுமில்லை. அதில் என்ன இருக்கின்றது என்பதே மக்களுக்கு தெரியாது. வட-கிழக்கு இணைப்பு, தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றி ஒன்றுமே கூறப்படவில்லை. அடுத்து புலிகள் ஏற்றுக்கொள்ளா விடின் இதனைக்கொண்டு வந்து என்ன பிரயோசனம்?" இப்படிக் கூறினார்.

பாடசாலை அதிபர் எஸ்.சந்திர மோகனை கேட்டபோது "தீர்வுப்பொதி பற்றி எனக்கு அவ்வளவாக விளங்காது. அவ்வப்போது ரி.வி.யில் ஏதோ பேசுவார்கள், கலந்துரையாடல் வைப்பார்கள். ஆனால் எமது பகுதியில் இது தொடர்பாக கருத்தரங்கோ, கூட்டமோ நடைபெற்ற தில்லை. எனவே "தீர்வுப்பொதி" நல்லதா? கெட்டதா? என்று கூற இயலாமலுள்ளது" என்றார்.

பாடசாலை மாணவன் எம். சுந்தரராஜனைக் கேட்டபோது "தீர்வுப் பொதி என்றால் என்ன" யாரால் எங்கே கொண்டுவரப்பட்டது? எதற்காக? என்றே தெரியாது. முதலில் அதுபற்றிக் கூறுங்கள். பின்பு விமர்சனம் செய்யலாம்" என்றார்.

பாமர விவசாயி எஸ். வேல்முருகுவைக் கேட்டபோது "ஐயா இந்தப் பொதி என்றால் என்ன? ஒன்று மட்டும் சொல்லுறன் சமாதானத்தை ஏற்படுத்துவார் என்றுதான் சந்திரிக்கா அம்மையாருக்கு ஜனாதிபதி தேர்தலில் ஓட்டுப்போட்டோம். ஆனால் இன்று பொதி, சொதி என்று பேய்க்காட்டுவது எமக்குப் பிடிக்கவில்லை.

**06-08.1997 வீரகேசரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி என்றொரு சக்தியும் இருக்கு, அதனையும் யோசித்து முடிவெடுக்கட்டும்'' என்றார்.

இவைகளிலிருந்து என்ன புரிகிறது. "தீர்வுப்பொதி" தொடர்பாக மக்களுக்கு விளக்கம் குறைவு என்பதேயாகும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கூறியிருப்பதையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். "தீர்வுப்பொதியில் இதுவரை முக்கிய விடயங்கள் ஆராயப்படாமல் இருப்பது தீர்வுக்கான வழிமுறைகளை நோக்கி அரசு இன்னும் செல்லவில்லை என்பதையே காட்டுகிறது.

வட கிழக்கு இணைந்த ஓர் அலகாகவும், இப்பிரதேசத்தின் காணிகள், பொலிஸ் நிருவாகம் என்பன வட-கிழக்கு இணைந்த பிராந்திய அலகின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக் கூடியதான அரசியல் தீர்வொன்றையே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். என்று கூறியுள்ளார்.

அவர் ஒரு கல்விமான் காரைதீவைச் சேர்ந்தவர். அவரது கருத்து பலரையும் சிந்திக்க வைக்கிறது. இந்நிலையில் "தீக்கோழி" போல் புலியைப் பற்றிப் பிரச்சினையில்லை. எதிர்கட்சி எதிர்த்தாலும் தீர்வுப்பொதியை அமுலாக்கியே தீருவோம் என்று கூறுவது நடைமுறைக்கு ஒவ்வாதது.

நாளைக்கு இப்'பொதி' இன்றைய ஒப்பந்தத்தைப்போல் செயலழிக்க நேரிட்டால்... இப்பிரச்சினை இழுபட்டுக் கொண்டு போவது உறுதி. அப்படியானால் "தீர்வு",'சமாதான யுத்தம்'' என்று இழுத்தடித்துக் கொண்டு போவதுதான் தந்திரமா? மிஞ்சுவது மனித நடமாட்டார்கள் யுத்த பூமிதான் என்பதை மறந்து விடலாகாது.

மேலும் தாமதமாகாமல் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது சாலச் சிறந்தது.
வி.ரி.சகாதேவராஜா

06.08.1997 **வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னமலை ஆஸ்பத்திரி இயங்கத் தொடங்கவில்லை

காரைதீவு,

அம்பாறை மாவட்டத்தில் சம்மாதுறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 15ஆம் கொலனி வேம்படி அன்னமலையில் கிராமிய ஆஸ்பத்திரி ஒன்று 4 மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கபட்ட போதிலும் மேற்படி ஆஸ்பத்திரி இன்னும் இயங்கவில்லை.

அங்கு டாக்டர்கள் செல்வதில்லை. அதேபோல் சொறிக்கல்முனை ஆஸ்பத்திரிக்கும் டாக்டர் செல்வதில்லை. இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். நோயளர்கள் பலத்த சிரமத்திற்கு மத்தியில் கல்முனை-சம்மாந்துறை பகுதிகளுக்கு வரவேண்டியுள்ளது.

*22.08.95 தினகரன் செய்தி,*

# நன்றி தெரிவிப்பு

(காரைதீவு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்ட இரண்டு தமிழ்க் கிராமங்கள் மூன்றுநாள் இடைவெளியில் தாக்குதலுக்குள்ளான போது இதயசுத்தியுடன் அமைதியை நிலைநாட்ட முற்பட்ட விசேட அதிரடிப்படையினருக்கு அம்பாறை மாவட்ட பொது முன்னணி அமைப்பாளர். எஸ். மனோகரன்பிள்ளை நன்றி தெரிவித்தார்.

10ஆம் திகதி சேனைக் குடியிருப்புக் கிராமமும் இனவாதக் கும்பலொன்றினால் தாக்கப்பட்டு 75க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டு நாசாமாக்கப்பட்டது. தெரிந்தே. அப்போது இருவர் கொல்லப்பட்டுள்ளனர். 17பேர் காணாமற் போயினர்.

அவ்வேளை சொறிக்கல்முனை, அன்னமலை, சென்றல் காம்ப் பகுதியில் முகாமிடப்பட்டுள்ள விசேட அதிரடிப்படையினர் விரைந்து செயற்பட்டதனால் மேலதிக உயிரிழப்புகளையும் சேதத்தையும் தவிர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசு பொது ஊழியர்சங்க கோரிக்கை**

# சமரசமாக தீர்த்து வைக்க அமைப்பாளர் நடவடிக்கை

(காரைதீவு குறூப் நிருபர்)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர்சங்கம் முன்வைத்துள்ள 13 அம்சக் கோரிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட செயலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமரசமாக இப்பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நடவடிக்கைகளில் அம்பாறை மாவட்ட பொதுஜன முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை ஈடுபட்டுள்ளார்.

இதுதொடர்பான சந்திப்பொன்று எதிர்வரும் 9ஆம் திகதி காலை 10.00மணிக்கு வட-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் காரியாலயத்தில் இடம் பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை அமைப்பாளர் மேற்கொண்டு வருகிறார்.

அன்று தொழிற்சங்கத்தினரும், சம்பந்தப்பட்ட நிருவாக அதிகாரிகளும் கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம் தனது 13 அம்சக் கோரிக்கை தொடர்பாக எதிர்வரும் 20ஆம் திகதி மறியல் போராட்டமொன்றை நடத்ததிட்டமிட்டுள்ளது.

# நியமனம் கோரிக்கை

கல்முனை வலயத்தில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நியமனம் பெறாமல் இருக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதன் மூலம் நிவர்த்தி செய்யலாம் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரனவை நேரில் சந்தித்த பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர். எஸ். மனோகரன்பிள்ளை இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

682 தொண்டர் ஆசிரியர்களுக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படாமலுள்ளது. புதிய ஆளுநர் நியமனம் இடம்பெற்ற பின் இவர்களுக்கு நியமனம் வழங்குவதாக ஏற்கனவே அமைச்சர் கூறியிருந்தமையும் இச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

18.02.1994 **வீரகேசரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்ட தமிழ் மாணவர் வெட்டுப்புள்ளியை குறைக்க ஜனாதிபதியிடம் கோரிக்கை

மண்டூர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூல மாணவர்களுக்கான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளி அதிகரிக்கப்பட்டுள்ளதன் மூலம், தமிழ் மக்களுக்கு அநீதி இளக்கப்பட்டுள்ளது. "என்று அம்பாறை மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி தமிழ்ப்பிரிவு அமைப்பளா் எஸ்.மனோகரன் பிள்ளை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார். அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது .

இன்றைய அமைதியற்ற சூழலினால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கடந்த 3 ஆண்டுகளாக ஒரே நிலையில் இருந்த வெட்டுப்புள்ளி இம்முறை உயர்த்தப்பட்டுள்ளது. யுத்த நிலையில் மாற்றமோ அல்லது கல்வியில் வளர்ச்சியோ ஏற்படாத நிலையில் செய்யப்பட்ட இம்மாற்றம் தமிழ் மாணவர்களின் உயர்கல்வியை குறைத்துள்ளதுடன் தமிழினதும் தமிழ்ப் பிரதேசத்தினதும் உயர்கல்வி வாய்ப்பினையும் நசுக்கியுள்ளது. கல்வி வளர்ச்சியின் நோக்கத்துக்கும் குந்தகமாக அமைந்துள்ளது.

எனவே, இவற்றைக் கவனத்தில் எடுத்து ஏற்கனவே இருந்து வந்த வெட்டுப்புள்ளியை அமுல் நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

# "அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களை ஆசிரிய சேவையில் சேர்க்க வேண்டும்" அம்பாறை மாவட்ட பொதுஜன முன்னணி அமைப்பாளர் கோரிக்கை.

(காரைதீவு நிருபர்)

"நாட்டிலுள்ள அறநெறிப் பாடசாலைகளில் ஆசிரியர்களாக பணியாற்றுவோரை ஆசிரிய சேவையில் சேர்த்துக்கொள்ள வேண்டும். தகம் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சகல உதவி ஒத்தாசைகளையும் மற்றும் சலுகைகளையும் இந்து சமய அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் வழங்கவேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான கோரிக்கையை கலாசார அமைச்சர் லஷ்மன் ஜெயகொடியிடம் அம்பாறை மாவட்ட பொது ஜன முன்னணி அமைப்பாளர் எஸ்.மனோகரன் பிள்ளை விடுத்துள்ளார். "அம்பாறை மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் இன்றைய நிலை" எனும் தலைப்பில் உரை நிகழ்த்திய அவர் மேற்படி கோரிக்கையை பாண்டிருப்பில் வைத்து விடுத்துள்ளதுடன் மகஜராகவும் அதனை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"அம்பாறை மாவட்டத்தில் 5 தேர்தல் தொகுதிகளில் இந்துசமய அறநெறிப் பாடசாலைகள் சுமார் 60 உள்ளன. இவற்றில் 200க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றனர். இந்து சமய கலாசர அமைச்சின் அனுசரனையோடு இயங்கும் இப்பாடசாலைகளுக்கு அரச உதவிகள் இல்லையென்று கூறலாம். இந்துக்கோயில்கள் மற்றும் தன வந்தர்களின் உதவியுடனேயே இயங்கி வருகின்றன.

இங்கு சேவையாற்றும் ஆசிரியர்களோ எதுவித வேதனமுமின்றி பணியாற்றுகின்றனர்.

இன்றைய நிலையில் அம்பாறை மாவட்ட தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டே வருகின்றார்கள். வியாபாரமானாலும் சரி விவசாயமானாலும் சரி பாதை திருத்தமானாலும் சரி எந்த விடயத்தை எடுத்துக்கொண்டாலும் தமிழினம் புறக்கணிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்ட ஆலயங்கள் கடந்த வன்செயலில் அடித்து நொருக்கப்பட்டன. இதுவரை அரசினால் ஏதாவது கிடைத்ததா?

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் என்ன மூன்றாந்தர பிரஜைகளா?

கடந்த 16ம் திகதி 'வீரகேசரி' யில் அஸ்வர் எம்.பி விடுத்த கோரிக்கை நியாயமானதே எம்பிக்களின் வரவு - செலவுத்திட்ட நிதியிலிருந்து தகம் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா ஒதுக்கலாம் என்றால் ஏன் ஏனைய மத ஸ்தாபனங்களுக்கு ஒதுக்கமுடியாது? அந்த சுற்றறிக்கையில் இந்து, இஸ்லாம் மதங்களும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

எனவே இங்குள்ள அறநெறிப் பாடசாலைகள் தரம் பிரிக்கப்பட்டு, ஆசிரியர்கள் வேதனம் வழங்கப்பட்டு சமய விழிப்புணர்வை ஏற்படுத்த இவ்வரசு காலத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும்" எனக்குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலுமொரு கூட்டம் வெகுவிரையில் பாண்டிருப்பில் நடைபெறவுள்ளது.

21.09.95 வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைபற்றிய விழிப்புணர்ச்சியை எல்லைக் கிராமங்களில் ஏற்படுத்துவது அவசியம்.

## கருத்தரங்களில் பேச்சு

(காரைதீவ்)

"மக்களிடையே மனித உரிமை பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படுவது இன்றைய காலத்தின் தேவையாகும் என்று அண்மையில் கல்முனையில் நடைபெற்ற மனித உரிமைகள் தினம் தொடர்பான கருத்தரங்குகளில் சுட்டிக்காட்டப்பட்டது".

மனித உரிமை ஆணைக்குழுவம், சரீரம் ஸ்ரீலங்கா தேசிய மன்றமும் இணைந்து கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழு மண்டபத்தில் மேற்படி கருத்தரங்கை நடத்தின.

கருத்தரங்கில் அம்பாறை மாவட்ட பொது ஜன முன்னணி அமைப்பாளரும் மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினருமான மனோகரன்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

"கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளையின் சேவை இன்று முழு உலகத்தாலும் மதிக்கப்படுகிறது. 4ம் கொலனிச் சம்பவம், பாண்டிருப்பு மாணவன் சஞ்சீவன் கொலை வழக்கு என்பன பல முக்கிய திருப்பங்களை ஏற்படுத்தியதை மறக்க முடியாது".

அம்பாறை மாவட்டத்திலுள்ள 72தமிழ் கிராமங்களும், 53 முஸ்லிம் கிராமங்களும் மனித உரிமைகள் மீறப்படும் நிலையை எதிர்நோக்குகின்றன. யாராவது பிடிபட்டால் ஆணைக்குழுவிடம் தெரியப்படுத்துங்கள், காரைதீவு அதிரடிப்படை அலுவலகத்திற்குச் சென்றால் வீதியில் காத்திருக்கவேண்டிய நிலை. இன்று பச்சை சீருடைகாரர்கள் வாகனங்களை நமது விருப்பத்திற்கு மாறாக எடுத்துச்செல்கின்றனர். இதை யாரிடம் கூறுவது?

அம்பாறை மாவட்ட கல்முனை மனித உரிமைகள் காரியாலயம் சனி, ஞாயிறு தினங்களிலும் திறக்கப்பட வேண்டும்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனையில் மேலதிக அலுவலகம் அமைய வேண்டும்.

(காரைதீவு)

அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலைகளின் வளர்ச்சி கருதி, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகமொன்று கல்முனையில் அமையுவேண்டும் என்ற தீர்மானம் கல்முனை மாவட்ட தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்தி சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இஸ்ஸதீன் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் பேசிய அம்பாறை மாவட்ட பொது ஜன முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை, "இந்த அமைப்பினால் ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவுகள் அமுல்நடத்தப்படவில்லை, வீரச்சோலை வித்தியாலயத்திற்கு இன்னும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை ஒரேயொரு அதிபருடன் 165 மாணவ, மாணவிகள் காலத்தை கடத்தி வருகின்றனர் எனக்குறிப்பிட்டார்.

## கலந்துரையாடல்

(காரைதீவு)

கல்முனை வலயத்தில் உள்ள தமிழ் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடலொன்று, அம்பாறை மாவட்டப் பொது ஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ்.மனோகரன்பிள்ளை தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நடைமுறைப் படுத்தப்படவிருக்கும் புதிய கல்வி நிருவாகக் கட்டமைப்பில் தமிழ் பாடசாலைகளில் பங்குபற்றி இக்கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை தமிழ் பாடசாலைகளுக்கென மேலதிக கல்விப் பணிப்பாளரை நியமிக்க கோரிக்கை

(திருகோணமலை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்விமான்கள் மற்றும் சமூக நலவாதிகள் குழுவினர் கடந்த புதனன்று வடக்கு-கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் க.தியாகராஜா, மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி ஆகியோரை அமைச்ச செயலாளரின் அலுவலகத்தில் சந்தித்து இம்மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான தேவைகள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய குறைபாடுகள் தொடர்பாக எடுத்துக்கூறினர்.

அம்பாறை மாவட்ட தமிழ்பிரிவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை, விகாராதிபதி, ஜி. திலகசார தேரோ, நாலாம்கொலனி வாணி வித்தியாலய அதிபர் எம். சரவணமுத்து, கல்முனை சிங்கள் மகா வித்தியாலய அதிபர் டி.ஜீலின்ரன், சரஸ்வதி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கே.தர்மராஜா, பாண்டிருப்பு சுதந்திரக் கட்சி செயலாளர் எஸ். சதானந்தன், கல்முனை சிங்கள மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர் சுனில் விமலரட்ன, மேற்படி வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஜே.எஸ். குணசேகரா, கல்முனை சுதந்திரக் கட்சி பிரமுகர் ரீ.ரஞ்சன் பெரேரா ஆகியோர் கல்வி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளைப் பொறுத்தவரை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்யவேண்டும் என இக்குழுவினர் கோரிக்கை விடுத்தனர். இதேவேளை நாவிதன்வெளி அன்னமலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு சிறு விஞ்ஞான கூடம் ஒன்றின் தேவைபற்றி வலியுறுத்தப்பட்டது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அமைச்சின் செயலாளர் தியாகராஜா உறுதியளித்தார். இதேவேளை வேப்படித் தோட்ட வாணி வித்தியாலயத்திலிருந்து இரு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டமை தொடர்பாகவும் குழுவினர் விளக்கிக் கூறினர்.

குறிப்பாக சம்மாந்துறை கல்விப் பிரிவில் கடந்த மூன்று மாத காலத்திற்குள் மேற்கொள்ளக்கட்ட இடமாற்றங்களை இடைநிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். நியாமற்ற முறையிலான இடமாற்றங்கள் பற்றியும் இக்குழுவினர் எடுத்துரைத்தனர்.

மேலும் கஷ்டப்பிரதேசங்களில் பணியாற்றும் அதிபர்களின் அலவன்ஸ் தொகை சீரமைப்பு தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது. பெரிய நீலாவணை சரஸ்வதி வித்தியாலயத்திற்கான கட்டிடம் மற்றும் தளபாட பற்றாக்குறையினை நீக்குமாறும் கோரிக்கை விடப்பட்டது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்,
# நிமல் சிறிபால டி சில்வா
# கல்முனை பகுதிக்கு விஜயம்

(காரைதீவு)

வீடமைப்பு நகர அபிவிருத்தி பொது வசதிகள் அமைச்சர் நிமல் சிறபால டி சில்வா எதிர்வரும் 12ஆம் திகதி கல்முனை, சம்மாந்துறை பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளார்.


11ம் திகதி அம்பாறைக்கு விஜயம் செய்யும் அமைச்சர் அங்கு ரூபா 54கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன நீர்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார். அம்பாறை நகரை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் எச்.எம். வீரசிங்க எம்.பி யின் வேணடுகோளின் பேரில் அமைச்சர் விஜயம் செய்கிறார்.

12ம் திகதி காலை சம்மாந்துறைக்கு விஜயம் செய்யும் அமைச்சர் சம்மாந்துறையிலும் சொறிக்கல் முனையிலும் வீடமைப்புத்திட்டமொன்றை ஆரம்பித்து வைப்பார். அத்துடன் சொறிக்கல்முனை 15ம் கொலனி ஆகிய இடங்களில் வீடமைப்புத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டிவைக்கப்படும்.

அம்பாறை மாவட்டத் தமிழ் பிரதேச பொதுஜன முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளையின் அழைப்பின் பேரில் கல்முனைக்கு விஜயம் செய்யும் அமைச்சர் பெரியநீலாவனையிலும், குருந்தையடியிலும் வீடமைப்புத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பார்.

அமைச்சரை வரவேற்பதற்கென குழுக்கள்அமைக்கப்பட்டு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

10.02.1995 **வீரகேசரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநர் பொன்சேகாவை

# கல்முனை தமிழ் பிரதேச குறைகள் குறித்து சந்திப்பார்.

நமது நிருபர்

கல்முனைத் தொகுதியில் தமிழ் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட சில முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ்.மனோகரன்பிள்ளை, வட-கிழக்கு மாகாண ஆளுநர் காமினிபொன்சேகாவை கொழும்பில் சந்தித்து கூறவுள்ளார்.

மனோகரன்பிள்ளையுடன் இப்பகுதி முக்கிய பிரமுகர்கள், கல்முனைத் தொகுதி தமிழ் பிரதேச அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் பலரும் சந்திப்பில் கல்துகொள்வர். அவர்கள் உயர் அதிகாரிகள் பலரையும் சந்திக்கவுள்ளனர். இச்சந்திப்பின்போது தமிழர்களது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டமை, மையவாடிப் பிரச்சினை கல்முனை ஆதார வைத்தியசாலை சீர்கேடு, தமிழ் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, கல்முனை தபாலகம் தரம் குறைப்பு, கல்முனை தபால் ஊழியர் வேலை நீக்கம், போக்குவரத்து வசதிகளும் சுகாதார சீர்கேடும், குருந்தையடி கிராமம் வீடமைப்புத்திட்டமாக மாற்றப்படாமை, கல்முனை தமிழ் பிரதேசத்தில் திடீர் மரண விசாரண அதிகாரி நியமனம், தனியான இறப்பு பிறப்பு பதிவாளர் நியமனம், கல்முனை தமிழ்பிரிவு செயலகத்துக்கு முழுமையான அதிகாரங்கள் ஆகியனதொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவர்.

கல்முனையில் இப்பகுதி பிரமுகர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமையவும் இப்பகுதி பொது மக்களும் மற்றும் நலன் விரும்பிகளும் மனோகரன்பிள்ளையை அவரது இல்லத்தில் சந்தித்துக் கேட்டுக்கொண்டதற்கு அமைவாகவும் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களைப் பொறுத்தவரை, பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இழந்து நிறகும் இக்கால கட்டத்தில் தமிழர்கள் தம்குறைநிறைகளை எடுத்துச்செல்லவும், விசேடமாக அரசு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் இக்கால கட்டத்தில் தம்மாலான கடமைகளைச் செய்யவேண்டுமென கல்முனைத் தொகுதி தமிழ் பிரதேச அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் பலர் கேட்டுக்கொண்டதற் இணங்க இப்பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

குறைபாடுகள் ஒவ்வொன்றையும் பற்றி விரிவான அறிக்கைகள் பேச்சுவார்த்தையின் போது சமர்ப்பிக்கப்படுமெனவும் மனோகரன்பிள்ளை தெரிவித்தார்.

**29-03-96** வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம்

# புதிய நிருவாக சபை வேறு தினத்தில் தெரிவாகும்.

காரைதீவு,

கல்முனை ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் அண்மையில் கூடியபோது புதிய நிருவாகசபை உறுப்பினர்களை தெரிவு செய்யாமலே நிறைவுற்றது.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர்.கே.முருகானந்தன் தலைமையில் கூடிய கூட்டத்தில் பெருந்திரளான தமிழ், முஸ்லிம் அன்பர்கள் சமூகமளித்திருந்தனர்.

கூட்டத்தின்போது எழுந்த ஒருசில ஒழுங்கு பிரச்சினை காரணமாக புதிய நிருவாகத் தெரிவில் சிக்கல் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய ஒரு தினத்தில் இத்தெரிவை மேற்கொள்ளலாம் என தலைவர் அறிவித்தார்.

எனினும் அபிவிருத்தி சங்கத்தில் புதிய உறுப்பினர்கள் பலர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

கல்முனை ஆதாரவைத்தியசாலையில் நிலவும் பாரிய குறைபாடுகளையும் நில்வும் போட்டி பொறாமைகளையும் தலைவர் எடுத்துக்கூறினார்.

அம்பாறை மாவட்ட பொதுஜன முன்னணி அமைப்பாளர் எஸ்.மனோகரன்பிள்ளை பேசுகையில், இவ் வைத்தியசாலையில் 'எக்ஸ்ரே' வேலைசெய்தில்லை. சில டாக்டர்கள் இரவில் வருவதில்லை, இப்படியாக பல பிரச்சினைகளை எடுத்துக்கூறி வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய அவசியத்தையும் எடுத்துக்கூறினார்.

**வீரகேசரி 1995-08-10,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி ஊழியர் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

நமது நிருபர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதியில் சமுர்த்தி ஊழியர் நியமனங்களை வழங்குமாறு திகாமடுல்ல மாவட்ட (தமிழ்ப்பகுதி) பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார்.

திருக்கோயில், ஆலயடிவேம்பு, காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை ஆகிய ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுக்கும் சமுர்த்தி ஊழியர்களாக தமிழர்களையும் நியமிக்கவேண்டும். எனவும் அவர் சம்பந்தப்பட்ட அமைச்சு அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களுக்கான நியமனமும் முஸ்லிம்களுக்கான நியமனமும் வழங்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. இதற்கு முட்டுக்கட்டையாக உள்ளார்களா? எனக்கேள்வி எழுப்பியிருக்கும் மனோகரன்பிள்ளை, முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் தமிழர்களின் சமுர்த்தி நியமனப் பட்டியலைச் சமர்ப்பிப்பது முறைகேடான செயல் என்றும் இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் பிரதமருக்கும் அமைச்சருக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## கல்முனை தபாற்கந்தோர் தரத்தைக் குறைக்க முயற்சி

காரைதீவு நிருபர்.

கல்முனை பிரதான தபாற்கந்தோரின் தரத்தைக் குறைத்து இன்னுமொரு தபாலகத்தை தரமுயர்த்த எடுக்கும் நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

தபால் தந்தி தொலைத்தொடர்புகள் அமைச்சர் மங்கள் சமரவீராவுக்கு அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச பொதுஜன முன்னணி அமைப்பாளர் எஸ்.மனோகரன்பிள்ளை அனுப்பியுள்ள மகஜரொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது :-

"1872 இல் உப தபாலகமாக ஆரம்பிக்கப்பட்ட கல்முனை தபாலகம் 1923ல் தபாலகமாகவும் 1951இல் பெரிய தபாற்கந்தோராகவும் தரம் உயர்த்தப்பட்டது.

தற்போது இதன் தரத்தைக் குறைக்க முயற்சி எடுக்கப்படுகிறது. மேலும் அங்கு இரண்டு வருடகாலமாக பணியாற்றி வந்த 4 தமிழர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். இதனைக் கண்டிக்கிறோம்.

15.03.96 **வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் நியமனத்தில்

# தமிழ் பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்குக.

காரைதீவு நிருபர்.

"அம்பாறை மாவட்டத்திலுள்ள 79 தமிழ்ப் பாடசாலைகளில் 219 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. குறிப்பாக விஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கே இவ்வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை வேறுபாடசாலைகளில் அளவுக்கு அதிகமான ஆசிரியர்களும் உள்ளனர். எனவே விரைவில் வழங்கப்படவிருக்கும் ஆசிரியர் நியமனத்தில் தமிழ்ப்பாடசாலை வெற்றிடங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும்."

இவ்வாறு அம்பாறை மாவட்ட (தமிழ்) பொது ஜன முன்னணி அமைப்பாளர் எஸ்.மனோகரன்பிள்ளை பாண்டிருப்பு இந்து வித்தியாலயத்தில் நடைபெற்ற வாணி விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார். அதிபர் சண்முகம் சிவலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

அங்கு அவர் மேலும் பேசியதாவது :-

"அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பலவிதத்திலும் இன்று புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக தமிழ் பாடசாலைகளின் வளர்ச்சி திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகின்றது.

1989இலிருந்து தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றியவர்களை ஆசிரிய நியமனத்தில் சேர்க்கவேண்டும். அறநெறி பாடசாலை ஆசிரியர்களையும் இப்பகுதியில் இணைந்துக்கொள்ள வேண்டும்.

**09.10.1995 வீரகேசரி**

# கல்முனை வைத்தியசாலை குறித்து இன்று கலந்துரையாடல்

காரைதீவு நிருபர்.

கல்முனை ஆதாரவைத்தியசாலை தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று 14ஆம் திகதி பி.ப. 4.30 மணிக்கு கொழும்பில் நடைபெறுமென்று சுகாதார நெடுஞ்சாலை சமூகசேவைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அம்பாறை மாவட்ட பொதுஜன முன்னணி அமைப்பாளர் எஸ்.மனோகரன்பிள்ளைக்கு 'பாக்ஸ்' செய்தி அனுப்பியுள்ளார். எனினும் இன்று சேனைக்குடியிருப்பு - நற்பிட்டிமுனை சமாதானக்குழு அமைப்புக்கூட்டமும் கல்முனை (தமிழ்) பிரதேச செயலகப் பிரிப்பு தொடர்பான கூட்டமும் இருப்பதால் தம்மால் கலந்துகொள்ள முடியாது இருப்பதாக அமைப்பாளர் அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

இன்று 14ம் திகதி பி.ப 4.00 மணிக்கு கல்முனை வலய தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம் கல்முனை கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

**1995.08.14 வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேஸ்வர சம்பவம் தட்டிக்கழிக்க முடியாதது.

நமது நிருபர்.

கோணேஸ்வரர் ஆலய தீர்த்த உற்சவத்தின் போது நடந்த சம்பவமும், நகர முதல்வர் தாக்கப்பட்ட சம்பவமும் தட்டிக்கழிக்கப்பட முடியாத ஒன்று. இவற்றிற்கு பாரபட்சமற்ற நீதி விசாரணையும் பரிகார நடவடிக்கையும் உடன் தேவை" என அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச பொ.ஐ.ஐ.மு அமைப்பாளரும் கல்முனைத் தொகுதி இந்துக்கள் பேரவை செயலதிபருமான எஸ்.மனோகரன்பிள்ளை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
பாடல் பெற்ற தலமான திருக்கோணஸ்வர ஆலய தீர்த்த உற்சவ விழா ஆரம்பமாக இருந்த வேளையில் அப்பகுதி பாதுகாப்பு படையினர் சட்டத்தையும் நீதியையும் தம்கையில் எடுத்துக்கொண்டசம்பவத்தால் விளைந்த விளைவுகள் எமது நாட்டின் தமிழர்கள் மனதை வெகுவாக புண்படுத்தியிருக்கிறது. இவ்வாலயத்தையும் ஆலய பிரதேசத்தையும் புனித பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை இதுவரை அரசால் நிறைவேற்றிக் கொடுக்காததனையிட்டு மக்கள் மனது, ஏலவே புண்பட்டது போதாது என்ற நிலைக்கு இத ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துவிட்டது.

திருகோணமலையிலுள்ள நகரசபைத் தலைவர் எப்படி இருந்தாலும் பொது மக்கள் பிரதிநிதி, அப்பகுதி மக்களின் கனவான், மக்கள் சார்பில் மட்டுமல்ல தனது சார்பிலும் கோரிக்கைகள் விட முழு தகுதியும் உரிமையும் கொண்டவர்.

**23.04.96 வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை தமிழ் பிரதேச குறைபாடுகளை தீருங்கள் அமைச்சர், ஆளுநரிடம் வேண்டுகோள்.

நமது நிருபர்.

அம்பாறை மாவட்டத்தில் தமிழ்ப்பிரதேசங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம், வீட்டு வசதிகள், நியமனங்கள், போக்குவரத்துக்கள், நிதி ஒதுக்கீடுகள் ஆகியவற்றில் தமிழர்களுக்கும் தமிழ்ப் பிரதேசங்களுக்கும் இம்மாவட்டத்தில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது. இவற்றைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அம்பாறை மாவட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி தமிழ் பகுதி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை, வீடமைப்பு, நிருமாணத்துறை, பொது வசதிகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவை நேரில் சந்தித்து கேட்டுக்கொண்டார்.

மனோகரன்பிள்ளை அமைச்சரிடம் மேலும் தெரிவிக்கையில் அண்மையில் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட பகுதி அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழர் பிரதேசங்களும் தமிழர் கிராமங்களுமே உயிர்களையும் உடமைகளையும் இழந்தவர்களுள் பெரும்பான்மையானோர் தமிழர்களே.

பத்திரிகைகளில் அடிக்கடி தமிழ்ப் பகுதிகளை கவனிக்கின்றோம். உதவுகிறோம் என்று சிலர் அறிக்கைகளை விடுகிறார்களே தவிர உண்மையாக தமிழ்ப் பகுதிகளுக்கு அவர்கள் செய்த சேவைகளை வெளியிடுகிறார்களில்லை.

இம்மாவட்டத்தில் தற்போது சிங்களவர்கள், முஸ்லிம்கள், தமிழர்கள் 2:2:1 என்ற விகிதத்தில் வாழ்கிறார்கள். தொகுதிக்கு 100 வீடுகள் என்ற திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தின் தமிழ்ப்பகுதிகளுக்கென 5 தொகுதிகளில் சுமார் 400 வீடுகளாவது ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆனால் இதுவரை இது ஒதுக்கப்படவில்லை. என்று கூறியதுடன் குறைபாடுகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அமைச்சரிடம் கையளித்தார்.

இதேவேளை இம்மாவட்டத்தின் தமிழ் பகுதிகளின் சுகாதார சேவையின் சீர்கேடுகள் பற்றியும் இவர் வட-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகாவை சந்தித்து எடுத்துக்கூறினார்.

**19.01.96 வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நஷ்டஈடு

காரைதீவு,

அம்பாறை சேனைக்குடியிருப்பு கிராமத்தில் பாதிக்கப்பட்ட 17 குடும்பங்களுக்கு நஷ்டஈடு அண்மையில் வழங்கப்பட்டது.

வட-கிழக்கு மாகாண சபையின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்ட மனித உரிமைகள் குழுவின் உறுப்பினரும், அமைப்பாளருமான எஸ். மனோகரன்பிள்ள நஷ்டஈட்டினை மக்களுக்கு வழங்கினார். கல்முனை (தமிழ்) பிரதேச செயலாளர் எஸ். அமலநாதன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

நிருவாக உத்தியோகத்தர் எஸ். அழகரெத்தினம், கிராம சேவையாளர் எஸ். தம்பையா ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

**19.01.96 வீரகேசரி**

## சேனைக்குடியிருப்பில் பலவீடுகள் தீக்கிரை

காரைதீவு,

அம்பாறை மாவட்டத்திலுள்ள சேனைக்குடியிருப்பு கிராமத்தில் கடந்த 10 ஆம் திகதி இரண்டு ஊர்காவல்படை வீரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து அங்குள்ள பல வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இதனால் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு பகுதிகளிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் பாண்டிருப்பு, துறைநீலாவணை, 15ஆம் கொலனி ஆகிய அயல் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

தமிழ் மக்களது 4 வீடுகள் முற்றாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. ஏறத்தாழ 20 வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் இருக்கும் கும்பல் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்து இடத்திற்கு விரைந்த கல்முனை பிரதேச சபைத்தலைவர், பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை பாதிக்கப்பட்ட வீடுகளையும் உடமைகளையும் சுட்டிக்காட்டினார்.

**1995.08.14 வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி சபை எல்லை நிர்ணய விவகாரம்
## அம்பாறை மாவட்ட
## தமிழர்களின் கோரிக்கைகள் எடுத்துரைப்பு

காரைதீவு நிருபர்

உள்ளூராட்சி சபைகள் புதிதாக ஸ்தாபித்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் எல்லைகளை மீள நிர்ணயம் செய்யும் விவகாரம் குறித்து ஆராய்ந்து வரும் ஆணைக்குழு முன்னிலையில் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கமும் ஏனைய அமைப்புக்களும் தமது நிலைப்பாட்டை விளக்கியுள்ளன.

அண்மையில் பொதுநிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்ற அமர்வில் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம், கல்முனை தொகுதி இந்துக்கள் பேரவை, அகில இலங்கை அரச ஊழியர் சங்கம், சமூகநல அபிவிருத்தி அமைப்பு ஆகிய அமைப்புக்கள் கலந்து கொண்டன.

கோமாரியில் பிரதேச செயலகம் அமைத்தல், ஆலையடி வேம்பு பிரதேச எல்லை நிர்ணயம். காரைதீவு பிரதேச செயலக நிருவாகத்தின் கீழ் திராய்க்கேணி, அட்டப்பளம் ஆகிய தமிழ் கிராமங்களை சேர்த்தல், நாவிதன் வெளியில் இயங்கும் உபபிரதேச செயலகத்திற்கு நிரந்தர பிரதேச செயலக அந்தஸ்து வழங்குதல். கல்முனையில் தனியாக தமிழ் பிரதேச செயலகம் அமைத்தல் போன்ற முக்கிய விடயங்களை தமிழ் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

90 சதுர மைல் பரப்பைக் கொண்ட சம்மாந்துறை பிரதேச செயலகப்பகுதியில் 29 தமிழ் கிராம சேவகர் பிரிவுகளும், 40 வீத தமிழ் மக்களும் உள்ளனர். அங்கு நிருவாகம் சமமாக பங்கிடப்படவேண்டும் எனவும் குழுவினர் கேட்டுக் கொண்டனர்.

அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை தலைமையில் சென்றிருந்த குழுவில் எட்வேட் ஞானராசா, கல்யாண சுந்தரம், சிவஞானச் செல்வம், சர்வானந்தா, சுப்பிரமணியம், லோகநாதன், ஜோர்ஜ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

20.12.1996. **வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை மாவட்டத்தில் தமிழாசிரியர்கள் பற்றாக்குறையை உடன் நிவர்த்திக்க கோரிக்கை

அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக தமிழ் பிரதேசங்கள் உள்ள 5 தொகுதிகளிலும், தமிழ் மொழிமூலம் கற்பிக்கும் முஸ்லிம்பாடசாலைகள் 119, தமிழ் மொழி மூலம் கற்பிக்கும் தமிழ் பாடசாலைகள் 81, சிங்கள மொழி மூலம் கற்பிக்கும் சிங்கள பாடசாலைகள் 05 ஆக மொத்தம் 205 பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் திருக்கோவில் கோட்டம் தவிர்ந்த ஏனைய கோட்டங்களில் தமிழ் மொழிமூலம் கற்பிக்கும் முஸ்லிம் பாடசாலைகளும் இருக்கின்றன. இவற்றில் கடந்த ஏப்ரல் 1995 கணக்கெடுப்பின்படி கல்முனை, காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய 9 கோட்டங்களிலும் சுமார் 704 ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன.

கடந்த 1990 வன்செயலின் பின்னர் கல்வியில் மிகமிக மோசமாக பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் 85 தமிழ் பாடசாலைகளிலும் ஏறத்தாழ 500 வெற்றிடங்கள் தற்போதுள்ளன. அதுவும், விஞ்ஞான, கணித, ஆங்கில, சமய ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் கடந்த 1991 முதல் உள்ளன. இவைகள் உடனடியாக நிரப்பப்பட்டல் வேண்டும்.

மேற்குறித்த வெற்றிடங்களில் சுமார் 166 ஆசிரியர்கள் தொண்டர் அடிப்படையில் எதுவித வேதனமும் வழங்கப்படாமல் அவ்வப்பகுதி பெற்றோரின் அனுசரணையுடன் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்றனர். பின் தங்கிய இம்மாவட்டத்தில் ஆசிரியர் பதவிக்கு பொத்துவில் கோட்டத்தில் உயர்தர கற்பித்தலுக்கு மொ.த்தம் 165 பேருக்கு மேல் விண்ணப்பித்துள்ளனர். எனவே தமிழ் பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு இப்பகுதியிலிருந்து விண்ணப்பித்து பரீட்சைக்குத் தோற்றியோரை, தொண்டர் ஆசிரியர்களாகவும் இருப்பவர்களை உடனடியாக வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு நியமித்து உதவுமாறும் ஆசிரியர் நியமனம் வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடமாக அம்பாறை மாவட்டம் தமிழ் பகுதி பின்வரும் குறைபாடுகளை கொண்டுள்ளதை கருத்தில் கொள்ளவும் வேண்டுகிறேன்.

(அ) குழப்பம் காரணமாக பாடசாலைகள் நிரந்தரமாக இயங்க முடியாமல் இருந்தமை.

(ஆ) நீண்ட காலமாக ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தமை.

(இ) அசிரியர் பங்கீடுகள் நியமன வெற்றிடம் நிரப்பல் சரிவர செய்யப்படாமை.

(ஈ) தொண்டர் ஆசிரியர்களுக்கு அவ்வப்பகுதி நியமனங்கள் வழங்கப்படாமை, அவ்வாறு வழங்கப்பட்ட பின்பும் இடமாற்றம், பயிற்சி வழங்கல் ஆகியன சரியாக கவனிக்கப்படாமை.

(உ) புள்ளிவிபரங்களின் அடிப்படையில் உயர் அதிகாரிகள் சிறந்த தீர்வு அடிப்படையில் ஆசிரிய நியமனங்களைச் செய்யாமை.

இப்பகுதி தமிழ் பாடசாலைகள், சம்மாந்துறைக் கோட்டத்திலுள்ள தமிழ் பாடசாலைகள் சுற்று மதில் பாதுகாப்பு வேலிகள் இல்லாமல் இருக்கின்றன.

விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இற்றைவரை சில பாடசாலைகளில் இதுவரை கவனிக்கப்படவில்லை.

பாடவிதானப்படி பாடங்களை படிப்பிக்க போதிய, தரமான, தகுந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

**எஸ். மனோகரன்பிள்ளை**
(பொதுஜன ஐக்கிய முன்னனி அமைப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியநீலாவணை சென்ற எல்லை மீள் நிர்ணய குழுவினரின் முயற்சி தோல்வி

**-மட்டக்களப்பு நிருபர்-**

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட எல்லைகளை மீள் நிர்ணயம் செய்யும் விடயம்தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. சண்முகம் தலைமையில் சனிக்கிழமை பெரியநீலா வணைக்கு விஜயம் செய்த குழுவினர் தமது முயற்சிகளைக் கைவிட்டுத் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டதாக தெரிகின்றது.

கல்முனை பிரதேசசபை, கல்லாறு எல்லையில் ''கல்முனை பிரதேசசபை உங்களை வரவேற்கின்றது'' என்ற வாசகங்களைக் கொண்ட பெயர் பலகை ஒன்றை அண்மையில் நிறுவியதையடுத்து அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட எல்லைகள் தொடர்பான சர்ச்சை எழுந்தது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமொன்றில் பொன் செல்வராசா எம்.பி.யும் இச்சர்ச்சையைக் கிளப்பியிருந்தார். இதனையடுத்து எல்லைகளை மீளநிர்ணயம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் பெயர்பலகையும் அகற்றப்பட்டது.

பெரியநீலாவணை பகுதியை மட்டக்களப்பு மாவட்டத்தடன் சேர்ப்பதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பைக் காட்டி வருவதாகக் தெரிகின்றது. சனிக்கிழமை மேலதிக அரசாங்க அதிபர் சி. சண்முகம் தலைமையில் நில அளவைத் திணைக்கள அதிகாரிகளைக் கொண்ட குழு சென்ற போது இப்பகுதி மக்கள் பெருமளவில் திரண்டு நின்று தமது எதிர்புணர்வைக் காட்டினர். இம்மக்களுடன் அம்பாறை மாவட்ட தமிழப்பிரிவு பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளையும் காணப்பட்டார்.

இதனையடுத்து எல்லை மீள் நிர்ணயக்குழுவினர் தமது பணிகள் எதனையும் மேற்கொள்ளாது திரும்பினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை மாவட்ட தமிழ் பாடசாலைகள் புறக்கணிப்பு?

-மட்டக்களப்பு நிருபர்-

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் பாடசாலைகள் திட்டமிடப்பட்ட முறையில் புறக்கணிக்கப்பட்டு வருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் அம்பாறை மாவட்ட (தமிழ் பிரிவு) அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை தெரிவித்தார்.

புதிய கல்விச் சீரமைப்பின் கீழ் சம்மாந்துறையில் தனியான கல்வி வலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன் இவ்வலயத்தின் கீழ் 19 தமிழ் பாடசாலைகளும் கொண்டுவரப்பட்டுள்ளன. இங்கு உபகரணங்கள், தளபாடங்கள், நிதி என்பனவற்றைப் பங்கிடுவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக தெரியவருகிறது.

ஏற்கனவே இறக்காமம், மாணிக்கமடு பகுதியிலும் சவளக்கடையிலும் 2 தமிழ் பாடசாலைகள் முஸ்லிம் பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன.

மேற்படி நிலைமையை ஆராயும் முகமாக எஸ். மனோகரன்பிள்ளை தலைமையில் பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள் கலந்து கொண்ட மாநாடு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை பாண்டிருப்பு இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

இந்த மாநாட்டில் தமிழ் மாணவரின் கல்வி மேலும் பின்தள்ளப்படாமல் இருப்பதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

எதிர்வரும் 22 ஆம் திகிதி வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் இடம்பெயர்சேவை நடைபெறும் போது இவ்விடயம் தொடர்பாக ஆளுநரிடம் பிரஸ்தாபிப்பது எனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பிரதி நிதிகளுக்கு தனியான அழைப்பு இல்லை

(கல்முனை நிருபர்)

தமிழ் மக்கள் மாத்திரமே வாழும் ஆலையடி வேம்பு, திருக்கோவில் ஆகிய பிரதேச சபை பிரிவுகளும் தமிழர்களுக்கென ஒதுக்கப்பட்ட கல்முனை தமிழ்பிரிவு நாவிதன்வெளி காரைதீவு ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளும் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களைப் போன்று புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை பொறுத்தவரையில் கவனிக்கப்படவில்லை என துறைமுகங்கள், கப்பல்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்புக்கு அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளரும், கல்முனை தொகுதி இந்துப் பேரவை செயலாளரும், கல்முனை பிரதேச மனித உரிமைகள் குழு உறுப்பினருமான எஸ். மனோகரன்பிள்ளை கடித மூலம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நாளை 29ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிரமுகர்களை அமைச்சர் அஷ்ரப், சந்திக்கவிருப்பது தொடர்பாக மனோகரன்பிள்ளை நன்றி தெரிவித்திருப்பதுடன் கூட்டத்திற்கு தான் அழைக்கப்படாதது குறித்து கவலையும் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச அபிவிருத்தி மந்தகதியில் நடைபெறுவதாகச் சுட்டிக்காட்டிய மனோகரன்பிள்ளை இம்மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் என்ற அடிப்படையில் மக்களின் குறைகளை எடுத்துக்கூறுவதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும் என இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை மாவட்டத்தில் 2:2:1 என்ற விகிதத்தில் சிங்களவர்கள், முஸ்லிம்கள், தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 72 தமிழ் கிராமங்களும் இம் மாவட்டத்தில் இருக்கின்றன.

முஸ்லிம் பிரதேசங்களிலும், சிங்ளப் பிரதேசங்களிலும் புனர்வாழ்வு, புணரமைப்பு வேலைகளுக்கு இணைப்பாளர்களாக முஸ்லிம்களும்சிங்களவர்களும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து எந்த ஒரு தமிழ் மகனும் புணர்வாழ்வு, புணரமைப்பு இணைப்பாளராக நியமிக்கப்படவில்லை.

அமைச்சர் ஏற்பாடு செய்த கூட்டத்திற்கு தமிழ் பிரதிநிதியாக தாம் கலந்து கொள்ள முடியவில்லை தனியான அழைப்புக்கள் விடுக்கப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் தான் ஒரு பிரதிநிதியாக கலந்து தமிழ் மக்களின் புணர்வாழ்வு சம்பந்தமான பிரச்சினைகளை வலியுறுத்திக் கூறும் சந்தர்ப்பத்தில் ''அழையாத விருந்தாளி'' என தான் வெளியேற்றப்படலாம் என்ற தனது கவலையை அமைச்சர் அஷ்ரப்புக்கு மனோரன்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு முறையீடு செய்யவிருப்பதாக மனோரன்பிள்ளை தெரிவித்தார்.

(28-02.96 வீரசேகரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டிருப்பில் மக்கள் எழுச்சிக் கிராமம் திறப்பு

காரைதீவு

மக்களுக்கு பணியாற்றவே அரசாங்கம் இருக்கிறது. அதை உரிய முறையில் நாம் பயன்படுத்த வேண்டும். கட்சிரீதியில் நாம் சண்டையிட்டுக் கொண்டால் எந்தபலனும் கிடைக்கப்போவதில்லை என ஜன உதான மக்கள் எழுச்சி வீடமைப்புத்திட்டத்தின் 243 வது எழுச்சிக் கிராமத்தை கல்முனை தமிழ் பிரிவிலுள்ள பாண்டிருப்பில் திறந்து வைத்து உரையாற்றிய அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை கூறினார் .

முன்னதாக திறப்பு விழா படிமக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. சம்பிரதாயபூர்வமாக மூன்று வீடுகள் மக்களிடம் கையளிக்கப்பட்டன. அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் கே. பத்மநாதன், கல்முனை பதில் பிரதேச செயலாளர் எஸ். இராமகிருஷ்ணன், உப முகாமையாளர் ஜே. என். ஜெயச்சந்திரன் ஆகியோர் நாடாவெட்டி திறந்து வைத்து வீடுகளைக் கையளித்தனர் .

பின்னர் திறப்பு விழா வைபவமொன்று வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடை பெற்றது. அமைப்பாளர் மேலும் பேசுகையில் வெகு விரைவில் பெரியநீலாவணையிலும் அன்னமலையிலும் மக்கள் எழுச்சிக்கிராமங்கள் ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பேன். தேசிய வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் பத்மநாதனின் சேவையை பாராட்டுகிறேன். தமிழ் மக்களை ஓரணியில் இழுத்துச் செல்ல வேண்டிய காலகட்டம் இது என்று கூறினார்.

கல்முனை (தமிழ்) பதில் பிரதேச செயலாளர் எஸ். இராமக்கிருஷ்ணன் உரையாற்றுகையில்.

உலகம் சுருங்கி வருகிறது. மனிதனது தேவை கூடிவருகிறது. எனவே உழைப்பு அவசியம் மக்களின் பங்களிப்பு எங்குள்ளதோ அங்குதான் அபிவிருத்தியும் இருக்கும் என்றார். விழாவில் உப முகாமையாளர் ஏ. எம். இப்றாகிம், வேலைப் பரிசோதகர்களான ஏ. செல்வராஜா, ஏ. அஸீஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

09.04.1999 **வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறையில் 2 நூலகங்கள்

**-மட்டக்களப்பு நிருபர் -**

அம்பாறை மாவட்டத்திலுள்ள அன்னமலை 15ஆம் கொலணி, பெரியநீலாவணை ஆகிய கிராமங்களில் தேசிய இளைஞர் சேவைகளின் மன்றத்தின் இளைஞர் நூலகங்கள் 2 அன்னமலையில் திறந்து வைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை, இளைஞர் சேவை அலுவலர் ரஹ்மான் ஆகியோர் இதனை வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

05.04.99 **வீரகேசரி**

## இரு புதிய பாடசாலைகள்

**கல்முனை**

கல்முனைக்கல்வி மாவட்டத்தில் பாண்டிருப்பு, அன்புவழிபுரம் விஸ்ணு வித்தியாலயம், அன்னமலை ஸ்ரீசக்தி வித்தியாலயம் ஆகிய இரண்டு புதிய பாடசாலைகள் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்படும்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஜி.கிருஷ்ணமூர்த்தி. மாகான சபையின் கல்வி கலாச்சார, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கே. தியாகராஜா ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து இப்பாடசாலைகளை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அம்பாறை மாவட்ட (தமிழ் பிரதேசங்களின்) அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை எடுத்துக் கொண்ட முயற்சியை அடுத்து இப்பாடசாலைகள் திறப்பதற்கான உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாவட்ட தமிழ் பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்படவில்லை பொ.ஐ.மு அமைப்பாளர்

(காரைதீவு நிருவர்)

கல்முனை மாவட்ட தமிழ் பாடசாலைகளின் குறைபாடுகளை நீக்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவினால் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு தீர்மானமும் இதுவரை நிறைவேற்றி வைக்கப்படவில்லை. 10 மாதங்களாகியும் வீரச்சோலை தனி ஆசியர் பாடசாலைக்கு ஒரு ஆசியர் நியமிக்காதது ஒன்றே இதற்கு போதுமான சான்றாகும் என அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை குற்றம் சாட்டினார்.

கல்முனை கல்வி அலுவலகத்தில் நடைபெற்ற மேற்படி குழுக்கூட்டத்தில் இவர் உரையாற்றினார்.

வலயக்கல்வி பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு தமிழ் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கல்விப்பணிப்பாளர் எஸ். கணேசப்பிள்ளை உட்பட பல கல்வி அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

22.10.95 வீரகேசரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அம்பாறை மாவட்டத்தில்**
**கிராம அதிகாரிகள் வெற்றிடத்தை நிரப்ப**
**நடவடிக்கை எடுக்கவும்**

**(காரைதீவு நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் நிலவும் 45 கிராம அதிகாரிகளுக்கென வெற்றிடங்களை நிரப்ப உடன் நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்டத்துறை பாராளுமன்ற விவகார அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவுக்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் 45 கிராம அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. அதில் 5 பிரதேச செயலகப்பகுதிகளில் 28 தமிழ் கிராம அதிகாரிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

கடந்த 3 வருட காலமாக இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படாமலே இருந்து வருகிறது. ஏனைய மாகாணங்களில் ஏற்படும் வெற்றிடங்கள் உடன் நிரப்பப்பட்டு வருகையில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் தாமதிக்கப்படுகின்றது.

கிராம அதிகாரிகளுக்கான பரீட்சைக்கு தோற்றிய நியமனத்திற்காக காத்திருக்கும் தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கு இவ்வெற்றிடத்தை நிரப்பும் போது முன்னுரிமையளிக்க வேண்டும்.

கல்முனை பிரதேசத்தின் சில பகுதிகளில் அங்கு வாழும் மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் கிராமசேவகர் பிரிவு வகுக்கப்படவில்லை.

நேர்முகப்பரிச்சைக்கும் தோற்றிவிட்டு பல வருடங்களாக வேலைக்காக காத்திருப்போருக்கு இச்சந்தர்ப்பத்தை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன் எனவும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**23.10.1995 வீரகேசரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை ஆஸ்பத்திரியுடன் கல்முனைக்குடி ஆஸ்பத்திரியை இணைக்க வேண்டாம் பாண்டிருப்பில் தீர்மானம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**

''கல்முனை ஆதார வைத்தியசாலையுடன் கல்முனைக்குடி வைத்தியசாலையை இணைக்கும் சுற்றறிக்கை உடனடியாக வாபஸ் பெறப்பட்டு ரத்துச் செய்யப்படவேண்டுமெனவும், இவ்விணைப்பை மிக வன்மமையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிடும் தீர்மானமொன்று பாண்டிருப்பில் நிறைவேற்றப்பட்டது.

கல்முனைப் பிரதேச தமிழர் பொதுநல அமைப்புக்கள், கட்சிகள் மற்றும் முன்னணி பிரமுகர்கள் அடங்கிய அவசர கூட்டமொன்று பாண்டிருப்பு நூலகத்தில் அம்பாறை மாவட்டப் பொதுஜன முன்னணி (தமிழ்) அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை தலைமையில் கூட்டப்பட்டது. கல்முனை விஹாராதிபதி வண. கொக்கரல்ல திலகசார தேரோவும் கலந்து கொண்டார்.

சுகாதார அமைச்சினால் சிங்களத்தில் அனுப்பப்பட்ட இணைப்புப் பற்றிய சுற்று நிருபமும் அங்கு வாசிக்கப்பட்டது. சிங்களத்தில் அனுப்பப்பட்டதை தலைவர் மனோகரன்பிள்ளை கண்டித்துப் பேசினார். சுற்றுநிருபம் கூறியதாவது:

''20.01.93 முதல் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையுடன் கல்முனைக்குடி வைத்தியசாலை இணைக்கப்பட்டிருந்த சுற்றுநிருபம் வாபஸ் பெறப்பட்டு 22ம் திகதி முதல் உடனடியாக கல்முனை ஆதார வைத்தியசாலையுடன் கல்முனைக்குடி வைத்தியசாலையை இணைக்கிறோம்'' என்று 1852ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்முனை வைத்தியசாலை 1973ல் ஆதார வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டு சுமார் 6 லட்சம் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களுக்குச் சேவையாற்றி வருகிறது. இதனை 1991 இல் ஆரம்பமான கல்முனைக்குடி வைத்தியசாலையுடன் எப்படி இணைப்பது? இதில் என்ன நியாயம் உள்ளது? எனவே இவ்விணைப்பை தமிழர்களாகிய நாம் மிக ஆணித்தரமாக வன்மையாகக் கண்டிக்கிறோம். தீர்வு கிட்டாவிடில் பாரதூரமான போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அங்கு குறிப்பிடப்பட்டது.

23-10.1995 **வீரகேசரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை மாவட்டத்தில் தனித் தமிழ்க்கல்வி வலயம்

**காரைதீவு**

அம்பாரை மாவட்ட தமிழ் மாணவரின் கல்வி திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அம்பாறை மாவட்டத்தில் தனித்தமிழ் கல்வி வலயம் ஒன்று அவசியமென்பதை ஆணித்தரமாக கூறவிரும்புகிறேன் என அம்பாறை மாவட்ட (தமிழ்) பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை, கல்முனை உவெஸ்லி கல்லூரியின் க. பொ. த (சா/த) தின விழாவில் அதிதியாக கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

அவர் மேலும், பேசுகையில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளை கூற வேண்டிய ஒரே ஒரு பிரதிநிதி நான் கல்முனைவலயத்தில் நடக்கும் நிருவாகத்தையிட்டு கவலைப்படவேண்டியுள்ளது. ஒரு அதிகாரி உத்தரவு போட்டதும் மற்ற அதிகாரி அதனை ரத்துச் செய்கிறார்.

கல்முனையிலுள்ள 59 தமிழ் பாடசாலைகளைச் சேர்த்து தனி வலயமொன்றின் அவசியம் பற்றி அமைச்சர் அஷ்ரப்புடன் அண்மையில் பேசும் போது குறிப்பிட்டேன் அவரும் அதனை ஏற்றுக் கொண்டார்.

மூதூர் பாடசாலைகளுக்காக தனிவலயம் அமைத்து திருமலை மாவட்டத்தில் கொண்டுவர முடியும் என்றால் ஏன் கல்முனை வலயத்திலுள்ள 72 தமிழ் பாடசாலைகளை இணைத்து தனித்தமிழ் கல்வி வலயமொன்றை அமைக்கமுடியாது.

திருமலைக்கு ஒரு நியாயம்! கல்முனைக்கு ஒரு நியாயம்?

உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் நாட்டில் பாடசாலைகள் பல மூடப்படுவதை எதிர்க்கிறேன்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 29 தமிழ் பாடசாலைகள் மூடப்படுவதாக அறிகிறேன். இதனை வன்மையாக கண்டிக்கிறேன். தமிழரின் கல்வியை புதைகுழியில் இட சிலர் திருகுதாளம் போடுகிறார்கள்.

திட்டமிட்டு கல்முனை வலயத்தில் தமிழ் பாடசாலைகள் பெரும்பான்மையாக வராத வகையில் வலயபிரிப்பு முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தமிழர் கல்வி புறக்கணிக்கப்படுவதற்கு இது ஒரு உதாரணம்.

தமிழரின் சொத்து தற்போது கல்வி ஒன்றுதான் அதிலும் கைவைத்து சமுதாயத்தை சீரழிக்க எவரும் முயலக்கூடாது. இது வரலாற்றுப் பழியாகும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





1978ம் ஆண்டு ஐ.தே.க அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பு சட்டத்தை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழுவினர் அமரர் அமிர்தலிங்கத்தின் தலைமையில் இலங்கை பூராக மேற்கொள்ளப்பட்ட பாதையாத்திரையின் ஒரு கட்டமாக அன்னமலை நாவிதன்வெளி பிரதேசத்திற்கு வருகை தந்தபோது அன்றைய ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளரான எஸ். மனோகரன்பிள்ளையின் தலைமையில் நாவிதன்வெளிப் பிரதேசத்தில் பொதுக்கூட்டமொன்று நடைபெறுவதையும், பொதுக்கூட்டத்தின் போது அமரர். அமிர்தலிங்கம் உரையாற்றிக்கொண்டிருப்பதனையும், மக்கள் ஒரு பகுதியினரையும் இங்கு காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினால் பெரியநீலாவணை விஷ்ணு வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட சொற்பொழிவில், அமரர். திரு. எஸ். மனோகரன்பிள்ளை, மருதூர் ஏ.மஜீட், சகோதரர் விக்கி அவர்கள் உரையாற்றுவதையும், இந்நிகழ்ச்சியின் பிரதம விருந்தினர் செழியன் ஜே பேரின்பநாயகம் அழைத்து வரப்படுவதையும் இங்கு காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் மற்றொரு ஆதார ஆஸ்பத்திரி எதற்கு? அமைச்சர் பௌசியிடம் ஆட்சேபம்

(நமது நிருபர்)

கல்முனை ஆதார வைத்தியசாலை கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையாகவும் கல்முனைக்குடி வைத்தியசாலை - தெற்கு ஆதார வைத்தியசாலையாகவும் ஏப்ரல் முதல் செயல்படப்போகின்றது என வெளியான செய்தி தொடர்பாக அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளரும், கல்முனை பிரதேச மனித உரிமைகள் உறுப்பினரும், கல்முனைத் தொகுதி இந்துக்கள் பேரவை உறுப்பினருமான எஸ்.மனோகரன்பிள்ளை சுகாதார சமூக சேவைகள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி மற்றும் அமைச்சு மட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்து தனது ஆட்சேபனையை தெரிவிக்கிறார்.

கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு என அது எந்த எல்லைகளை மையமாக வைத்துப் பிரிக்கப்படும்?

கல்முனையில் வசிப்பவர்களும் இங்குள்ள ஆதார வைத்தியசாலையில் சேவைகள் பெறுகின்றவர்களும் மூன்று இனத்தையும் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில் வைத்திய சேவை பெறும் எந்த இன மக்களும் இதுவரை கஷ்டமடைந்தது கிடையாது.

கல்முனைப் பகுதியில் வாழும் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒற்றுமையுடனும், இன உணர்வுடனுமே வாழ்கிறார்களே தவிர தமக்கென்று ஒரு ஆதார வைத்தியசாலை தேவை என எந்த இன மக்களும் இதுவரை கேட்கவில்லை என மனோகரன்பிள்ளை விளக்கிக்கூறியுள்ளார்.

நீண்டகாலமாக இயங்கும் அம்பாறை மாவட்டத்தில் முதன்மை பெற்றதுமான ஒரேயொரு ஆதார வைத்தியசாலை பெயர் மாற்றப்படுவதற்கு வலுவான காரணங்கள் இன்று வரையில்லை.

**28.02.96 வீரகேசரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான பெயர் மாற்றுதல் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். இது பாரிய எதிர் விளைவுகளை இரு சமூகங்களிடையேயும் கொண்டு வரும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்த ஆஸ்பத்திரி கல்முனை ஆதார வைத்தியசாலையாக தொடர்ந்து இருக்கவேண்டும்.

சொற்ப காலத்திற்கு முன்னர் கல்முனை ஆதார வைத்தியசாலையின் மற்றும் ஒரு பிரிவு கல்முனைக் குடியில் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்ற தீர்மானத்தை அமைச்சர் பௌசி வழங்கியமை நேர்மையான ஒரு தீர்ப்பாகும்.

அமைச்சர் பௌசி கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு வருகை தந்தபோது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளையும் மறக்கக்கூடாது.

இன்றைய சூழ்நிலையில் கல்முனை தெற்கு ஆதார வைத்தியசாலை ஒன்று அவசியமற்றது. கல்முனைக்குடி வைத்தியசாலை, சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை, நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை, சம்மாந்துறை மாவட்ட வைத்தியசாலை என்பன முழுமையாக செயல்படுகின்றன எனவும் மனோகரன் பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

28.02.1996 **வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியநீலாவணை ஊடாக மாவட்ட எல்லை நிர்ணயம்

### பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் ஆட்சேபம்

(நமது நிருபர்)

பெரியநீலாவணைக் கிராமத்துக்கூடாக அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட எல்லைகளை வகுப்பதற்கு தன்னிச்சையாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன் பிள்ளை ஆட்சேபித்துள்ளார்.

பெரியநீலாவணை மக்கள், நில அளவைத்திணைக்கள அதிகாரிகள், காணி ஆணையாளர் பிரிவு உத்தியோகஸ்தர்கள், உள்ளூர் அதிகாரிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியோரைக்கொண்ட பொதுக்கூட்டமொன்றை கூட்டியே எல்லை நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்றும் இதனை விடுத்து மட்டக்களப்பு கச்சேரி நில ஆணையாளர் தன்னிச்சையாக இதனை செய்ய முன்வந்திருப்பது நியாமற்றது என்றும் அவர் தமது ஆட்சேபனையில் தெரிவித்துள்ளார்.

தமது ஆட்சேபனையின் பயனாக எதிர்வரும் 09ஆம் திகதி காலை 9.30 மணியளவில் பெரியநீலாவணை விஷ்ணு வித்தியாலயத்தில் பொதுக்கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாயும் மனோகரன்பிள்ளை தெரிவிக்கிறார்.

05.09.1995 **வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவிதன்வெளி ப.நோ.கூ.ச தனித்து இயங்க வேண்டும்.

காரைதீவு,

சம்மாந்துறைப் ப.நோ.கூ. சங்கம், நாவிதன்வெளி மத்திய ப.நோ.கூ. சங்கத்தை தனிமையில் இயங்கவிடவேண்டுமெனக் கோரி அம்பாறை மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அமைப்பாளர் எஸ். மனோகரன்பிள்ளை சம்மாந்துறை ப.நோ.கூ சங்க விசாரணைக்குழுவிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளார்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
சம்மாந்துறை ப.நோ.கூ. சங்கம், நாவிதன்வெளி மக்களுக்கு பராபட்சம் காட்டியதனை கடந்த சங்கத் தேர்தல் எடுத்துக்காட்டுகின்றது. நாவிதன்வெளி பிரதேசத்திலுள்ள ஒன்பது கிளைகளில் இருந்தும் எவரேனும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்படவில்லை.

மேலும் பொருள் பங்கீடு, நிருவாக அமைப்பு, கிளைக்குழு உறுப்பினர் தேர்வு ஆகியவை கடந்த பல வருடங்களாக சரியாக மேற்கொள்ளப்படவில்லை சம்மாந்துறையிலிருந்து 6. 1/2 மைல் தொலைவில் நாவிதன்வெளி ப.நோ.கூ சங்கம் உள்ளது.

கல்லோயா குடியேற்ற பிரதேசங்களும், அன்னமலை, நாவிதன்வெளி, சவளக்கடை, சொறிக்கல்முனை போன்ற கிராமங்களும் அம்பாறை கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரிவின் கீழிருந்தபோது நாவிதன்வெளி மத்திய ப.நோ.கூ. சங்கம் தனித்தே இயங்கிவந்தது. இது வீரக்கொடை ப.நோ.கூ. சங்கத்துடன் இணைந்தமைபற்றி 6/6/1975 இல் வெளியான வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நாவிதன்வெளி சங்கம் சம்மாந்துறையுடன் இணைந்ததென்று எந்த வர்த்தமானியிலோ அல்லது பொதுச்சபை தீர்மானமோ நிறைவேற்றப் படவில்லை. எனவே நாவிதன்வெளியை தனித்து இயங்கவிட வேண்டும்.

**31.08.95 வீரகேசரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிகள்

❋ இம்மலரினைப் படைப்பதற்கு தமது ஆக்கத்தினை உரிய காலத்தில் எனக்கு கையளித்தவர்களுக்கும்

❋ இம்மலரின் உருவாக்கத்திற்கு ஆலோசனை அளித்தவர்களுக்கும் இம்மலரின் தொகுப்பாக்கத்திற்கு உதவிய எனது ஆசான் ஆன பிரதேச செயலாளர் A.L.M. பளீல் அவர்களுக்கும்

❋ மேலும் அட்டைப் படங்களை வண்ணமாக வரைந்த ஓவியர் ருத்ரா ஆசிரியர் அவர்களுக்கும்

❋ கணனி எழுத்துக் கோர்ப்புடன் இம்மலரினை அழகாக பொழிவுறச் செய்த ஜன்னா கணனி நிறுவனத்தாருக்கும்

❋ இம்மலரின் அச்சாக்கத்திற்கு பெரிதும் உழைத்த கோல்டன் ஓப்செட் அச்சகத் தொழிலாளர்கள் அனைவருக்கும்.

❋ இப்புத்தக ஆக்கத்திற்கு உதவி செய்த நான் பெயர் குறிப்பிடத் தவறிய ஏனைய நபர்களுக்கும்

❋ குறித்த காலப் பகுதியில் ஆக்கம் தரத்தவறி பிரிசுரிக்க முடியாதவர்களுக்கும், இப்புத்தகத்தில் இடமளிக்கத் தவறிய ஏனைய அனைவருக்கும்,

எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோல்டன் ஓப்செற், கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org